

அன்பளிப்பு :
ஜைக்கு உகந்த
அன்னபூரணி
வண்ணப்படம்
கல்கி
KALKI 4.2.2001
ரூ. 5.00
காதல் தூறல்;
இசைச் சாரல்!

ஓர் உயிர்



உங்கள் கைகளில்...

சரியான சமயத்தில் இரத்தம் கிடைக்காத காரணத்தினால் ஒவ்வொரு வருடமும் நம் நாட்டில் பலர் உயிர் இழக்க நேரிடுகிறது. இந்த நிலையை மாற்ற உங்களால் மட்டுமே முடியும். 18 முதல் 60 வயதுக்குட்பட்ட ஆரோக்கியமான ஆண், பெண் அனைவரும் தாராளமாக இரத்த தானம் செய்யலாம். உங்கள் உடலில் இருந்து குறைந்த அளவு இரத்தமே எடுக்கப்படும். அதனால், உங்கள் உடலில் ஏற்படும் இரத்த இழப்பு இயற்கையாக ஈடு செய்யப்படும். இதனால் எந்தவித உடல் சோர்வோ, பக்கவிளைவுகளோ ஏற்படாது.

தயக்கமின்றி இரத்த தானம் செய்யுங்கள்.
தாமதமின்றி ஓர் உயிரைக் காப்பாற்றுங்கள்.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
ஹாட் லைன் : 8256882.
இலவசமாக தொடர்பு கொள்ள : 1097

Elegant



பூக்களே


இதழ்களின் அடுக்கடுக்கான வரிசையை
எந்த வார்த்தை,
வர்ணஜால அற்புதத்தை எந்த வார்த்தை,
வாசனையின் சுகத்தை எந்த வார்த்தை,
மென்மையில் மேவிய வண்ணத்தையும், ஆங்கே,
திண்ணமாய்ச் செறிந்த வாசத்தையும்
எந்த வார்த்தை காட்டும்?

இதழ்களின் மீது இசைந்திருக்க
வான்வெளியின் வெளிச்சக் கீற்றும்
பூமிவரும் பனித் துளி நீரும்
போட்டியிடும் அதிகாலைத் தவிப்பினை
எந்த வார்த்தை?

வார்த்தை என்பது வெறும் சப்தமல்ல – அனுபவம்.
வார்த்தை சிறைக்குள் சிறைவைக்க முடியாத,
பூக்களே, நீங்கள், வார்த்தையல்ல, அனுபவம்.

– கே.ஆர். முரளி

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



'கும்பமேளா'

மகர சங்கராந்தி. இருள் பிரியாத விடியற்காலை. ஜீரோ டிகிரிக்கும் குறைவான நடுங்கும் குளிர். கங்கை, யமுனை சரஸ்வதி புனித நதிகள் சங்கமிக்கும் 'பிரயாகை'. கோடிக்கணக்கான பக்தர்கள் உற்சாகத்துடன் எழுப்பும் 'ஹரஹர கங்கே' என்ற முழக்கம் வானைப் பிளக்கிறது.

உலகத்தின் மிகப் பிருமாண்டமான நிகழ்ச்சி என்ற பெயரைப் பெற்றுவிட்ட கும்பமேளா, சாதுக்களும், சந்நியாசிகளும், நாட்டு புறத்தாரும், நகரவாசிகளும், வெளிநாட்டினரும் ஒன்றாய்ச் சேர்ந்து புனித நீராடி மோட்சத்தைத் தேடிக் கொள்ளும் கும்பமேளா.

அசுரர்களும் தேவர்களும் பாற்கடலைக் கடைந்தபோது மேலே வந்த அமிர்தக் கலசத்திலிருந்து நான்கு துளிகள் நான்கு வெவ்வேறு இடங்களில் (அலகாபாத், ஹரித்வார், உஜ்ஜயின், நாஸிக்) விழுந்ததாய் ஐதீகம். நான்கு இடங்களும் கும்பமேளா ஸ்தலங்களாகிவிட்டன. குரு கும்ப ராசியிலும், சந்திரனும் சூரியனும் மேஷராசியிலும் பிரவேசிக்கும்போது இந்த இடங்களில் உள்ள நீரில் சில தெய்வீக அதிர்வுகள் புகுந்து அதைப் புனிதமாக்கி நீராடுபவர்களின் பாவங்களைக் கழுவிவிடும் சக்தியை அதற்குத் தந்துவிடுகின்றன என்பது நம்பிக்கை. இந்த நம்பிக்கைதான் இந்த மாபெரும் நிகழ்ச்சியின் அடிப்படை.

"இங்கு வந்து பார்க்கும்வரை இப்படி ஒரு பிரும்மாண்டத்தை எங்களால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை!" என்று ஆஸ்ட்ரியாவிலிருந்து வந்திருக்கும் கேத்தியும் கெமீலாவும் மலைக்க, "எங்கள் வாழ்க்கை லட்சியம் நிறைவேறிவிட்டது, எங்களுக்கு மோட்சம் நிச்சயம்!" என்று பூரித்துப் போய்ச் சொல்கிறார்கள் விஷ்வகல்யாண் இயக்கத்தைச் சேர்ந்த ஒரிஸ்ஸா பெண்மணிகள் இருவர்.

லட்சக் கணக்கானோர் நீராடி இருக்கும் கங்கைக் கரையும், கரையோரம் இருக்கும் நடைபாதைகளும் துப்புரவாக இருப்பது விந்தை





யிலும் விந்தை.

மேனி எல்லாம் திருநீறு அணிந்து, உடுக்கையை அடித்துக் கொண்டு திரிசூலம் ஏந்தியபடி ஊர்வலம் வரும் நிர்வாணச் சாமியார்கள் தான் மேளாவின் முக்கிய அம்சம். கரை நெடுக இருக்கும் இவர்களின் ஆசிரமங்

நேரடி ரிப்போர்ட்

களுக்கு வெளியே பக்தர்களின் கூட்டம் அலைமோதுகிறது.

ஆணிகளால் செய்யப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அருள் வழங்கும் ஆவதூத் பாபா. முப்பது வருடங்களாக வலது கையை கீழே இறக்காமல் பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டிருக்கும் அமர் பார்த்தி பாபா. ஒரு அடி உயரம் மட்டுமே இருந்து கொண்டு குட்டியூண்டு கைகளால் ஆசிர்வாதம் செய்யும் தேவேந்திரபுரி மகாராஜா (இவருக்குப் பத்திரிகையாளர்கள் என்றால் அலர்ஜியாம்) என்று எத்தனை விதமான சாதுக்கள்.

ரிஷிகேஷின் பரமார்த்த நிகேதனுக்கு வருகை தரும் அனைவருக்கும் அன்னதானம் உண்டு. 'இலவசம்' என்ற தோரணை இல்லாமல் விருந்தாளியை உபசரிக்கும் பக்குவத்தோடு சாப்பாடு பரிமாறப்படுகிறது. 'ரோட்டி ராம்', 'சப்ஜி ராம்' என்று எல்லா உணவு வகைகளும் ராமநாமத்தோடு தான் அழைக்கப்படுகின்றன.

ஹாலிவுட் நடிகைகளிலிருந்து சோனியா காந்தி வரை யாரையும் விட்டுவைக்காத கும்பமேளாவில் 'காக்ஸ் அண்டு கிங்ஸ்' நிறுவன கூடாரங்களுக்குத்தான் அதிக மவுசு. 'இந்துயிஸம்' பற்றிய உரைகள், ஆயுர்வேத முகாம்கள், யோகா வகுப்புகள் என்று கலக்கும் இவர்களை எதிர்த்து 'கும்பமேளாவை வியாபாரமாக்குபவர்களை வெளியேற்றுங்கள்!' என்று சாதுக்கள் மனு கொடுக்க, கோர்ட்டில் 'ஸ்டே ஆர்டர்' வாங்கிக் கொண்டு தொடர்ந்து இயங்குகிறது இந்த நிறுவனம்.

இருபதாயிரம் கழிப்பறைகள் கட்டப்பட்டிருந்தாலும் ஒரு அறையை உபயோகிக்க பதினைந்து நிமிடம் க்யூவில் நிற்க வேண்டிய அளவு எங்கு பார்த்தாலும் ஜனசமுத்திரம்.

கங்கையில் நீராடி ஆற்றங்கரையிலேயே தூங்கி எழுந்து, அங்கேயே சமைத்து - இன்டர்நெட் யுகத்தில் இப்படி ஒரு பக்திப் பரவசம்.

அலகாபாத்திலிருந்து நேரடி ரிப்போர்ட் :
ஷாந்தனு வத்ஸல்

தொகுப்பு :
கிருஷ்ணா சிதம்பரம்

கண்களைக் கட்டிக்கொண்டு...

சென்னை மாநகரில் பொதுவாகவே ஆட்டோ டிரைவர்களும், மாநகர பேருந்து ஓட்டுனர்களும் கண்ணை மூடிக் கொண்டு தான் ஓட்டுவார்கள் என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு. ஆனால், சமீபத்தில் ஒரு ஞாயிறு காலை, கேரளாவைச் சேர்ந்த மேஜிக் நிபுணர் பி.எம். மித்ரா, கண்களைக் கட்டிக்கொண்டு ஜீப் ஓட்டினார். போலீஸ் அனுமதியுடனும், அவர்களது ஒத்துழைப்புடனும் நடைபெற்றது இந்த சாதனை டிரைவிங். கலைவாணர் அரங்கிலிருந்து புறப்பட்டு, கண்ணைக் கட்டிக் கொண்டு மித்ரா ஓட்டிச் சென்ற ஜீப் கூடவே சென்ற நமது நிருபரின் நேரடி வர்ணனை:

இடம் கலைவாணர் அரங்கம்.

நேரம் காலை பத்து மணி ஐம்பது நிமிடம்.

மேஜிக் நிபுணர் மித்ரா தூக்குத் தண்டனைக் கைதிகளுக்கு, தண்டனை நிறைவேற்றப் படுகிற சமயத்தில் மாட்டுவதுபோல ஒரு கறுப்பு முகமூடியை வைத்துக் கொண்டிருக்கிறார். அதனை சில பேர் முகத்தில் அணிவித்து, ஏதாவது தெரிகிறதா எனக் கேட்க, ஒன்றும் தெரியவில்லை என்கிறார்கள்.

கறுப்புப் பட்டை ஒன்றை கண்ணைச் சுற்றி அணிந்துகொண்டு, அதன் மீது தலை முழுவதும் மறைக்கிறபடி, முகமூடி அணிவிக்கப்படுகிறது. கையைப் பிடித்து மித்ராவை ஜீப்புக்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள். ஜீப்பில் ஏறி உட்காரும் மித்ரா, தடவித் தடவி, சாவியைப் பொருத்தி, ஜீப்பை ஸ்டார்ட் செய்கிறார்.

ஜெயா டி.வி.யின் காமிராக் குழு, முன் செல்லும் காரின் டாப்பிலிருந்து படம் பிடிக்க, ஜீப் மெள்ள முன்னே நகர்கிறது. கலைவாணர் அரங்க நுழைவாயிலை அடைந்ததும், இடது புறம் திரும்புகிறார் மித்ரா. கூடவே ஸ்கூட்டரிலும், பைக்களிலும் பலர் தொடர்கிறார்கள். ஒரு போலீஸ் ஜீப், ஒரு போலீஸ் வேன் பின் தொடர்கின்றன.


சாலையின் ஒரு பக்கத்தில் மட்டும் மித்ராவின் ஜீப் மற்றும் இதர வாகனங்கள். மறுபாதியில் வழக்கமான டிராபிக். கடந்து செல்லும் இரண்டு சக்கர வாகன ஓட்டிகள் சற்றே வேகம் குறைத்து, 'அட! இது என்ன கலாட்டா?' என்று பார்க்கிறார்கள்.

பஸ்ஸினுள் இருக்கும் பயணிகளின் தலைகள் ஜன்னல்கள் வழியே வெளியே நீள்கின்றன. கண்களில் திகைப்பு! ஒரு சிலர், கண் கட்டி ஜீப் ஓட்டுகிறார் என்பதைக் கவனிக்காமலேயே, டி.வி. கேமராக்களைப் பார்த்துவிட்டு, 'ஏதோ ஷூட்டிங் நடக்குது' - என்கிறார்கள் அசுவாரசியமாக.

அனைத்து வாகனங்களும் பத்து கி.மீ வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கின்றன. வாலாஜாமுனைக்கு வந்து, மேலும் நகர்ந்து, சிறு பாலம் தாண்டி, பதினோரு மணிக்கு கடற்கரை சாலையை வந்தடைகிறது. போலீஸ்காரர்கள் சிக்னலை அணைத்துவிட்டு, போக்குவரத்தை நிறுத்த, எந்தவித பதற்றமும் இல்லாமல், ஜீப் வலது புறம் திரும்பி, பீச் ரோடில் பயணிக்கிறது.

ஒரு வீடியோக்காரர், ஸ்கூட்டர் ஒன்றின் பின் சீட்டில் உல்டாவாய் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவரைத் தொடர்ந்து ஜீப் வருவதை அப்படியே படம் பிடித்துக் கொண்டிருக்கிறார்.

இன்னொரு பைக்கில் பில்லியனில் உட்கார்ந்திருக்கும் ஒரு பத்திரிகை புகைப்படக்காரர், பத்தடி பைக்கில் முன்னே போய், இறங்கி ஒரு போட்டோ எடுத்துவிட்டு, மறுபடி







பைக்கில் ஏறிக் கொள்கிறார். அடுத்த பத்தடி போனதும் இன்னொரு போட்டா!

பீச் ரோடு பிளாட்பாரத்தில் நிற்பவர்கள் கிட்டே வந்து பார்க்கிறார்கள். நடப்பவர்கள் நின்று பார்க்கிறார்கள்.

"எதிர்ப்புறத்தில் போக்குவரத்து வழக்கம் போல் இருப்பது மட்டுமில்லை. ஜீப்பையும் மற்ற வாகனங்களையும் ஓவர்டேக் செய்து கொண்டு கார்களும், இரண்டு சக்கர வாகனங்களும் சென்று கொண்டிருக்கின்றன.

"நீங்க ரோட்டைப் பார்த்து ஒழுங்காய் ஓட்டுங்க" பின் சீட்டில் உள்ள மனைவி, பைக் ஓட்டும் கணவனை எச்சரிக்கிறார்!

மணி 11.10 காந்தி சிலையை அடைகிறார் மித்ரா. அங்கேயிருக்கும் டிராபிக்கான்ஸ்டபிள் மித்ராவை நெருங்கி, "சார்! நீங்கள் மெரினா பீச்சில், காந்தி சிலையை அடைந்திருக்கிறீர்கள். என் பெயர் ஜான் வள்ளுவன். எண் 12481 ஆல் தி பெஸ்ட்" என்கிறார். அங்குள்ள மணிக் கூண்டு சந்திப்பில், டிராபிக் நெரிசல். ஒரு சுற்று சுற்றி வந்து மறுபடி பயணம் தொடர்கிறது.

சீரான வேகம். மறுபடி பல்கலைக் கழக வளாகப் பகுதியில் உள்ள சிக்னலைத் தொடும் போது மணி 11.14. இடது பக்கத் திருப்பம். போகும்போது இருந்ததைவிட இப்போது சாலையின் இரு புறங்களிலும் நிறையக் கூட்டம்.

கலைவாணர் அரங்க வளாகத்தினுள் நுழைகிறபோது மணி 11.34. இஞ்ஜினை அணைத்துவிட்டு, இரு கரம் கூப்பி, இறைவனை வணங்குகிறார் மித்ரா.

கை கொடுத்து அவரை மேடைக்கு அழைத்துச் செல்கிறார்கள். விழா நிர்வாகி, கட்டவிழ்த்துவிட, சில விநாடிகள் கண்களை மூடிய படியே இருந்து, பின்னர் மெதுவாகக் கண் திறக்கிறார் மித்ரா.

மாலை மரியாதை... பாராட்டு... கைதட்டல்.

"மிஸ்டர் மிஸ்ரா! இது போல, கண் கட்டி ஜீப் ஓட்டியது உண்டா?"

"ஓ! எஸ்! ஏற்கெனவே கேரளாவில் ஒருமுறை செய்து காட்டியிருக்கிறேன்."

"கண்களை மூடிக்கொண்டு ஜீப் ஓட்டுவது எப்படி சாத்தியம்?"

"கான்ஸன்டிரேஷன், தியானம் இரண்டினாலும் சாத்தியம்!"

மித்ராவின் மேஜிக் நிகழ்ச்சி சுமார் ஒருமாத காலம் சென்னை கலைவாணர் அரங்கில் நடக்கிறது.

— கௌதம் ராம்

படங்கள்: ராஜன்



• வனிதா



தங்கப் பதக்கங்களைக் காணோம்!

சென்னை பல்கலைக் கழகத்தின் 143வது பட்டமளிப்பு விழாவில் ஒன்று... இரண்டு... மூன்று... என்று வரிசையாக ஏழு விருதுகள் பெற்றார் ஒரு மாணவி. பெயர் ஆர். வனிதா. தமிழிலக்கியத்தில், எம்.ஏ. பரீட்சையில் மாநிலத்திலேயே முதலாவதாக வந்ததற்காக அவருக்கு நான்கு தங்கப்பதக்கங்களும் மூன்று ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன. விருதுகளைப் பெற்றுக் கொண்டு, மேடையிலிருந்து கீழே இறங்கிய வனிதாவின் மீதுதான் மொத்த அரங்கத்தின் கவனமும் பதிந்திருந்தது.

அண்மையில், வனிதா, தமது பெற்றோருடன் சென்னைக்கு வந்திருந்தார். முதல்வர் கலைஞரைச் சந்தித்து ஆசி பெறுவதற்காக, அவரது இல்லத்துக்குச் சென்றிருந்தனர். வனிதாவைப் பாராட்டி, வாழ்த்து தெரிவித்த முதல்வர் "உனக்கு வழங்கப்பட்ட தங்கப் பதக்கங்களை எனக்குக் காட்டவில்லையே!" என்றார். வனிதா குடும்பத்தினர் பதில் எதுவும் சொல்லாமல் அமைதியாக நின்றிருக்க, "என்ன? உங்களுக்குத் தரப்பட்ட தங்கப் பதக்கங்கள் எங்கே? கொண்டு வரவில்லையா?" என்று கேட்க, மீண்டும் மௌனம்.

தாழ்ந்த குரலில், வனிதா சொன்னார்: "தங்கப் பதக்கங்கள் காணாமல் போய்விட்டன." இதைக் கேட்டபோது, முதல்வருக்கு இலேசான அதிர்ச்சி. "எப்படி தொலைந்தது? போலீசுக்குப் புகார் கொடுத்திருக்கிறீர்களா?" என்றார்.

இது பற்றி மேற்கொண்டு விசாரித்து, உரிய நடவடிக்கை எடுக்க உத்தர விட்டுள்ளார் முதல்வர்.

வனிதாவை நாம் சந்தித்துப் பேசினோம். "சென்னையில் நடந்த பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, பதக்கங்களும், ரொக்கப் பரிசு, சான்றிதழ்களும் பெற்றேன். மகிழ்வுடன் ஊர் திரும்பினேன். ஊரில், தோழிகளுடன் கோயிலுக்குச் சென்று, அர்ச்சனை செய்தேன். பதக்கங்கள் அடங்கிய என் கைப்பையை, தோழிகளின் கைப்பைகளுடன் வைத்துவிட்டு, கோயிலைச் சுற்றினேன். வந்து பார்த்தபோது, என் கைப்பை மட்டும் காணோம். பதறிப் போய் கோயில் முழுவதும் தேடினோம்; கிடைக்கவில்லை. போலீசில் புகார் கொடுத்திருக்கிறோம். இன்னும் கிடைக்கவில்லை. விரைவில் என் தங்கப் பதக்கங்கள் திரும்பக் கிடைக்கும் என நம்புகிறேன்" என்றார் வனிதா.

— **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **யோகா**



தமிழ் சினிமாவில் திரைப்படக் கல்லூரி மாணவர்கள் எப்போதுமே 'ட்ரெண்ட் செட்டர்'களாக இருந்திருக்கிறார்கள். பிரும்மாண்டத்துக்குப் பெரிய அளவில் பிள்ளையார் சுழி போட்டது ஆபாவாணன் அண்ட் கோதான். அதற்குப் பிறகும் நிறைய பேர் வந்து வென்றும் தோற்றும் இருக்கிறார்கள்.

இப்போது மீண்டும் முழுக்க முழுக்க திரைப்படக் கல்லூரி மாணவர்களால் ஆன இளைய அணி ஒன்று களத்தில் இறங்கியிருக்கிறது. ஆனால் இது சினிமா அல்ல; இசை ஆல்பம்!

'0% கிராமர்' என்ற முன்மொழிதலோடும், 'ஃபரீக் அவுட்' என்ற நாமகரணத்தோடும் இளைய இசை, காதல் வானில் தூறல் போட்டிருக்கிறது.

மாதத்திற்கு டஜன் கணக்கில் சினிமா பாடல் கேசட்டுகள் வெளியான காலம் போய், இப்போது எங்கு பார்த்தாலும் ஆல்பம் மயம். 'அய்யப்பனே சரணம்', 'அல்லா அருள்', 'இயேசுநாதா'என ஒரு பக்கம் பக்தி பரவசம் என்றால், காதில் வளையம், கிழிசல் ஜீன்ஸோடு பாப் இரைச்சல் இன்னொரு பக்கம். நடுவே நாட்டுப்புறப் பாடல்களும், தெம்மாங்கும் குறுக்கு ஏர் ஓட்டும். இதற்கிடையே புதுசாய் என்ன செய்துவிட முடியும் என்று பார்த்தால் நிஜமாகவே அசத்தி




யிருக்கிறார்கள்.

கவிதை போல சின்னக் கதை ஒன்றை ஏழு பாடல்களில் சொல்லிய விதம் காதல் டயரி ஒன்றைப் புரட்டிப் பார்த்த சுகத்தைத் தருகிறது.

மேல் நிலை வகுப்பு முடித்த இளைஞன் கல்லூரிக்கு வருகிறான். அந்தச் சூழ்நிலை அவனைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றுகிறது. இடையில், வயசின் வீரியத்தில், காதல் வயப்படுகிறான். புது அனுபவம் தந்த உல்லாசத்தில், பூமியில் கால் நழுவ, வானத்தில் பறக்கிறான்.

ஒரு கட்டத்தில், காதலி நகம் கடித்தபடியே வந்து, ''ஸாரி, வேறே இடம் பார்த்துக்க'' என்று





காதல் தூறல்; இசைச் சாரல்!

சொல்லிவிட, ஹைடெக் தேவதாஸாகி சோகத்தில் திரிகிறான், காலங்காலமான தமிழ்ப் பட கதாநாயகன் போல... இறுதியில் கல்லூரி பருவம் முடிந்து வெளியே வரும்போது, 'வாழ்க்கை, காதல் மட்டுமல்ல' என்று புரிந்துகொண்டவனாக, தெளிவோடு வெளியே வருகிறான்.

இதை, ஆடியோ மட்டுமன்றி, வீடியோ காட்சிகளாகவும் படமாக்கியிருக்கிறார்கள். இதில் பணியாற்றிய மாணவர்கள் ஒன்றிரண்டு பேரைத் தவிர எல்லோருக்கும் இதுதான் அறிமுகப்படலம் என்பது சிறப்பு!

மொத்த யூனிட்டுக்கும் கேப்டனாக இருந்து இயக்கம், ஒளிப்பதிவைக் கவனித்தவர் 'மல்லி' புகழ் மாதவ கிருஷ்ணா.

பாடல்களுக்கு இசையமைத்து ஆல்பத்தைத் தயாரித்திருப்பவர் கலை



• மாதவ கிருஷ்ணா

வாணன்.

''இதை வியாபாரமா நினைச்சு பண்ணலை. அப்படியிருந்தா ஹரிஹரன் மாதிரி, பிரபல பாடகர்களைக் கூப்பிட்டுப் பாட வெச்சிருப்போம். இதுல நடிச்சவங்க, பாடுனவங்க எல்லாருமே புதுசு. கவிஞர்கள்லே அறிவுமதி, காதல் மதி தவிர மத்தவங்க புதுசு. இதுல அறிவு மதி சாரை ஒரு பாட்டு கேட்டப்போ, அரை மணி நேரத்துல எழுதி, ஃபோன்லேயே சொன்னதை மறக்கவே முடியாது. தப்போ, சரியோ கிடைக்கிற பேரு எங்களையே சேரணும். அதுக்குத்தான் எல்லாரையும் புதுசா போட்டோம். எங்க குடும்பமும் எங்களை உற்சாகப்படுத்தி, உதவி செஞ்சது... அதனால ஃபேமிலியோட, காலேஜுக்குப் போயிட்டு வர்ற மாதிரி ஜாலியா வேலை செஞ்சோம்'' என்றார் கலைவாணன்.



• கலைவாணன்

வீடியோ ஆல்பத்தில், காதல் ஹீரோவாக ஆடிப்பாடி கலக்கியிருக்கிறார் அஜீத் மணியன். இவர் எடிட்டர் லெனினின் 'மதி' குறும்படத்திலும், 'கல்லறைப் பூக்கள்' குறும்படத்திலும் அலியாக நடித்து மாநில அரசு விருது வாங்கியவர். ''அலியாயிருந்த என்னை இப்பத்தான் ஆம்பளையா ஆக்கியிருக்காங்க'' என்று சிரிக்கிறார் அஜீத் மணியன்.

கதாநாயகி நிஷா இட்டாமன் நடிகை வாணி விஸ்வநாத்தின் தங்கை.

ஒரு பாடல் காட்சியைப் படமெடுக்க, கொடைக்கானல் போயிருந்தார்களாம். கால் படாத கன்னி பூமியாகத் தேடி, பத்து கிலோமீட்டர் நடந்தே போய், 'தான ஓடை' என்ற லொகேஷனைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். யூனிட் ஆட்கள் போய்ச் சேருவதற்குள் இரவு வந்துவிட்டது. எல்லாவற்றையும் தயார் செய்துவிட்டு, ஷூட்டிங் ஆரம்பிக்கும் சமயம், ஜெனரேட்டர் பழுதாகிவிடவே, மொத்த யூனிட்டும் டென்ஷனாகிவிட்டதாம். கையில் இருப்பதோ ஒரே ஒரு அரிக்கேன் விளக்கு! சட்டென்று ஒரு யோசனை தோன்றவே பழைய டயர்களைக் கொளுத்தி, அந்த வெளிச்சத்தில் ஷூட்டிங் நடந்ததாம். லைட்டிங் எஃபெக்ட்டும் பிரமாதமாக வந்திருக்கிறதாம்!

இந்த இசை ஆல்பத்துக்கு 'ஃப்ரீக் அவுட்' என்று தலைப்பு வைத்ததுடன் அதை விளக்கி ஒரு பாடலும் எழுதி இருக்கிறார் மாதவ கிருஷ்ணா.

"ஃப்ரீக் அவுட்'னா வினோதமான, எல்லை மீறின விஷயம். சிலர் எல்லோரும் நம்மளப் பார்க்கணுங் கிறதுக்காகவே



• 'பொட்டு'கூட ஃப்ரீக் அவுட்!

ஏதாவது வித்தியாசமா பண்ணுவாங்க... அதுதான் ஃப்ரீக் அவுட். இந்தப் பாட்டைக் கேளுங்க... ஃப்ரீக் அவுட்னா என்னன்னு புரியும்" என்றார்!

"ஃப்ரீக் அவுட் நீ பண்ணு மச்சி
ஃப்ரீக் அவுட் நீ பண்ணு மாமு
ஃப்ரீக் அவுட் நீ பண்ணினாதான்
உலகம் உன்னைப் பார்க்கும்.
ஆதாம் அன்று இலைகட்டி
அலைஞ்சான்
அதுவும் ஃப்ரீக் அவுட்தான்
பஸ்ஸில் தொங்கும் பசங்களின்
குறும்பு
அதுவும் ஃப்ரீக் அவுட்தான்.
வேதம் படிக்க வெள்ளையர் வந்தா
அதுவும் ஃப்ரீக் அவுட்தான்.
காலேஜ் பெண்கள் பேசும் தமிங்கிலிஷ்
அழகும் ஃப்ரீக் அவுட்தான்.

இப்படிப் போகுது பாட்டு!

0% இராமர் சரி! சக்சஸ் எத்தனை சத விகிதம் என்று தெரிய வேண்டாமா? சீக்கிரமா ஆல்பத்தை ரிலீஸ் பண்ணுங் கப்பா!

— அபிலை முருகன்

அட்டை, படங்கள்: ஐரிஸ்

தடையில்லாப் போக்குவரத்திற்கு தமிழகமெங்கும் பாலங்கள் !

சுதந்திரம் பெற்றதிலிருந்து 1996 வரை தமிழகத்தில் இருந்த

பாலங்களின் எண்ணிக்கையோ

195 மட்டுமே.

நான்கரை ஆண்டுகளில் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ள

பாலங்கள் **601.**

இதுவரை கட்டிமுடிக்கப்பட்ட

பாலங்கள் **325.**








பாலங்கள் அமைத்து காலத்தை மிச்சப்படுத்தும்
தமிழக அரசு !

கிச்சன் கிளினிக்

இனிப்பு வகைகள் செய்கிற போது, வாசனை சேர்ப்பதற்காகப் போடப்படுகிற ஒன்றுதான் ஏலக்காய் என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மை அதுவல்ல. ஏலக்காய் ஒரு ஈ.என்.டி. ஸ்பெஷலிஸ்ட். ஆமாம், காது, மூக்கு, தொண்டை சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு ஏலக்காய் நல்லதொரு நிவாரணி. இன்னும் சொல்லப்போனால், ஏலக்காய் நோய் வருமுன் காக்கும் அருமருந்து.

'அடிக்கடி தொண்டை கட்டிக் கொள்கிறது. பேசுவது சிரமமாக இருக்கிறது. சாப்பிடக்கூட கஷ்டப்படுகிறேன்' என்று இளைஞர் ஒருவர் என்னிடம் வந்திருந்தார். அவரைப் பார்த்த மாத்திரத்தில், அவரது தோற்றத்தைக் கொண்டே, அவரது தொண்டைக் கட்டுக்கு என்ன காரணம் என்பது



மூலிகை மணி
டாக்டர் க. வேங்கடேசன்

எனக்குப் புரிந்து விட்டது. முழுக்கை சட்டை, கழுத்தில் டை அணிந்திருந்த அவர் நிச்சயம் ஒரு விற்பனைப் பிரதிநிதிதான் என்று தெரிந்துவிட்டது. நிறைய பேரைப் பார்த்து விற்பனைப் பிரதிநிதி என்ற முறையில் பேசிப் பேசியே அவருக்குத் தொண்டை கட்டிவிட்டது. அவர் என்ன வேலை பார்க்கிறார் என்று நான் கேட்டபோது, அவர் சொன்ன பதிலும் அதுவே.

அவருக்கு நான் சிபாரிசு செய்தது ஏலக்காய், அதிமதுரம், சந்தனம், வால்மிளகு, நெல்லிக்காய் கொண்ட சூரணத்தைத்தான்.

நிறைய பேசுகிற ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும் இது பொருந்தும். கச்சேரிகள் செய்கிற கலைஞர்கள் குரலைப் பாதுகாத்துக் கொள்ள நாடுவது ஏலக்காயைத்தான்.

ஏலக்காய்ப் பொடியைப் பாலில் கலந்து சாப்பிட்டால் நல்லது. சிலர் ஏலக்காயை அப்படியே நசுக்கிப் பயன்படுத்துவார்கள். அதைவிட, ஏலக்காயை நசுக்கி, உள்ளே இருக்கிற 'ஏல அரிசி'யைத் தனியே எடுத்து மிக்ஸியில் பொடி செய்து அதனைப் பயன்படுத்தினால், முழுமையான பலன் கிடைக்கும்.

ஏல அரிசி எடுக்கப்பட்ட தோலைக்கூட வீணாக்காதீர்கள். அதை அப்படியே டீத் தூள் உள்ள பாட்டிலில் போட்டு வைத்து விடுங்கள். அந்தத் தூளைப்பயன்படுத்தி, தேநீர் போட்டால் ஏலக்காய் மணத்துடன் கமகமக்கும்.

ஏலக்காய்ப் பொடி சேர்த்த வெந்நீர் குடித்தால் தொண்டைக்கு நல்லது. நாவரட்சி, தாகம், இருமல்- இவை குணமாகும். பனியில் போய்விட்டு வந்தவுடன், சிலருக்குக் காதுக்குள் குத்தல் எடுக்கும். சளித் தொல்லை, இலேசான மூக்கடைப்பு, சைனஸ் தொல்லை என்று பலவிதமான பிரச்னைகளுக்கும் ஏலக்காய் மிகவும் நல்லது.

பண்டைய எகிப்தியர்கள், வாயில் ஏலக்காயை அடக்கி வைத்துக் கொள்வார்களாம். காரணம், அது பற்களைப் பளிச்சென்று வைத்திருக்கும் என்பதோடு "மௌத் ஃப்ரெஷ்னர்"போல வாசனையாக இருக்கும் என்பதுதான். நம் ஊரில்கூட இப்பழக்கம் உள்ளவர்களைப் பார்க்கலாம்.

பான்பராக்

அதிக அளவில் பிரயாணம் செய்பவர்களுக்கு உடம்பில் அதிகமாக சூடு இருக்கும். போதிய அளவு தண்ணீர் உட் கொள்ளாவிட்டால் நீர்க்கருக்கு வந்து அவதிப்பட நேரிடும். ஏலக்காயை இடித்து, தண்ணீரில் சேர்த்து, நன்கு சுடவைத்து, சாப்பிட்டால் பலன் கிடைக்கும்.

சாப்பிட்ட உணவு செரிக்காமல், வயிறு

கனமாக இருப்பது போன்ற உணர்வு இருந்தால், நேரே கிச்சனுக்குப் போங்கள். இரண்டு ஏலக்காய், கால் ஸ்பூன் சீரகம், கால் ஸ்பூன் சோம்பு மூன்றையும் ஒரு தம்ளர் தண்ணீரில் போட்டு, நன்கு காய்ச்சி, வடிகட்டி, அதனைக் குடித்துவிட்டால் போதும், வயிறு சகஜ நிலைக்கு வந்துவிடும்.

கண் பார்வைக்கு ஏலக்காய் நல்லது. சித்த வைத்தியத்தில், கண் சம்பந்தப்பட்ட கோளாறுகளுக்கு, நாங்கள் மகா ஏலாதி



குளிகை மருந்து கொடுப்போம். அதில் பல விதமான பொருட்களைப்

பழக்கமா?

பயன்படுத்துவது உண்டு என்றாலும் முக்கியமான இட்டம் ஏலக்காய்தான். அதனால்தான் அதற்கு மகா ஏலாதிக் குளிகை என்றே பெயர். ஏலக்காயில் உள்ள சில சத்துக்கள் கண்ணில் உள்ள நரம்புகளுக்கு வலுவூட்டுகின்றன.

குழந்தைகளுக்கு நாம் பொதுவாக தேநீர் கொடுக்கிற வழக்கமில்லை. சில குழந்தைகளுக்கு வெறும் பால் சாப்பிடப் பிடிக்காது. அதுபோன்ற தருணங்களில் ஏலக்காய் பொடியை எப்படிக் கொடுப்பது?

நூறு கிராம் பொட்டுக்கடலையைப் பொடி செய்து கொள்ளுங்கள்.

பத்து



டாக்டர் க. வே. அபிராமி

ஏலக்காயைத் தோல் நீக்கி, உள்ளே உள்ள ஏல அரிசியைப் பொடி செய்து கொள்ளுங்கள்.

இரண்டையும் நன்கு கலந்து, தேவையான அளவு சர்க்கரை சேர்த்துக் கொள்ளுங்கள்.

தினமும் ஐந்தாறு ஸ்பூன் அளவு இந்தப் பொட்டுக் கடலைப் பொடியைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வாருங்கள். நோய் நொடிக்கு மருந்து என்கிற மாதிரி இல்லாமல் பொதுவாகவே இதைக் கொடுக்கலாம்.


பேதி ஆகிறபோது, ஏலக்காய் தேநீர் குடித்தால் பேதி நிற்கும்.

கிராமப் புறங்களில் சிலந்திக் கடித்து விட்டால், அதன் விஷம் இறங்குவதற்கு இரண்டு மூன்று ஏலக்காய்களை வாயில் போட்டு மெல்லச் சொல்லுவார்கள்.

தலை கிறுகிறுப்பு, பித்தம், வாந்திக்கு ஏலக்காய் போட்டுக் கொள்ளலாம்.

பான்பராக், பழக்கம் கொண்ட ஒருவருக்கு, பரீட்சார்த்தமாக, பான் பராக்கிற்குப் பதிலாக ஏலக்காய் ஒன்றை வாயில் போட்டு மெல்லச் சொன்னேன். விரைவில் அவரது பான்பராக் பழக்கம் போய்விட்டது. சில நாட்களில் ஏலக்காய் போட்டுக் கொள்வதையும் நிறுத்திவிட்டார் தாமாகவே. எனவே, பான் பராக் அபிமானிகள், அந்த தீய பழக்கத்தை நிறுத்த விரும்பினால் உங்களுக்கு திருவாளர் ஏலக்காய் கைகொடுப்பார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சிலருக்கு ஏலக்காயை அப்படியே சாப்பிட்டால் வாயில் புண் வரும். அவர்கள் எச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும். ○





2001 பிப்ரவரி 4
விக்ரம தை 22
மலர் : 59
இதழ் : 27

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



தமிழக முன்னேற்றம் த.மா.கா கையில்!


மத்திய தொழில்துறை அமைச்சர் முரசொலி மாறன் தமிழக முதல்வருக்கு மிக நெருக்கமானவர்தான். இருந்தாலும் அவர் தமிழக அமைச்சர்களை அவசியமான தருணங்களில் கடுமையாக விமர்சிக்கத் தவறியதில்லை. இப்போது அந்த 'வசிஷ்டர்' வாயால் 'பிரும்மரிஷி' பட்டம் பெற்றிருக்கிறது தமிழகம்! ஆர்ப்பாட்டமில்லாமல் அமைதியாகத் தனது ஆற்றலை வளர்த்துக் கொண்டிருக்கும் தமிழகத்தை 'சைலன்ட் பவர்ஹவுஸ்' என்று பாராட்டியுள்ளார் மத்திய அமைச்சர். அவருடைய பாராட்டுக்கு ஆதாரமாக, தேசிய தொழில் வர்த்தக அமைப்பான FICCIயும் மாநில அமைப்பின் MCCIயும் நடத்திய மாநிலங்கள் முன்னேற்ற கருத்தரங்கில் பல அறிஞர்கள் பேசியிருக்கிறார்கள்.

ஹார்வார்ட் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கைகளின்படி சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பதில் பாரதத்திலேயே முதன்மை இடத்திலிருப்பது தமிழகம்தான்.

உற்பத்திப் பொருளை நூறு சதவிகிதம் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கையும் தமிழகத்தில்தான் அதிகம்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சியிலும் இம் மாநிலமே முந்தி நிற்கிறது. பயோ-டெக்னாலஜி எனப்படும் உயிரியல் தொழில் நுட்பத்திலும் முன்னணியிலிருக்கிறது. இவ்விரண்டு துறைகளும்தான் எதிர்காலத்தில் உலகையே மாற்றியமைக்கப் போகின்றன.

19,000 கோடி ரூபாய் பெறுமானமுள்ள தகவல் தொழில் நுட்பம் தமிழகத்திலிருந்து



கடந்த நிதியாண்டில் ஏற்றுமதியாகியிருக்கிறது.


'சமுதாய முன்னேற்றப் பணிகளிலும் தமிழகம் சளைத்துவிடவில்லை' என்கிறார் ஹார்வார்ட் பிரதிநிதியான பேராசிரியர் ஜெஃப்ரி சாக்ஸ்.

அமைச்சர் மட்டுமின்றி, அதிகார வட்டாரமும் தமிழகத்தின் முன்னேற்றத்தை அங்கீகரித்து வாழ்த்தியுள்ளது. திட்ட கமிஷன் உறுப்பினர் மான்டெக் சிங் அலுவாலியா, 'புதிய பொருளாதார கொள்கைக்கு மிகச் சிறப்பாக ஈடுகொடுத்து முன்னேறியுள்ள மாநிலம்' என்று தமிழகத்தைப் பாராட்டியுள்ளார். அக் கொள்கையானது மாநிலங்களுக்கு அளித்த கூடுதல் உரிமைகளையும் செயல்பாட்டுச் சுதந்தரங்களையும் தமிழகம் மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். தேசிய பொருளாதார வளர்ச்சி ஏழு சதவிகிதமிருக்கையில் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி ஒன்பது சதவிகிதத்தை எட்டுவது கஷ்டமல்ல என்கிறார். தேசிய பொருளாதார முன்னேற்றம் ஒன்பது சதவிகிதத்தைத் தொடுமானால் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அதைவிடக் கூடுதலாக இலக்கு நிர்ணயித்து அதை அடைவதும் சாத்தியமே என்கிறார்.

FICCI தலைவர் டாக்டர் அமித் மித்ரா, பொருளாதார நிபுணர்கள் டாக்டர் ராஜா செல்லையா, பேராசிரியர் எஸ். சுவாமிநாதன் ஆகியோர் தமிழகத்தின் தொழில் - பொருளாதார வளர்ச்சியைப் பாராட்டியிருக்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளின் முன்னேற்றம் பல அரசியல் இன்னல்களுக்கிடையே நிகழ்ந்துள்ளதை மெச்சியிருக்கிறார்கள்.

இத்தனை முன்னேற்றமும் ஒரு மாநிலத்தின் முன்னேற்றமாக மட்டும் முடிந்துபோய்விடாது; இந்தியாவின் முன்னேற்றத்துக்கே தமிழகத்தின் முன்னேற்றம் மிகவும் அவசியமானது என்று சுட்டிக் காட்டியிருக்கிறார் அலுவாலியா.

இந்த முன்னேற்றம் தொடர்வதும் மேம்படுவதும் வரவிருக்கும் தேர்தலின்



முடிவுகளைப் பொறுத்தே அமையும்.

'ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தைக் கடவுளால்கூட காப்பாற்ற முடியாது' என்று கடந்த தேர்தலின்போது ரஜினிகாந்த் கூறியதை தமிழ்நாடு இன்னும் மறந்துவிடவில்லை. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அந்த வாக்கியத்துக்கு வலு கூடியிருக்கிறதேயொழிய இம்மியும் குறையவில்லை!

அ.தி.மு.கவுடன் கூட்டணி கொள்ள முயற்சி மேற்கொள்ளும் கட்சிகளும் மூன்றாவது அணி அமைக்க த.மா.கா.வை அழைக்கும் துக்கடா கட்சிகளும் இந்தப் பேருண்மையை மறந்திருப்பதுதான் வருத்தத்துக்குரியது.

'நடப்பு தி.மு.க ஆட்சியில் குறைகள், லஞ்ச-ஊழல் இல்லையா?' என்று கேட்கலாம். சில நிர்வாகக் குறைபாடுகளும் ஆங்காங்கே லஞ்ச-ஊழல் குற்றச்சாட்டுகளும் இருக்கவே செய்கின்றன. எனினும் அவை கட்டுக்கடங்காத பிரும்மாண்ட குற்றங் குறைகள் அல்ல.

ஆனால், ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில் அ.தி.மு.கவினர் நடத்திய பகிரங்க சுரண்டலும் சூரையாடலும் வரலாறு காணாதவை. மீண்டும் அக்கட்சியிடத்தில் ஆட்சி அதிகாரத்தைத் தரவல்ல எந்த அரசியல் முடிவும் தமிழகத்தின் பின்னடைவுக்கே வழி செய்யும்.

மக்களை வழி நடத்த வேண்டிய அரசியல் உயர் நோக்குள்ள, மூப்பனார் போன்ற தலைவர்கள், அரசியல் எல்லைகளைக் கடந்து தமிழ்நாட்டின் நலன் கருதி சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துக் கொள்வதைத் தவிர்த்தால் மட்டும் போதாது. மூன்றாவது அணி அமைத்து வாக்குகளைச் சிதற அடிப்பதன் மூலம் அக்கட்சி வெற்றியடைய வாய்ப்பளித்து விடலாகாது. ○

"வாய்ப்புக் கிடைச்சா வீரப்பனைப்

பட்டரவாக்கம் கமாண்டோஸ் பயிற்சி முகாம்.

அய்யனார் சிலைக்குக் காக்கிச் சட்டை போட்டதுபோல வாட்டசாட்டமாய் நிற்கிறார் பயிற்சியாளர்.

"லோட்" என்று உத்தரவிடுகிறார்.

எதிரே அணிவகுத்து நிற்பவர்கள் 'மடமட' வென்று 'ரவுண்டு' களைத் துப்பாக்கிக்குள் நிறைத்துக் கொள் கிறார்கள்.



• எஸ்.பி. ராமநாதன்



• இன்ஸ்பெக்டர் பால்ராஜ்

"எய்ம்!" அடுத்த கட்டளை கிடைத்ததும் விறைப்பாக நின்று, கழுகுப் பார்வையுடன் குறி வைக்கிறார்கள்.

"ஃபயர்!"

அடுத்த விநாடி சீறிப் பாய்கின்றன குண்டுகள். சடசடவெனப் பொழிந்த துப்பாக்கி வேட்டுச் சப்தம் மைதானச் சுவர்களில் பட்டு பயங்கரமாய் எதிரொலிக்கிறது. அந்த இடமே கிடுகிடுத்துப் போகும்படி ஏ.கே. 47 ஏந்திச் சுட்டுத் தள்ளிக்கொண்டிருந்தது... அட! பெண்கள்...

எஸ்.... தமிழக காவல் துறையில் பெண்களுக்கும் அதிவேக, அதிரடிப் பயிற்சி எனப்படும் கமாண்டோ பயிற்சி தரப்படுகிறது.

நாங்கள் சென்றிருந்தபோது, மணிமுத்தாறு முகாமிலிருந்து 68 பெண்கள் கொண்ட பட்டாலியன் ஒன்று வந்திருந்தது. பத்து நாட்கள் முகாம் என்பதால் ஆரம்பப் பாடமாக துப்பாக்கி சுடும் பயிற்சியில் இருந்தார்கள்.

"எத்தகைய என்கௌன்டர் என்றாலும், ஆபத்தான நிலைமையானாலும், எதிர் கொள்ளத் தயாராக இருக்கும் வகையில், இங்கே, பெண் போலீஸுக்குப் பயிற்சி தரப்படுகிறது. மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் அவர்களை வலுவுள்ளவர்களாக ஆக்குவதுதான்



இப் பயிற்சியின் முக்கிய நோக்கம். பாயின்ட் 303 ரைபிள் துப்பாக்கிதான் அவர்களுடைய ஆயுதம் என்றாலும் 'ஏ.கே. 47' 'எஸ்.எல்.ஆர்', 'கார்பைன் மிஷின் கன்' போன்ற நவீன துப்பாக்கிகளைக் கையாளும் பயிற்சி தரப்படுகிறது. உடற்பயிற்சி, ஓட்டப் பயிற்சி தவிர விஞ்ச் செயிலிங், ராக்-கிளைம்பிங், கராத்தே, நீச்சல், நெருப்பு

வளையத்துக்குள் புகுந்து வருவது, உயரம் தாண்டுதல் என ஆண் கமாண்டோஸ்களுக்குத் தரப்படும் கடினப் பயிற்சிகளும் உண்டு" என்றார்



பிடிச்சுடுவோம்!"



• கல்யாணி

இன்ஸ்பெக்டர் பால்ராஜ்.

பட்ரவாக்கம் முகாமில் பத்து வருடங்களாகப் பயிற்சியாளராக இருக்கும் எஸ்.ஐ.பேச்சிமுத்து சில 'ஃபீல்டு டாக்டிக்ஸ்'களைச் செய்தே காட்டினார்.

"முதலைக்குத் தண்ணீரில் பலம். யானைக்குக் காட்டில் பலம். ஆனால் போலீஸ் எந்த இடத்துலேயும் பலசாலியா இருக்கணும். சூழ்நிலைக்கும், ஆபத்துக்கும் ஏற்ப 'டெக்னிக்' மாற்றத் தெரியணும்."

"பெரிய கலவரத்தை அடக்க வேண்டிய சூழ்நிலை வந்தா, ஹெல்மெட் போட்டுக்கிட்டு லட்டி, கேடயம் தாங்கி, கூட்டத்துக்குள்ள

நுழைஞ்சு 'மாப்(mob)-கன்ட்ரோல்' பண்ணத் தெரியணும். எதிரி ஒத்தையா எதிர்ல நின்னா, துப்பாக்கி எடுத்து குறி வைக்கறதுக்கெல்லாம் அவகாசமிருக்காது. உடனே துப்பாக்கி முனையில இருக்கிற கூரான பகுதியைக் கொண்டு காயப்படுத்தணும். கொள்ளைக் கூட்டம் தாக்கும்போது மிஷின்கன் உபயோகிக்கத் தெரியணும். வி.ஐ.பிக்குத் துணையா போகும்போது, பாதுகாப்புப் பணியில் கவனமா இருக்கணும். இதற்கெல்லாம் பெண் போலீசைத் தயார் செய்யறோம்" என்றார்.

"மகளிர் போலீசுக்குக் கமாண்டோ பயிற்சி தருகிறோம் என்று அழைத்தபோது ஏழே பெண்கள்தான் முன் வந்தார்கள். அவர்களிடம், எஸ்.பி. ராமநாதன், எழுச்சியூட்டும்படி ஐந்து நிமிடம் பேசினார். அதற்குப் பிறகு மற்றவர்களும் மனமுவந்து வந்து சேர்ந்தார்கள்" என்றார் கமாண்டோ பள்ளி கண்காணிப்பாளர் நம்பியார்.

எஸ்.பி. ராமநாதனோ மகளிர் கமாண்டோ பிரிவை ஆரம்பிப்பதற்கு முக்கிய காரணகர்த்தாவாயிருந்தவர் ஏ.டி.ஜி.பி அலெக்ஸாண்டர்தான் என்றார்.

அடையாறு போட்கிளப் சாலையில் உள்ள தமிழ்நாடு கமாண்டோ பயிற்சி பள்ளி வளாகத்தில் எஸ்.பி. ராமநாதனைச் சந்திக்கப் போனால் தீர விசாரித்து, 'பத்திரிகை' என்று உறுதி செய்துகொண்ட பிறகே உள்ளே அனுமதிக்கிறார்கள்.

"பட்டரவாக்கம் முகாமுக்குப் போய்ப் பாருங்கள்" என்று சொல்லி நம்மை அங்கே அனுப்பி வைத்தார் எஸ்.பி. ராமநாதன்.

பட்டரவாக்கத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பெண்களிடம் பேச்சுக்





கொடுத்தோம்.

ரங்கநாயகி, போலீஸ் கான்ஸ்டபிள். கல்யாணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளவர்.

"போலீஸ் வேலைக்கு வந்துவிட்ட பிறகு, குடும்பம், குழந்தைங்க நினைப்பெல்லாம் மறந்துடும்" என்றார்.

"ஐந்து கிலோவுக்கும் அதிக எடையுள்ள துப்பாக்கியைத் தூக்கி, மாகஸின் பொருத்தி பொசிஷனில் வைத்து, குறி பார்த்து... இதெல்லாம் சிரமமாயில்லையா?"

"இல்லை... த்ரில்லிங்காதான் இருக்கு" - பளிச்சென்று பதில் வருகிறது

மங்கையிடமிருந்து.

பள்ளியில் படிக்கும்போதே, விளையாட்டு, என்.சி.சி என்று ஆர்வம் காட்டிய இல்லின், கிரண்பேடியின் சாகஸக் கதைகளைக் கேட்டுப் போலீசில் சேர்ந்தாராம்.

வள்ளியூர்க்காரரான கல்யாணி, படு துடிப்பு!





"என்னோட சின்ன வயசுக் கனவே போலீஸ் ஆகணுங்கிறதுதான். என்னோட தாத்தா, அப்பா எல்லாருமே போலீஸ்காரங்கதான். வீட்டுல, அவங்க டிரஸ், தொப்பி எல்லாம் போட்டுக்கிட்டு திருடனைப் பிடிக்கிற விளையாட்டுதான் ஆடுவேன். ப்ளஸ் டூ முடிச்சவுடனேயே போலீஸ்ல சேர்ந்துட்டேன்" என்கிறார் கல்யாணி.

"அடி, உதை, ரவுடி கும்பல், என்கவுண்டர் என்றெல்லாம் வாழ்க்கை இருந்தா பயமா இருக்காதா?"

"ஆபத்து எங்கதான் இல்லை? துணிஞ்சுதானே ஃபூனிபார்ம் போடறோம்" என்று தெளிவாய்ச் சொல்கிறார் சரோஜா.

"அப்போ... வீரப்பனை..." கேள்வியை முடிக்கக் கூட இல்லை.

"வாய்ப்புக் கிடைச்சா, கண்டிப்பா பிடிச்சுடுவோம்" என்கின்றனர் கோரஸாக.

— அனு

படங்கள்: ஸ்ரீஹரி


உங்கள் பூஜை அறையை அலங்கரிக்க...

பிப்ரவரி மாதம் 5ம் தேதி, இராமேஸ்வரம், ஸ்ரீ இராமநாத சுவாமி திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. அதை சிறப்பிக்கும் வகையில் அழகிய தெய்வீக வண்ணப்படம் இந்த வார 'கல்கி'யுடன் இணைக்கப்பட்டுள்ளது.

காசி யாத்திரை செல்பவர்கள், கங்கை நீரைக் கொண்டு வந்து, ராமேஸ்வரம் ஸ்ரீ இராம நாதருக்கு அபிஷேகம் செய்து, யாத்திரையைப் பூர்த்தி செய்வது மரபு!

இந்த ஐதிகத்தை மனத்தில் கொண்டு இந்த வாரம், காசி ஸ்ரீ அன்னபூரணி வண்ணப் படத்தை இணைத்து வழங்கியிருக்கிறோம். அடுத்த வாரம் ஸ்ரீ இராம நாத சுவாமியின் எழில் படம் வழங்கப்படும்.

'கல்கி'யுடன் அளிக்கப்படும் தெய்வீக வண்ணப் படங்கள் உங்களுக்குச் சகல நன்மைகளையும் தருமாக!



— ஆசிரியர்

பா.ஜ.க. 60 தொகுதிகளில் ஜெயிக்குமாமே?



• நாளைய...



• ...இடைவெளி...



• ...என்ன?

● டி.எஸ்.டி. ராயன், மயிலாடுதுறை. ❑

? அன்று நரசிம்ம ராவுடன் 'ஜெனரேஷன் கேப்', இன்று வீரமணியுடன் 'கம்யூனிகேஷன் கேப்' என்று ஜெயலலிதா கூறுகிறாரே – நாளைக்கு என்ன கேப்...?

! மக்களுக்கும் அவருக்குமிடையே மிக பிரும்மாண்டமான கேப். இதற்கு, பிற கட்சியினருக்கும் அ.தி.மு.கவுக்கும் இடையே அரசியல் கேப் முதலில் ஏற்பட வேண்டும்.

● என். தாமோதரன், சேலம் – 7.

? உங்கள் வீட்டில் எப்படி...? பானை பொங்கலா? குக்கர் பொங்கலா? அல்லது வெறும் டீ.வி. பொங்கலா?

! "ஒழுக்கத்தில் சிறந்தது பசுவா? எருமையா பட்டிமன்றம் பார்த்தீர்களா?"

"ம்ஹூம்!"

"ஜென்டில்மேன் படம்...?"

"ம்ஹூம்!"

"ஸ்நேகா பேட்டி...?"

"ம்ஹூம்!"

"புதுப்பாட்டு...?"

"ம்ஹூம்!"

"தினா சிறப்பு நிகழ்ச்சி...?"

"ம்ஹூம்!"

"பொங்கலுக்கு என்னதான் பண்ணீங்க?"

– இந்த உரையாடல் என் காலனிவாசிக்கும் எனக்கும்! டீ.வி. பொங்கலைக் கொண்டாடாத சிறுபான்மைக் கட்சியில் அடியேனும் உறுப்பினர்!

● ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபிசெட்டிபாளையம்.

? தலைவனுக்குப் பெருமை சேர்த்த அரசியல்வாதியாக எந்த லீடரைச் சொல்லலாம்...?

! லாலுவின் மைத்துனரான பீஹார் எம்.எல்.ஏ. (ராப்ரியின் தம்பி). அரசுத் துறைச் செயலரை அவர் அறையில் வைத்துக் கதவைச் சாத்தி ஒரு வழி பண்ணிவிட்ட அதிர்ச்சியில் அதிகாரி வாயடைத்துப் போய் பேச மறுக்கிறார்.

● அஸ்வதிமணாளன், சென்னை – 91.

? அன்றும் சரி, இன்றும் சரி, எத்தனையோ கவிஞர் பெருமக்கள் சினிமா பாடல்கள் எழுதி அவை பிரபலமாயின; ஆனால் வைரமுத்துவுக்குக் கிடைக்கும் பப்ளிசிடியும் பாப்புலாரிடியும் பிறருக்குக் கிடைப்பதில்லையே?

! ஆனந்த விகடனில் அவர் எழுதி வரும் 'கள்ளிக்காட்டு இதிகாசம்' படித்து வந்தால் இந்தக் கேள்வி கேட்டிருக்க மாட்டீர்கள்! உரைநடைதான். ஆனால் கவிதையுணர்வு ஒவ்வொரு சொல்லிலும் கொப்பளிக்கிறது. அப்படிப்பட்ட கவிஞருக்கு அவருடைய படைப்புகளே பப்ளிசிடி, பாப்புலாரிடி. மற்ற மேடைகள் ஜிகினாதான்!

● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு.

? சோனியா எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்படுகிறோம் என்றார்கள். பிறகு ஏன் இளங்கோவன் நீடிப்பதை எதிர்க்கிறார்கள்? ரகளை செய்கிறார்கள்?

! ரகளை எங்கே செய்கிறார்கள்? சோனியா முடிவுக்குக் கட்டுப்படுவதாகத்தான் சொல்கிறார்கள். ஆனால், 'நாங்கள் இளங்கோவனுடன் ஒத்துழைக்க முடியாது; இளங்கோவன் எங்களுடன் ஒத்துழைக்கட்டும்' என்கிறார்கள் அவ்வளவுதான்!

● கே.கே. வெங்கடேசன், வேலூர்.

? இந்தியா மீது போர் தொடுக்காத குறையாக தீவிரவாதிகளைக் கொண்டு விமானம் கடத்துவது, குண்டு வைப்பது,

நீங்கள் கேட்டவை – தராசு



• பெருமையுற்றார்!



• ப, ப, பா!



• அவசரக் கனவு!



• இரட்டைத் தகுதி!

கள்ள நோட்டுக்களைப் புழக்கத்தில் விடுவது... என்றெல்லாம் செய்கிற பாகிஸ்தானை நேரடியாகத் தட்டிக் கேட்க முடியாதா...?

! இந்தியாவுடன் நேரடியாக மோதினால் பருப்பு வேகாது என்று தெரிந்து வைத்துக் கொண்டு, இப்படிப்பட்ட மறைமுக முயற்சிகளில் இறங்கும் பாகிஸ்தானை நேரடியாக எப்படி தட்டிக் கேட்பதாம்!

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

? வரும் சட்டமன்றத் தேர்தலில் அறுபது தொகுதிகளில் பாரதிய ஜனதா வெற்றி பெறும் என்று இல. கணேசன் கூறியிருக்கிறாரே?

! முதலில் அறுபது தொகுதிகள் இவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும். அப்படி ஒதுக்கப்பட்டாலும் இதர கூட்டணி கட்சிகளின் ஒத்துழைப்பு பெற வேணும். அப்படி பெற்றாலும் இவர்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். அப்படி வாக்களித்தாலும் அது மற்ற வேட்பாளர்கள் பெறுவதை விட அதிகமாக இருக்க வேண்டும். ம்ம்... போக வேண்டிய தூரம் இன்னும் நிறைய இருக்கு; அதற்குள் அல்நாஷெயர் கனவு எதற்கு...?

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? நம்முடைய கல்வி பயிற்று முறையில் மாற்றம் வேண்டுமா?

! கல்வி என்பது ஞாபக சக்தியை அடிப்படையாகக் கொள்ளாமல் சிந்தனை சக்தியை வளர்ப்பதாக அமைந்தால் போதும். அப்படியென்றால் இப்போதுள்ள கல்வி முறையைக் குப்பையிலே போடு; புதிய மேன்மையான கல்வித் திட்டத்தை அமல்படுத்து என்று அர்த்தம்.

● எஸ். அப்துல்லா அஹமது, நாகூர்.

? சிறந்த சேவை செய்யும் மருத்துவர்களுக்கும் இனி விருது உண்டு என்று முதல்வர் அறிவித்துள்ளாரே?

! 'அதிகமாக விருது வாங்கியவர்' 'விருதே வாங்காதவர்' – இந்த இரண்டு பிரிவினருக்குத் தான் இன்னும் விருது வழங்கப்படவில்லை!

● டி.எஸ். சேகர், தென்கடப்பந்தாங்கல். *

? லஞ்சத்தை உருவாக்கியவர்கள் அதிகாரிகளா? அரசியல்வாதிகளா?

! ஆட்சியில் இருப்போர் கடைபிடித்த, கடைபிடித்து வருகிற கொள்கைகள். ஒரு சின்ன உதாரணம் பாருங்கள்... ஒருவர் மரணம் அடைந்தால் டாக்டர் சர்டிஃபிகேட் போதாதா? அதைக் காட்டி மயானத்தில் எரியூட்ட வேண்டும்; பிறகு மயானத்தில் சான்றிதழ் பெற்று கார்ப்பரேஷன் அலுவலகத்துக்கு வந்து மயானச் சான்றிதழைக் காட்டி, மரணச் சான்றிதழைப் பெற வேண்டும். இப்படி ஒரு வேலைக்கு மூன்று வேலை என்று சம்பளத்துக்கு ஆள் போட்டு, காகிதக் குவியல்களை உருவாக்கும் போது, லஞ்ச – ஊழலும் பெருகத்தான் செய்யும்.

● ஞான. சிவகுமார், திருப்போரூர்.

? ஆட்சியில் பங்கு விஷயத்தில் மூப்பனாரும் ஜெயலலிதாவும் கருத்து வேறுபட்டிருந்தாலும் முடிவில் ஜெ வழிக்கு மூப்பனார் போவாரா? அல்லது மூப்பனார் வழிக்கு ஜெ வருவாரா...?

! இருவரில் யார் வழிக்கு யார் போனாலும் தமிழகம் நாச வழிக்கே போகும்!

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? கல்கியில் எம்.எஸ். உதயமூர்த்தி எழுதிய 'என்னைச் செதுக்கிய எண்ணங்கள்' நூலுக்குத் தமிழக அரசு பரிசு கிடைத்துள்ளது பற்றி..?

! ஆச்சர்யமில்லை. நூலாசிரியரும் சரி, நூலும் சரி. பரிசுக்குத் தகுதி படைத்தவர்களே.

* ரூ. 25 பரிசு பெறுபவர் :
டி.எஸ். சேகர்,
மோரசுணியனூர் அஞ்சல்,
வழி சேத்பட் - 606 801.
தி.மலை. மா.வ.

☐ ரூ. 50 பரிசு பெறுபவர் :
டீ.எஸ்.டீ. ராயன்,
197, உடையார் தெரு,
நல்லத்துக்குடி,
மயிலாடுதுறை - 609 001.

KALKI SHOPPING PAGE



பிரபல ஜோதிட ஆலோசகர்

பேராசிரியர் மிராண்டா

"ஜோதிட மன இயல்"

(Astro-Psychology)

பரபரப்பான இன்றைய சூழலுக்கு ஏற்ப, ஜாதகம் செயல்படும் விதத்தை விஞ்ஞான ரீதியில் அனுபவக் கருத்துக்களோடு ஆலோசனைகள் பெற, தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே. எண்: 4468009, 4910973.

சிறப்பு பயிற்சியும் வழங்குகிறார்.

சனி, ஞாயிறு நாட்களில் குறுகிய கால ஓய்வு நேர நேர்முக வகுப்புகள் நடைபெறுகிறது.

தொலைபேசியில் தொடர்பு கொண்டு பயிற்சியில் சேர்ந்தும் பயனடைவீர்.

75A, எல்லையம்மன் கோயில் தெரு.
(வண்ணான்துறை பஸ் ஸ்டாப் அருகில்)
சாஸ்திரி நகர், சென்னை – 20.

Visit:wwwaccessequilibrium.com

நவக்கிரக ஆன்மீக பயணம்

நாள் : 23.2.2001 இரவு கிளம்பி 25.2.2001 காலை திரும்புதல்.

2 தினங்கள் ரூபாய் 700/-


வசதி : இரயிலில் படுக்கை வசதியுடன் சென்று வருதல்.

இரவு தங்க வசதியான அறைகள், திருத்தலங்களை சுற்றி பார்க்க வேன் வசதி உட்பட. மற்றைய தேதிகளில் சிறு சிறு குழுக்களாகவும் அழைத்துச் செல்லப்படும். (சாப்பாடு நீங்கலாக)

சென்னையில் தொடர்பு கொள்க போன் : 4892205

VISWAM TOURS & TRAVELS
VISWAM GUEST HOUSE

33, திருமஞ்சன வீதி, திருவிழந்தூர்,
மயிலாடுதுறை-609 001. போன் : 04364-27228
e-mail : viswamnet@vsnl.net



100% திருப்தி

நியாயமான விலையில் அற்புதமான வீட்டு மனை

கிருஷ்ணா நகர் (அரசு அங்கீகாரம் பெற்ற மனைகள் DTP/LPDM-16-74)

மேடவாக்கம் சென்னை – 601302 (வேளச்சேரி அருகில்)

சிறப்பு அம்சங்கள்

• மாநகருக்கு மிக அருகில் • கவர்னர் மாளிகையிலிருந்து 20 நிமிட பயணம் • அடையாறு, திருவான்மியூர், வேளச்சேரி, கிண்டி மற்றும் தாம்பரத்திலிருந்து ரயில் மற்றும் பஸ் வசதி • நன்கு திட்டமிட்ட மனைப்பிரிவு, சுற்றிலும் வேலி • சுற்றிலும் நல்ல வீடுகள் • 12' ஆழத்தில் சுவையான நீர் • அருகாமையிலேயே நல்ல பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், கடைகள் போன்ற அனைத்து வசதிகள் • சுத்தமான பத்திரம், நம்பகமான நிறுவனம் • 5 வருட மனை பாதுகாப்பு சேவை

சுந்தரம் ஹோம் பைனான்ஸ் லிட்.
அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்திரங்கள்; நிதி உதவியும் உண்டு.

Tel : 4357721/31 Telefax : 4353183 Cell : 98400 44018 e-mail: blbestmail@vsnl.net
http://business.vsnl.com/blbestates

BLB Estates (P) Ltd.

S-3, "Ramana Flats" 27, Rathna Nagar, Off Anna Salai,
(Behind Apollo Cancer Hospital), Teynampet, Chennai - 18.

நன் மதிப்பில் முதலீடு.

வட்டமேஜை



✉ விருது பெற்ற சின்னப் பிள்ளை அம்மாளைப் பற்றி படித்ததும் நெகிழ்ந்து போனேன். கபடமற்ற அவரது முகமும் பின்னணியில் தெரிந்த அவரது குடிசை வீடும் கவிழ்ந்து கிடக்கும் பிளாஸ்டிக் வாளியும் அவரது எளிமையைப் படம்பிடித்துக் காட்டிவிட்டன! பொதுநலத்திற்காக ஏங்கும் அவரது மனநிலை பாராட்டப்பட வேண்டிய ஒன்று!

டி. மாரிமுத்துக்குமார்
கொட்டிவாக்கம்,

✉ மணமக்கள் பேசிக் கொள்வதை குறைசொல்லிக் கொண்டு இன்னமும் அந்தக் காலத்திலேயே இருக்கும் பெரிசுகளுக்கு தூராக பதில் படு 'பனிச்'சென்று இருந்தது!

ஜெ. ரஜினிராம்கி
மயிலாடுதுறை,

✉ 'பிட்ஸ் பஜாரி'ல் கிடைத்த ஐந்து துணுக்குகளும் அபூர்வமான அன்பளிப்புகள்!

ச.ஆ. கேசவன்
இனாம் மணியாச்சி,

✉ காஞ்சனா தாமோதரன் எழுதிய 'என் ஆருயிர் மகளுக்கு' என்ற கடைசி வரி கவிதையின் 'மறக்காமல் பதில் போடு' என்ற மனத்தில் ஆழமாய்ப் பதிந்து போனது!

எஸ். அகிலா
மோரகனியனூர்,

✉ மொத்த மதங்களையும் இணைத்துவிட வேண்டும் என்ற பெருமாள்சாமி ரிஷியின் லட்சியம் (அ.தி.மு.கவிலிருந்து ஆன்மிகத் துக்கு...!) ப்ராக்டிகலாக இயலாத ஒன்று என்றாலும் ஒரு புனிதப் பணியில் அவர் இறங்கியிருப்பதை நிச்சயம் பாராட்ட வேண்டும்.

இரா. வளையாபதி
தோட்டக்குறிச்சி,

✉ சௌரி ராம்நாராயண் அவர்களின் பாபுஜி (திருமதி கல்கி) பற்றிய அஞ்சலியைப் படித்து மனம் கனத்துப் போனது! எழுதப் படிக்கத் தெரியாதவர்... ஒரு எழுத்துலக மாமேதைக்கு வாழ்க்கைத் துணைவியாய் வந்தது எத்தனை விநோதம்! பின் அவரே பாரதி, கம்பன் எல்லோரையும் மனப்பாடம் செய்தது அதைவிட விநோதம்! "தமது தொண்ணூற்று ஒன்றாவது வயதில் ஒரு கனிந்தபழம் நழுவி விழுவது போல அமைதியாக" என்ற வரிகளில் சோகம் கவ்விக் கிடந்தது. அம் மாதரசியின் மரணத்திற்கு என் மனமார்ந்த இதய அஞ்சலி.

ந. வந்தியக்குமாரன்
சென்னை- 41,

✉ யப்பா, யப்பா... குளிர்வாட்டுது. மார்கழி குளிர் அல்ல, சென்னை-டு-சைனா பயணக் கட்டுரை படித்தவுடன் ஏற்பட்ட குளிர். மஃப்ளர் சுற்றிக் கொண்டு காத்துக் கொண்டிருக்கிறேன் அடுத்த அத்தியாயத்துக்கு!

கே.கே. வெங்கடேசன்
வேலூர்,

✉ தூர்தர்ஷனைப் பார்ப்பவர்கள்தான் அதிகம் என்கிறாரே சுஷ்மா சுவராஜ்... கேபிள் இணைப்பு வைத்திருக்கும் எத்தனை பேர் தூர்தர்ஷன் பார்க்கிறார்கள் என்று சொல்லச் சொல்லுங்கள் பார்க்கலாம்!

வி. முத்தையா
திருநெல்வேலி-6,

✉ 'கிருஷ்ணதாசி'யில் ஜெமினியின் அசல் வாழ்க்கையைக் கோடி காட்டியது அநாகரிகமென்று கூறுகிறார் விநோத். ஆனால் ஜெமினியே நடிக்கும் தொடரில் அவர் அறிந்துதானே அந்த வசனம் சேர்க்கப்பட்டது!

ஆர். ராமசுப்ரமணியன்
கோயம்புத்தூர்,

✉ வரலொட்டி ரெங்கசாமியின் 'காந்தாரியின் காதல்' கதை நன்றாக இருந்தாலும், பெரிய அளவில் தியாகம் செய்த காந்தாரியின் வாழ்க்கை முறை கொச்சைப் படுத்தப்பட்ட உவமை. அவளைப் போல் துஷ்டன் துரியோதனனுக்கு யார் புத்திமதி சொல்லியிருக்க முடியும்? மஹாபாரதத்தின் வியாஸர் மூலத்தை ஊன்றிப் படித்தால் கண்டிப்பாக இந்த உவமை கொடுக்க மனம் இடம் கொடுக்காது.

ப.சு. வைத்தியநாதன்
பெங்களூர் - 8,

27

ராவணன் வீழ்ந்தான்! தோல்வியுற்ற அரக்கர் சேனை ஸ்ரீ ராமனையும் வானர சைன்யங்களையும் அடிபணிந்து அபயம் கேட்டது. - இதைத் திருமங்கையாழ்வார் ஓர் அழகான காட்சியாகச் சித்திரிக்கிறார்

எம்பிரானே! என்னையாள்வாய்
என்றென்றலற்றாதே
அம்பின் வாய்ப்பட்டு
ஆற்றகில்லாது
இந்திரசித்தழிந்தான்
நம்பி அனுமா! சுக்கிரீவா!
அங்கதனே! நளனே!
கும்பகர்ணன்
பட்டுப்போனான்
குழமணி தூரமே

அனுமனை எப்படி அழைக்கிறார்கள் அசுரர்கள் என்பதைக் கவனியுங்கள். "நம்பி அனுமா!" என்று அழைக்கிறார்கள்!

நம்பி என்ற சொல், எல்லா குண நலன்களும் பூரணமாக உள்ள ஒருவரைக் குறிக்கும். ஹனுமானின் பூரணத்துவத்தை அசுரர்களும் உணர்ந்து ஏற்றினார்கள் என்பதை திருமங்கையாழ்வாரின் இந்தப் பாசுரம் உணர்த்துகிறது.



ராவண வதம் முடிந்து, விபீஷணனுக்குப் பட்டம் சூட்டுகிறான் ஸ்ரீ ராமன். ஓராண்டு காலமாக, சோகமே உருவாய் அசோக வனத்தில் இருக்கிற சீதையிடம் இச் செய்தியைத் தெரிவிக்க வேண்டும்- மகிழ்ச்சியான செய்தி; பிரிந்தவர்கள் மீண்டும் இணையப் போகும் செய்தி. இச் செய்தியைச் சொல்லியனுப்ப ஸ்ரீ ராமபிரான் யாரைத் தேர்ந்தெடுத்தார் என்று சொல்லத் தேவையில்லை! ஆஞ்சநேயன் அன்றி அப்பணிக்கு வேறு யார் தகுதி படைத்தவராயிருக்க முடியும்?

ராமபிரான் ஹனுமானை அழைத்தார். "ஆஞ்சனேயா! ராவணன் போரில் கொல்லப்பட்டதையும் விபீஷணனுக்கு முடிசூட்டி நான் மகிழ்ந்திருப்பதையும் உடனடியாகச் சென்று சீதையிடம் சொல்வாயாக..." என்று பணித்தார்.

இந்த வார்த்தை காதிலே விழுந்ததுதான் தாமதம்... ஒரே ஓட்டமாக அசோக வனத்துக்கு ஓடினான் ஹனுமான். சீதையின் முன் போய் நின்றான்!

அவனுடைய மகிழ்ச்சியையும் களிப்பையும் கம்பன் கவிதையாக்கியிருக்கும் அழகு அபூர்வமான அழகு!

ஸ்ரீராம பக்த ஹனுமான்

கல்யாணபுரம் ஆராவமுதன்

பாடினான் திருநாமங்கள்
பன்முறை
கூடு சாரியிற் குப்புற்றுக் கூத்து
நின்று
ஆடியங்கையிரண்டு மலங்குறச்
சூடி நின்றனன் குன்றன்ன
தோளினான்.

இதன் பொருள் சுருங்கச் சொன்னால்:

மலைபோன்ற தோள்களையுடைய ஹனுமான் ராமநாமத்தைப் பலமுறை சொல்லி வலமும் இடமுமாகக் குதித்து ஆனந்த நடனம் செய்து, சீதையின் முன்பு வந்து, தலைமேல் கரம்குவித்து நின்றான்.

> **திருவையாறு ஆஞ்சனேயர்**
>
> திருவையாறு, பஞ்சநதீஸ்வரரின் திருத்தலம் என்பதும் தியாகப்ரும்மத்தின் ஆராதனை ஆண்டுதோறும் நடைபெறும் அவரது சமாதி அமைந்துள்ள இடம் என்பதும் அனைவரும் அறிந்த விஷயம்.
>
> தர்மஸம்வர்தனி அம்பாள் ஸந்நிதிக்கு எதிரே அமைந்துள்ள பாவாசாமி அக்ரஹாரத்தில் ஒரு விசேஷமான ஆஞ்சனேயர் ஆலயம் உள்ளது. அங்கு உறைகின்ற ஹனுமான் மிகவும் வரப்ரஸாதி.
>
> இந்த ஆஞ்சனேயர் ஆலயத்தருகில் தான் ஹரிகதா விற்பன்னர் காலம் சென்ற திருவையாறு அண்ணாசாமி பாகவதர் அவர்கள் பல்லாண்டு வசித்து வந்தார்கள்.

ஏழை சோபனம் ஏந்திழை சோபனம்
வாழி சோபனம் மங்கல சோபனம்
ஆழியான வரக்கனையாரியச்
சூழியானை துகைத்தது சோபனம்

– இது அடுத்த பாடல்! களித்து நின்றவனின் பேச்சு! சொல்ல வந்த செய்தியை எத்தனை சுருங்க, விளங்கச் சொல்கிறான் ஹனுமான்! சோபனம் என்றால் மங்கலச் செய்தி.

இதையே அருணாசலக் கவிராயர் எப்படி வர்ணிக்கிறார் பாருங்கள்:

பல்லவி
சோபனம் சொல்ல வந்தேன் – உன்தன்
தொண்டன் அனுமந்தன்

அனுபல்லவி
சோபனம் சானகித் தாயே! முந்த முந்த
சுவாமி ராமகாரியம் செயமே செயம்
அந்த (சோபனம்)

இவ்வளவு மகிழ்ச்சித் துடிப்புடன் சோபனம்! சோபனம்! என்று ஹனுமான் குதிக்கிறான்; சீதாபிராட்டியோ பதில் எதுவுமே பேசாமல் மௌனமாயிருக்கிறாள்.

கொஞ்சம் குதித்து அடங்கிய ஹனுமான் அப்போதுதான் அதைக் கவனிக்கிறான். பிராட்டியிடம் தன் மகிழ்ச்சியின் எதிரொலி தெரியவில்லையே என்று கவனிக்கிறான். அவளைப் பார்த்துக் கேட்கிறான்:

"தாயே! ஏன் ஒன்றுமே பேசாதிருக்கிறீர்? நான் சொன்ன செய்தி உங்களுக்கு மகிழ்ச்சி தரவில்லையா?...."

அப்போது சீதை சொன்ன பதிலானது, அவள் ஆஞ்சனேயனை எப்பேர்ப்பட்ட உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றினாள் என்பதற்குச் சான்று:

"ஆஞ்சனேயா! உயிரினும் மேலான செய்தியல்லவா நீ



இப்போது கொண்டு வந்திருக்கிறாய். அன்று நான் உயிரைவிடத் துணிந்த கணத்தில் ராமகதையைச் சொல்லி என் முயற்சியைத் தடுத்தாய். இன்று ஸ்ரீ ராமனின் வெற்றியைச் செவியாற கேட்க நான் உயிரோடிருப்பதே உன்னால்தான். அதனால் இப்போது என் மகிழ்ச்சியானது ஆனந்தத்தின் எல்லையைத் தொட்டிருக்கிறது. அளக்கவொண்ணாத இந்த சந்தோஷத்தை நான் அனுபவிக்கச் செய்தவன் நீயேயல்லவா! உனக்கு என்ன கைமாறு செய்வது என்ற சிந்தனைதான் என் சந்தோஷத்தையும் முந்திக் கொண்டு நிற்கிறது. யோசிக்கிறேன் ஆஞ்சனேயா! வைரத்தைத் தருவதா? வைடூரியத்தைத் தருவதா? மூவுலகங்களையும் உனக்கு ஆளத் தருவதா...? என்ன செய்வதென்றே புரியவில்லை..." என்றாளாம் ஜானகி!

தன் மகிழ்ச்சியை அனுபவிக்கவும் மறந்து ஹனுமானிடத்திலே அவளுக்கு நன்றிப் பெருக்கு பிரவகிக்கிறது என்னும்போது எத்தகைய ஸ்தானத்தில் அவனை இருத்திப் பார்க்கிறாள் அந்த மஹாலக்ஷ்மி!

சீதையின் மொழிகேட்ட ஹனுமான் மட்டும் சளைத்தவனா என்ன...? அவன் பதிலுக்குச் சொல்வதைக் கேளுங்கள்:

"அம்மா! மூவுலகங்களின் ஆட்சியையா எனக்குத் தருகிறேன் என்கிறீர்கள்...? ஸ்ரீ ராமபிரான் வெற்றி வாகை சூடி விஜய ராகவனானதைக் கண்களிக்கக் கண்டது போதாது என்று, அந்தச் செய்தியை உங்களிடம் வந்து சொல்லும் பாக்கியமும் பெற்றேனே! அதற்கு மேலாக அச்செய்தியைக் கேட்டுத் தாங்கள் ஆனந்தம் கொள்வதைக் காணும் பெரும்பேறும் பெற்றேனே... இதையெல்லாம் விடவா மூவுலகாளும் பதவி உயர்ந்ததாகிவிட முடியும்? என் அகம் நிறைந்திருக்கிறது தாயே...! அதுவே போதும்..."

என்று கண்ணீர் மல்கச் சொல்கிறான் ஆஞ்சனேயன்.

இப்படியொரு பதிலைக் கேட்ட சீதா பிராட்டிக்கு எப்படியிருந்திருக்கும்...!

பிறர் மகிழ்ச்சியில் நிறைவு காணும் உயர்வு படைத்த காவிய நாயகனான ஸ்ரீ ராம பக்த ஹனுமானைப் பார்த்து அவள் சொல்கிறாள்:

"ஆஞ்சனேயா! நீ வீர தீரத்தில் சிறந்தவன் என்பதை அறிவேன். புத்தியில் சூரன் என்றும் தெரியும். வாக்கு பலத்திலும் உனக்கு ஈடு வேறு ஒருவர் இல்லை என்பதை நிரூபித்தாய் இன்று..."

ஹனுமானின் பேச்சாற்றலை ஸ்ரீராமன் போற்றிப் புகழ்ந்ததை ஏற்கெனவே பார்த்தோம். சீதாபிராட்டியும் தன் பங்குக்கு அவ்வாற்றலை அங்கீகரித்து உயர்த்தினாள்.

தூது வந்த ஹனுமானுக்குச் செய்தியைச் சொல்லிவிட்டு வந்த வழி திரும்பிப் போக மனம் இல்லை. இத்தனை காலமும் சீதா பிராட்டியைத் துன்புறுத்தி வந்த அரக்கிகளைச் சும்மா விடுவதா...? அவர்களை ஒழித்துக்கட்டிவிடத் துடிக்கிறான் அவன். தேவியிடம் அதற்கு அனுமதி கேட்டு நிற்கிறான்.

சீதை அவனை அமைதிப்படுத்த பேசுகிறாள்:

"அஞ்சனை மைந்தா! உலகிலே தவறு செய்யாதவர்கள் யார் இருக்க முடியும்?.... ராவணன் சொன்னதைத்தானே இந்த அரக்கிகள் செய்தார்கள். கீழ்ப்படிந்து நடந்த பிரஜைகளான அவர்கள் பேரில் குற்றம் எதுவும் இல்லை. தண்டனை எதற்கும் அவர்கள் உரியவர்களில்லை..." என்று சொல்லி ஹனுமனை மனப்பூர்வமாக ஆசீர்வதித்து அனுப்பி வைத்தாள்.

அருள்வாக்கு!

லோகத்தில் சில பேர் ஏன் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள் என்றால், மற்றவர்கள் அவர்களுக்குப் பரோபகாரம் செய்கிறார்களா என்று பார்ப்பதற்காகத்தான் ஈச்வரன் இப்படிப் பரீக்ஷை பண்ணுகிறான் என்று சொல்வதுண்டு. 'அவனவன் தன் கர்மாவுக்காகக் கஷ்டப்படுகிறான். நாம் உதவி பண்ணினாலும்கூட அவன் பலன் அடைய முடியாதபடி கர்மா குறுக்கே நிற்கலாம்' என்பதும் வாஸ்தவம்தான். ஆனால், நம் உபகாரத்தால் அவன் கர்மா தீருகிறதோ, தீரவில்லையோ, நம்மாலான ப்ரயாஸையை நாம் பண்ணுவதுதான் மநுஷ்ய தர்மம். ஒருத்தனைக் கர்மாவுக்காக தண்டிக்கிறபோதே ஈச்வரன் மற்றவர்களுடைய பரோபகார சித்தத்துக்கும்



அதை ஒரு 'டெஸ்ட்'டாக வைக்கிறான் என்றுதான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் உபகாரம் பண்ணியும் அது அவனுக்கு ப்ரயோஜனமாகாவிட்டால்தான், கஷ்டம் என்பது அவன் கர்மாவுக்குத் தண்டனை என்று சொல்லலாம். அநேக ஸமயங்களில் பரோபகாரத்தினால் பிறத்தியார் கஷ்டத்தைப் போக்கவும் முடிகிறதே! இப்படியானால் என்ன அர்த்தம்? நாம் பரோபகாரம் பண்ணி அவன் கஷ்டத்தைப் போக்குகிறோமா என்று பகவான் 'டெஸ்ட்' பண்ணியதாகத்தானே அர்த்தம்?

இதே மாதிரிதான், தனி மனிதனுக்குக் கஷ்டம் வருகிறது போலவே, ஒரு ஜன ஸமுதாயத்துக்கே பஞ்சம், வெள்ளம், எரிமலை, பூகம்பம், தீவிபத்து முதலான உத்பாதங்கள் ஏற்படுவதிலும் மற்றவர்களுடைய பரோபகார சிந்தனைக்கு பகவான் வைக்கிற பரீக்ஷையும் சேர்ந்திருக்கும். இம்மாதிரி நிவாரணப் பணிகளைப் பற்றி நான் இதுவரை சொல்லவில்லை. விசேஷமாக இதைப் பற்றிச் சொல்லி வற்புறுத்த வேண்டியதுமில்லை. இப்படி ஒரு பெரிய கஷ்டம் பல பேருக்கு ஏற்படுகிறது என்றால், யாரும் சொல்லாமலே பணத்தாலோ, சரீரத்தாலோ உதவிபண்ண வேண்டும் என்ற எண்ணம் அவரவருக்கும் பொங்கிக் கொண்டு வர வேண்டும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

இதன் பிறகு சீதை அக்னிப் பிரவேசம் செய்ததும் விபீஷணனிடம் ராமபிரான் விடைபெற்றுச் செல்லுகையில் வானரங்கள் அனைவருக்கும் அவன் பரிசுகள் வழங்கி அனுப்பியதும் கம்பனும் வால்மீகியும் பாடிய ராமாயணத்தில் இடம் பெற்றுள்ளன.

இந்தக் கட்டத்திலே ஹனுமானைப் பற்றி மிக ரஸமானதொரு சம்பவத்தை அருணாசலக் கவிராயர் மட்டும் சொல்கிறார் ராமநாடக கீர்த்தனையில்:

வானர சைன்யங்கள் இலங்கையிலிருந்து வெளியேறத் தயாராகும் சமயம். அனைவரும் இருக்கிறார்களா என்று சரிபார்க்கும்படி சேனாதிபதியிடம் உத்தரவிடுகிறார் ஸ்ரீ ராமன். கணக்[redacted]ப்பு நடக்கிறது. வசந்தன் என்ற குரங்கை மட்டும் காணவில்லை.

என்ன செய்வது...?

திரும்பவும் ஹனுமானைத்தான் கூப்பிடுகிறார்கள்– தேடுகிற பணிக்கு!

ஹனுமான் உடனே யமலோகத்துக்கே புறப்பட்டுப் போய்விட்டானாம்! அங்கே சென்று யமனிடம் பேட்டி நடத்துகிறான்!

ஹனுமான்: ராம காரியத்தில் ஈடுபட்ட வசந்தன் என்ற வானரன் இங்கு இருக்கிறானா...?

யமதர்மன்: ஆமாம்! இங்கே சௌக்யமாக இருக்கிறான் வசந்தன்.

ஹனுமான்: எதற்காக அவனை இங்கு கொண்டு வந்தீர்கள்...?

யமதர்மன்: ஆஞ்சனேயா! கோபித்துக் கொண்டுவிடாதே! பூலோகத்திலிருந்து இங்கே வருபவர்கள் அனைவரும் உன் பெருமையைக் கூறக்கேட்ட எனக்கு உன்னைப் பார்க்கும் ஆசை வந்துவிட்டது! ஆனால், நான் மண்ணுலகம் வந்தேனானால் என் பார்வை பலர்மீதும் படும். பார்வை படும் அத்தனை பேரும் இங்கே யமலோகம் வரவேண்டியதாகிவிடும். ஆனால் எனக்கோ உன்னைக் காணத் துடிப்பாய் இருக்கிறது. எப்படியாவது உன்னை இங்கே வரவழைப்பதன்றி வேறு வழியில் அந்த ஆசை நிறைவேறாது. அதனால்தான் வசந்தனை இங்கே கொண்டு வந்தேன்...

ராம நாடகத்தில் இந்தக் காட்சியைக் கற்பனை பண்ணிப் பாருங்கள். யமதர்மராஜன்! ஆஞ்சனேயனிடம் அவன் இப்படியொரு விளக்கம் அளிக்கிறான். தொடர்ந்து ஆஞ்சனேயன் அந்த யமனையும் இந்திரன், பிரம்மனையும் தன் வாலால் பிணைத்துக் கட்டி, வசந்தனின் விடுதலையைப் பெறுகிறான்!

(வளரும்)

8 மணி டியூப் லைட்!

கல்கி – ரமணி Vs ரமணி இணைந்து நடத்திய 'தம்பதி தமாஷ்' போட்டியில் ரூ. 2000 மதிப்புள்ள பட்டுப் புடைவையை ஆறுதல்பரிசாகப் பெறும் கட்டுரை.

என் கணவருக்குத் தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு அதிகம். ஒரு தனியார் நிறுவனத்தில் பொறுப்பான பதவியிலிருந்தாலும், வேலை பளுவிற்கிடையே, சிலேடை மற்றும் இலக்கிய மேற்கோள்கள் மூலம், அன்றாட வாழ்க்கைக்கு உற்சாக மூட்டுவது அவரது வழக்கம்.

திருமணமாகி கூட்டுக் குடும்ப வாழ்வில் அடியெடுத்து வைத்த காலம். என் கணவர் தனது தம்பி குழந்தைகளுக்குத் தமிழ்ப் பாடங்களை நயமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். ''பிறன்மனை நோக்கா பேராண்மை'' என்ற குறளுக்கு விளக்கம் கொடுத்தபோது ''அதெல்லாம் இந்தக் காலத்திற்கு ஒத்து வராது''



என்று என் காதுபட உறக்கச் சொன்னார். எனக்கு உடனே மூட் அவுட் ஆகிவிட்டது. 'ஒரு வேளை தனது அனுபவத்தைதான் கூறிக் கொண்டிருக்கிறாரோ?' என்று மனக்குருவி ஓலமிட்டது.

அன்று இரவு, எனது

மாமியாரும், கணவரும், குடும்ப நண்பர் ஒருவரது வீட்டுப் பிரச்னையைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார்கள். சமையலறையில் இருந்தபடியே அவர்கள் பேச்சையே 'வேவு பார்த்து'க் கொண்டிருந்தேன். பேச்சிற்கிடையே, நண்பர் வீட்டுப் பெண்மணி பற்றி குறிப்பிட்டு "அந்தப் பெண் எனக்கு மிகவும் பிடித்த பேரிளம் பெண்ணாயிற்றே" என்று உரக்கக் கூறினார்.

அதற்குமேல் என்னால் பொறுக்க முடியவில்லை. அழுகை பொத்துக் கொண்டு வந்துவிட்டது. எனது மாமியாரும் மற்றவர்களும் பதறிவிட்டனர். இந்தப் பொல்லாதவர் மட்டும் அதன் காரணத்தைப் புரிந்து கொண்டு, குழந்தைகளைக் கூப்பிட்டு "உங்கள் சித்தி இலக்கணத்தில் ரொம்ப வீக்" என்று கேலி செய்தார். "பேரிளம் பெண் என்றால் மூதாட்டி என்று பொருள்!" என்று என்னைப் பார்த்து நையாண்டி செய்தவுடன்தான் எனக்குப் பாதி உயிர் திரும்பி வந்தது; ஆனால் அந்தத் திருக்குறள் சம்பவம் நினைவுக்கு வரவே அங்கேயே போட்டு உடைத்தேன்.

'ஹ...ஹ...!'என்று சிரித்த அவர், "பார்த்தியா நான் நினைச்சது சரியாப் போச்சு. நான் வேண்டுமென்றேதான் அப்படிச் சொன்னேன். நீ உடனே கோதாவில் இறங்கி சண்டை போடுவாய் என்று எதிர்பார்த்தேன். அதற்கு எட்டு மணிநேரம் எடுத்துக் கொண்ட ட்யூப் லைட்டே, இந்த அவசரமான யுகத்தில், தன் மனையையே நோக்க நேரமில்லையாக்கும்; பிறன்மனை நோக்குவது எங்ஙனம்? அதனால்தான் பிறன்மனை நோக்கா பேராண்மை அறிவுரை இந்தக் காலத்திற்குச் சரியில்லை என்று யாம் முழங்கினோம்" என்று ஒரு தமிழாசிரியர் பேசுவது போல முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு கூறவும், வீடே சிரிப்பில் ஆழ்ந்தது.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு நடந்த ஊடலும், உரையாடலும், இந்தத் திருமண வெள்ளி விழா ஆண்டிலும் மலர்ந்த நினைவுகளாக எங்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுகின்றன.

— பா. தர்மாம்பாள்

பஞ்சாப் புலி!

ஒரு சர்தார்ஜி ஜீப்பில் புலிகள் சரணாலயத்துக்குச் சென்றார்.

உள்ளே போகும்போதே காவலாளி 'ஸார் ஒரு புலி ரொம்பவும் ஆக்ரோஷமாக இருக்கிறது. கொஞ்சம் ஜாக்கிரதையாகப் போய் வாருங்கள்' என்று சொல்லி அனுப்பினார். ஆனால் சர்தார்ஜியின் துரதிருஷ்டம். நடுக்காட்டில் அந்த ஆக்ரோஷமான புலி அவரது ஜீப்பைத் துரத்தத் துவங்கிவிட்டது. ஜீப்பை விரட்டினார் சர்தார்ஜி. புலி நெருங்கி, பாய்ந்துவிடும் போலிருந்தது. ஓர் இடத்தில் சாலை இடது, வலமாகப் பிரிந்தது. உடனே புத்திசாலித்தனமாக ஜீப்பின் இடதுபுற இண்டிகேட்டரைப் போட்டு வலது புறச்சாலையில் ஜீப்பை ஓட்டி விட்டார் சர்தார்ஜி. அவர் எதிர்பார்த்தது போலவே இண்டிகேட்டரைப் பார்த்து இடதுபுறமாகச் சென்றுவிட்டது புலி! ஆனால் சர்தார்ஜியின் ஜாதகம் சரியில்லை போலிருக்கிறது. இடது, வலமாக முதலில் பிரிந்த சாலை மீண்டும் இணைந்தது. இடமாகச் சென்ற புலி மறுபடி சர்தார்ஜியின் ஜீப்பைத் துரத்தியது. 'இன்று நம் கதை காலிதான்' என்று கடைசி, கடைசியாக ஒரு முயற்சி செய்து பார்த்தார் சர்தார்ஜி.



ஒரு கையால் ஸ்டியரிங்கைப் பிடித்துக் கொஞ்சம் இடதுபுறமாக ஒதுங்கி, வலது கையால் 'ஓவர்டேக்' செய்து கொள்ளலாம் என்று சிக்னல் கொடுத்தார். சிக்னலைப் புரிந்துகொண்ட புலி, ஜீப்பை ஓவர்டேக் செய்து தனது பாதையில் விரைந்தது. சர்தார்ஜியும் பெருமூச்சு விட்டார். அது சரி, இந்த ஜோக் உணர்த்தும் உண்மைதான் என்ன?

ரொம்ப ஸிம்பிள்: அந்தப் புலியும் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தது என்பதுதான்!

— ஆரெஸ்வி

ராசி பலன்

அலாரம் 'கணகண' என அடித்தது. துள்ளியடித்து எழுந்தார் அண்ணாசாமி. காலை மணி ஐந்து. பாத்ரூம் போய் பல் தேய்த்து, முகம் கழுவி வந்தவர் துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, பட்டையாக விபூதி பூசிக் கொண்டு 'முருகா! இன்னிக்காவது நல்ல செய்தியா வரணும்' என வேண்டிக் கொண்டார்.

'இந்தாங்க, காப்பி' என்ற தன் மனைவியின் குரல்கேட்டுத் திரும்பிப் பார்த்த அவர், "அட! நீயும் எழுந்திரிச்சுட்டயா, ரங்கம்?" என்று கேட்டார்.

"ஆமாம்! நீங்க தூங்க விட்டாதானே? ஞாயித்துக்கிழமைக்கூட இப்படிக் விடிகாலைலே எழுந்திரிக்கணுமா? நீங்க எழுந்திரிக்கறது மட்டுமில்லே, நீங்க போடற சத்தத்துலே எனக்கும் தூக்கம் கலைஞ்சு போச்சு!"மனைவி ரங்கலட்சுமியின் பேச்சை அண்ணாசாமி பொருட்படுத்தவில்லை.

ஒவ்வொரு வாரமும் இந்தக் காட்சி அண்ணாசாமி வீட்டில் அரங்கேறும். காரணம் ஒன்றுமில்லை. அண்ணாசாமி ஜாதக, ஜோசியப் பைத்தியம். வாரந்தோறும் செய்தித்தாள்களிலும், பத்திரிகைகளிலும் 'ராசிபலன்' பகுதிகளைக் கவனமாக வாசிப்பார். ஒன்றுக்கொன்று முரணாக இருந்தாலும் அனைத்தையும் படிப்பார். அவற்றில் ஏதாவது ஒன்றாவது பலிக்காதா என்ற நப்பாசைதான்.

இப்போது அண்ணாசாமி இந்த ராசிபலன்களை இன்னும் தீவிரமாகப் படிப்பதற்கு காரணம் இருந்தது. அவர் பதவி ஒய்வு பெற இன்னும் மூன்று வருஷங்கள் இருந்தன. அதற்குள் துணை மானேஜர் பதவியிலிருந்து மானேஜர் பதவி உயர்வு கிடைக்காதா என்ற ஆவல் கலந்த எதிர்பார்ப்புதான். அவர் வேலை செய்வது ஒரு தனியார் கம்பெனி. தென் மாநிலங்களில் முக்கியமான இடங்களில் அதற்குக் கிளைகள் உண்டு. இன்னும் ஓரிரு மாதங்களில் மூன்று மானேஜர்கள் ஓய்வு பெறுகிறார்கள். சீனியாரிட்டிபடி பார்த்தால் அண்ணாசாமிதான் நம்பர் ஒன். ஆனால் தனியார் கம்பெனியில்தான் சீனியாரிட்டிக்கு ஒரு மதிப்பும் இல்லையே?

இதனால்தான் அண்ணாசாமி தன் திறமையையும், சீனியாரிட்டியையும்விட ராசிபலன்களை நம்ப ஆரம்பித்தார்.

"சே! என்ன பண்றாங்க இந்தப் பேப்பர் பையன்க! ஏன் இன்னும் ஒரு பயலும் வரலை!" அலுத்துக் கொண்டே பதினொன்றாம் தடவையாக வாசலை எட்டிப் பார்த்தார் அண்ணாசாமி.



'ஏன் நீங்க குட்டிப் போட்ட பூனை மாதிரி அலையறீங்க! என்னமோ, பேப்பர்லே போட்டதெல்லாம் நடக்கற மாதிரியும், உங்களுக்கு நாளைக்கே பிரமோஷன் கிடைக்கிற மாதிரியும்தான். ஆமாம்! நான் ஒண்ணு கேக்கறேன்...' என்ற ரங்கலட்சுமியை ஏறிட்டுப் பார்த்தார் அண்ணாசாமி.



"ஒருவேளை உங்களுக்குப் பிரமோஷன் கிடைச்சு, வேறே எங்கயாவது போட்டா, நீங்க போவீங்களா, இந்த வயசுலே. அந்த ஊர் தண்ணியெல்லாம் உங்களுக்கு ஒத்துக்குமா?"



மனைவியின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வாயெடுக்கும்முன் 'தொப்' பென்ற சப்தம் கேட்டு அண்ணாசாமி வாசலுக்கு ஓடினார். ஆங்கிலம், தமிழ் என்று மொத்தம் நான்கு தினசரிகள். அனைத்தையும் அள்ளியெடுத்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தார் அவர்.



அடுத்த இரண்டு மணி நேரத்திற்கு அவரை அசைக்க முடியாதென்று தெரிந்த ரங்கலட்சுமி சமையலறைக்குள் சென்றாள்.


ஸ்ரீ ராகவேந்திரன்

ஆஞ்சநேயர் சாய்ஸ்!

சென்னை இசைவிழா சீசனில், பல்வேறு அமைப்புகள், வித்வான்களுக்குப் பட்டம் தந்து கௌரவித்தன. நங்கநல்லூர் விஸ்வரூப ஆஞ்சநேயர் கோயிலை நிர்வகிக்கும் அறக்கட்டளை சார்பிலும், இசை விழாவும், பட்டமளிப்பு



கௌரவமும் நடந்தது. விருதுக்குரியவரைத் தேர்ந்தெடுக்க இந்த அறக்கட்டளையினர் கையாண்ட முறை மிகவும் வித்தியாசமானது.

அறக்கட்டளை நிர்வாகிகள் ஒவ்வொருவரும் விருது பெறத் தகுதி படைத்தவர் என தாம் நினைக்கும் இசைக் கலைஞரின் பெயரைக் குறிப்பிட, அவர்களின் பெயர்களை எழுதி விஸ்வரூப ஆஞ்சனேயர் சன்னதியில் திருவுளச் சீட்டு போட்டுப் பார்த்து, தேர்வு செய்யப்பட்டார் ஒருவர்! அதன்படி இவ்வாண்டு விருது பெற்ற வித்வான் நாதஸ்வரக் கலைஞர் நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன். உடல்நலக் குறைவு காரணமாக கிருஷ்ணனின் வீட்டுக்குப் போய் விருது வழங்கினார்கள்.

— மௌலி

படம்: யோகா

அரைமணி நேரம் கழித்து, 'ரங்கம்! ரங்கம்! இங்கே வா, சீக்கிரம்' என்ற தன் கணவரின் குரலைக் கேட்டு ஓடோடி வந்தாள் ரங்கலட்சுமி.

"இதைப் பாத்தியா, இந்த வாரம் எல்லாப் பத்திரிகைகளுமே சொல்லியிருக்கான், என்னோட நட்சத்திரத்திற்கு ஏதோ நல்லது நடக்கப் போகுதுன்னு. அப்போ என்னோட பிரமோஷன் நிச்சயம்தான்!" அண்ணாசாமியின் குரலில் மகிழ்ச்சி கொப்பளித்தது.

ரங்கலட்சுமி ஒன்றும் சொல்லவில்லை. இதைப் போல எத்தனையோ தடவை, 'அனுஷ நட்சத்திரக்காரர்களுக்கு, அல்லது விருச்சிக ராசிக்காரர்களுக்கு நல்ல செய்திகள் வரலாம். வேலையிலிருப்பவர்கள் பதவி உயர்வை எதிர்பார்க்கலாம்' என்பன போன்ற ஜோசியங்கள் இதற்கு முன்பும் வந்துள்ளன. ஒன்றும் பலிக்கத்தான் இல்லை. ஆனால் தன் கணவரிடம் இதையெல்லாம் சொன்னால் அவருக்குக் கோபம் வரும். ஆகவே 'ஓகோ, அப்படியா? என்னவோ, வந்தா நல்லதுதான்' என்று சொல்லிவிட்டுச் சமையலறைக்குத் திரும்பினாள்.

மறுநாள் அண்ணாசாமி ஆபீசில் நுழையும் போதே அவருடைய நண்பர் பிடித்துக் கொண்டார். 'அண்ணாசாமி! இன்னிக்கு நம்ம கம்பெனி ஹெட் ஆபீசிலேர்ந்து ஒருத்தரும், ரீஜனல் மானேஜரும் இங்கே வராங்களாம். பிரமோஷன் லிஸ்ட் தயார் பண்ணப் போறாங்களாம்...'

நண்பர் மேற்கொண்டு சொன்னது எதுவும் அண்ணாசாமியின் காதில் விழவில்லை. கண்ணை மூடிக் கொண்டு 'முருகா, முருகா' என ஜபம் செய்யத் தொடங்கினார். ஜபத்திற்கிடையே முதல் நாள் வாசித்த வரிகள் நினைவுக்கு வந்தன. 'அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு இந்த வாரம் மிக நல்லதாக அமையும்; லாட்டரியில் பரிசு கிடைக்கலாம். பதவி உயர்வு எதிர்பார்த்திருப்பவர்களுக்கும் நல்ல செய்தி காத்துக் கொண்டிருக்கிறது' என்றது ஒரு பத்திரிகை. 'விருச்சிக ராசிக்காரர்களுக்கு உயர்வைத் தரும் வாரம்' என்றது இன்னொரு ராசிபலன் பகுதி.

'சார்!' என்ற குரல் கேட்டு கண் விழித்தார் அண்ணாசாமி. பியூன் மணி நின்று கொண்டிருந்தான்.

'சார், மானேஜர் உங்களைக் கூப்பிட்டார்."

அண்ணாசாமி மானேஜர் அறைக்குள் சென்றார். அறையிலிருந்த மூன்று பேரில் ஒருவர் தலைமையலுவலகத்திலிருந்து வந்திருப்பவர். அவர்தான் பேச்சைத் தொடங்கி

னார். எத்தனை வருஷ சர்வீஸ், எங்கே யெல்லாம் வேலை செய்திருக்கிறீர்கள், குடும்பத்தில் யார், யார்? இத்யாதி... கடைசியாக, அந்த ஆபீசர் "மிஸ்டர் அண்ணாசாமி, நாங்க உங்க கேசைப் பரிசீலிச்சோம். நல்ல ரிக்கார்ட், வேலைலே திறமைசாலி. எல்லாம் இருக்கு. ஆனா...!"

திடுக்கென்றது அண்ணாசாமிக்கு.

"மிஸ்டர் அண்ணாசாமி! நம்ம கம்பெனி கடந்த இரண்டு வருஷமா நஷ்டத்திலே ஓடிட்டிருக்கு. போதாக்குறைக்கு இப்போ வெளி நாட்டுக் கம்பெனிகளோட போட்டியும் அதிகமாயிடுச்சு. அதனாலே, கம்பெனிலே ஆள் குறைப்புப் பண்றதாத் தீர்மானிச்சிருக்காங்க. அம்பது வயசுக்கு மேலே இருக்கறவங்களுக்கெல்லாம் கணிசமான தொகை யைக் கொடுத்து ரிட்டயர் பண்ணிடலாம்னு தீர்மானம். அந்த லிஸ்டிலே நீங்களும் இருக்கீங்க...."

அண்ணாசாமிக்குத் தலை சுற்றியது. இத்தனை நாள் காத்திருந்த பிரமோஷன் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, தன் வேலையே போய் விடுகிறதே. இனிமேல் என்ன செய்வது?...

"அதனாலே இன்னிக்குச் சாயந்திரமே உங்களுக்குக் கிடைக்க வேண்டிய இந்த மாச சம்பளம், பி.எஃப், நோட்டீஸ் பீரியட் சம்பளம் எல்லாம் உங்களுக்கு செட்டில் பண்ணிடறோம்.ஸாரி, மிஸ்டர் அண்ணாசாமி..."

அண்ணாசாமி தள்ளாடிக் கொண்டே தன் இருக்கைக்கு வந்து உட்கார்ந்தார். அவர் முகத்தைப் பார்த்த போதே அவருடைய சகபாடிகளுக்குப் புரிந்துவிட்டது என்னமோ சீரியஸ் விஷயம் என்று. ஐந்து நிமிஷத்திற்குள்ளாகச் செய்தி ஆபீஸ் முழுவதும் பரவிற்று. ஒவ்வொருவராக வந்து துக்கம் விசாரித்தார்கள். அண்ணாசாமி கண்ணை மூடிக் கொண்டார். துக்கம் தொண்டையை அடைத்தது.

'சார்!' என்ற குரல்கேட்டது. அண்ணாசாமி கண்ணைத் திறந்தார். அவருக்குக் கீழே வேலை செய்யும் ஜூனியர் அஸிஸ்டெண்ட் கோபால் நின்று கொண்டிருந்தான்.

'வா, கோபால்!' சுரத்தே இல்லை அண்ணாசாமியிடம்.

"நான் விஷயத்தைக் கேள்விப் பட்டேன் சார்! ரொம்ப வருத்தமா இருக்கு!"

"பரவாயில்லே! ஒவ்வொருத்தர் தலைவிதிப் படித்தானே எல்லாம் நடக்கும்!" அண்ணாசாமி வேதாந்தம் பேசினார்.

"சார்! ஒரு நல்ல சமாசாரம்!"


"என்னப்பா?"

"எனக்கு சீனியர் அஸிஸ்டெண்டா பிரமோஷன் கிடைச்சிருக்கு சார். இன்னிக்கு மத்தியானம் ஆர்டர் வரும். ஏதோ உங்க ஆசிர்வாதம் சார்!" கோபால் முடிக்கும் முன்,

"டி.வி. விளம்பரத்துல உங்க தாத்தா பொரிவிளங்காய் உருண்டையைக் கடிச்சுத் திங்கிற மாதிரி காட்டுறாங்களே, பல்செட்தானே மாட்டியிருந்தாரு?"

"பல்லெல்லாம் உண்மையான பல்தான். ஆனா பொரிவிளங்காய் மாதிரி இருக்கிறதுதான் பால்கோவா!"

– தெ. சுந்தரமகாலிங்கம்



அண்ணாசாமி இடைமறித்து.

"ஏன் கோபால்! உன் ஜன்ம நட்சத்திரம் என்ன? அனுஷமா?" என்று கேட்டார்.

தான் சொன்னதைக் கேட்காமல், அண்ணாசாமி என்னவோ சம்பந்தா சம்பந்தமில்லாமல் கேட்கிறாரே என குழப்பமடைந்த கோபால்,

"ஆமாம், சார்! என் நட்சத்திரம் அனுஷம்தான்! அது உங்களுக்கு எப்படி சார் தெரியும்?" என ஆச்சரியமாகக் கேட்டான்.

அண்ணாசாமி பதில் சொல்லவில்லை. ○



S.V.முதியோர் இல்லம்



இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப் படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

எல்லா வயது உட்பட்ட அதிக பட்ச மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

#8, Janakiraman Colony, Near Arumbakkam Bus Stand,
Arumbakkam, Chennai - 600 106.
Phone: 475 5700; 475 1356. Pager : 9610 - 114668
Web Page : www.svhome.org
Email: svhome@svhome.org

காஞ்சிபுரம் முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு தனிப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தரம்! ரகம்! பிரமாண்டம்!



ரெடிமேட் ஆடைகளின் சங்கமம்

ஞாயிறு விற்பனை உண்டு

ஜெயச்சந்திரன் டெக்ஸ்டைல்ஸ்

27, ரங்கனாதன் தெரு
(மாம்பலம் ரெயில் நிலையம் அருகில்)
தி.நகர், சென்னை – 600 017.
போன்: 4339971 / 4334660

பொன்னியின் செல்வன்



ஐம்பத்து ஐந்தாம் அத்தியாயம்

"பைத்தியக்காரன்"

அமரர் கல்கி

கடம்பூரிலிருந்து தஞ்சைப் பிரயாணத்தின் முதற் பகுதியில் வந்தியத்தேவன் பெரும்பாலும் நினைவிழந்த நிலையில் இருந்தான். கட்டை வண்டி ஒன்றில் அவனைக் கட்டிப் போட்டிருந்தார்கள். கரிகாலன் உயிரிழந்த அன்றிரவு புகையும் தீயும் அவனை வெகுவாக வாட்டியிருந்தன. பிரயாணத்தின்போது சிறிது நினைவு தோன்றிய போதெல்லாம் கண்களின் எரிச்சலும் உடம்பின் நோவும் அவனுக்கு அளவில்லாத வேதனையை உண்டாக்கின. அரை நினைவாக இருந்தபோது ஏதேதோ பயங்கரமான தோற்றங்கள் அவன் முன்னே தோன்றி அவனை வாட்டி எடுத்தன. வீரபாண்டியனுடைய தலை மட்டும் அவன் முகத்தருகில் வந்து "அடே! நீயா என் பழிக்குக் குறுக்கே நிற்கிறாய்?" என்று கூறி விட்டுக் கோபமாக விழித்தது. நந்தினி சில சமயம் அணிபணி அலங்காரங்களுடன் அவன் முன்னால் நின்று புன்னகை புரிந்து அவனைத் தன் மாயவலையில் அகப்படுத்தப் பார்த்தாள். இன்னொரு சமயம் தலைவிரி கோலமாக நின்று கண்ணீர் விட்டுப் புலம்பினாள். மற்றொரு சமயம் பேய்க் கோலம் பூண்டு பயங்கரமாகச் சிரித்தாள். ஆதித்த கரிகாலனைத் தொடர்ந்து ஒரு நிழலுருவம் கையில் கத்தியுடன் வந்து கொண்டிருந்தது. வந்தியத்தேவன் அதைத் தடுப்பதற்காகப் பாய்ந்து

சென்றபோதெல்லாம் இன்னொரு ராட்சத நிழல் வடிவம் பின்புறமாக வந்து அவன் கழுத்தைப் பிடித்து இறுக்கியது. கொழுந்துவிட்டு எரிந்த நெருப்பில் அவனை ரவிதாஸனும் அவனுடைய தோழர்களும் தூக்கிப் போட்டார்கள். அவன் உடம்பு பற்றி எரிந்து கொண்டிருந்தபோது, கந்தமாறன் அவனைப் பார்த்து "அடே சிநேகத் துரோகி! உனக்கு நன்றாய் வேணும்!" என்றான். பார்த்திபேந்திரன் அவனைப் பார்த்து 'அடே! உனக்கும் இளையபிராட்டி குந்தவைக்கும் திருமணம் நிச்சயமாகிவிட்டதா? முகூர்த்தம் எப்போது?" என்று கேட்டுவிட்டு இடி இடி என்று சிரித்தான். சேந்தன் அமுதன் அவனைத் தீயிலிருந்து தப்புவிப்பதற்காக எங்கிருந்தோ ஓடி வந்தான். வைத்தியரின் மகன் பினாகபாணி ஒரு மரத்தடியில் ஒளிந்திருந்து சேந்தன் அமுதன் தலையில் ஒரு பெரிய தடியால் அடித்தான்.

உடம்பெல்லாம் தீப்பற்றி எரிந்தபோது வந்தியத்தேவனுக்குச் சகிக்க முடியாத தாகம் எடுத்தது. "தண்ணீர்! தண்ணீர்!" என்று அலற எண்ணினான். ஆனால் சப்தம் வரவில்லை. தொண்டை வறண்டு நாக்கு வீங்கி மேலண்ணத்துடன் ஒட்டிக்கொண்டு அவனைப் பேச முடியாமல் செய்தது. இந்த நிலையில் மணிமேகலை கையில் பொற்கிண்ணத்தில் தேவாமிர்தத்தை எடுத்துக்கொண்டு வந்து அவன் வாயில் ஊற்றினாள். அவளுக்கு அவன் நன்றி கூற எண்ணுவதற்குள் அவள் இருளில் மறைந்துவிட்டாள்!... ஆகா! இந்தப் பெண்ணின் அன்புக்குப் பிரதியாக மூன்று உலகங்களையும் அளிக்கலாம்! ஆனால் தனக்கு என்று ஒரு சாண் அகலம் உள்ள இராஜ்யம் கூட இல்லாத நிலையில் இருக்கும்போது, மணிமேகலைக்கு மூன்று உலகங்களையும் கொடுப்பது பற்றி நினைப்பது என்ன அறிவீனம்?

அதோ பூங்குழலி! "என் காதலர்களைப் பார்!" என்று கொள்ளிவாய்ப் பிசாசுகளை அவன் சுட்டிக்காட்டுகிறாள்: என்ன அதிசயமான பெண்! "இந்த மண்ணுலகத்தில் கிடந்து ஏன் உழலுகிறாய்? பொன்னுலகத்துக்கு உன்னை அழைத்துச் செல்லுகிறேன் பார்!" என்று கூறுகிறாள். "பொன்னியின் செல்வன் உள்ள உலகத்தைத்தானே சொல்லுகிறாய்?" என்கிறான் வந்தியத்தேவன். உடனே நாலாபுறமிருந்தும் கொள்ளிவாய்ப் பிசாசுகள் வந்து அவனைச் சூழ்ந்துகொள்ளுகின்றன. வந்தியத்தேவன் பீதியடைந்து கண்களை மூடிக்கொள்கிறான். பிசாசுகள் அவனைக் கட்டித் தூக்கிக்கொண்டு போய்க் கோடிக்கரையின் மணல் மேட்டின் மேலேறிக் கீழே உருட்டி விடுகின்றன...

வந்தியத்தேவன் திடுக்கிட்டுக் கண் விழித்துப் பார்க்கிறான். கையில் தீவர்த்திகளைப் பிடித்த காவல் வீரர்கள் அவனை ஒரு படகில் ஏற்றியிருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்கிறான். இது என்ன நதியோ, தெரியவில்லை. கொள்ளிடம் அல்லது காவேரி அல்லது குடமுருட்டி ஆறாக இருக்கலாம்... இதற்குள் மறுபடியும் இருள் வந்து கவிந்து அவன் அறிவை மறைத்துக்கொள்கிறது..

இப்படி எத்தனையோ விதமான அநுபவங்களுக்குப் பிறகு திடீரென்று ஏழு கடலும் கொந்தளித்துப் பொங்குவது போன்ற சப்தம் கேட்கிறது. அவன் மேலே ஒரு பெரிய அலை வந்து மோதி அவனை மூழ்க அடிக்கிறது... இப்போது வந்தியத்தேவன் பூரணப் பிரக்ஞை வந்தவனாகக் கண் விழித்துப் பார்க்கிறான். எதிரே சற்றுத் தூரத்தில் தஞ்சாவூர்க் கோட்டை வாசல் தெரிகிறது. அவன் கட்டுண்டு கிடந்த கட்டை வண்டிக்கு முன்னாலும் பின்னாலும் நாநாபுறங்களிலும் ஜன சமுத்திரமாகக் காட்சி அளிப்பதைக் காண்கிறான். அத்தனை பேரும் சேர்ந்து ஓலமிடும் ஓசைதான் ஏழு கடலும் பொங்குவது போன்ற சப்தமாகத் தனக்குக் கேட்டது என்று அறிகிறான். ஆதித்த கரிகாலரின் கடைசி ஊர்வலம் தஞ்சைக் கோட்டையை நெருங்கி விட்டபடியால் தான் அவ்வளவு கூட்டம் என்றும் தெரிந்துகொள்கிறான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அத்தனை

கூட்டமும் அவ்விடம் விட்டு அகன்று சென்றுவிடுகிறது. அவனும் சம்பு வரையரும் மட்டும் காவலர்கள் சிலர் புடைசூழத் தஞ்சைக் கோட்டைக்குள் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். ஆகா! அந்த மகா வீரரின் இறுதிக் கிரியைகள் நடக்கும்போது, அவருடைய அந்தரங்கத்துக்குரிய தோழனாக இருந்த தனக்கு அருகில் இருக்கவும் இயலாமற் போயிற்று. அவனுடைய துரதிர்ஷ்டம் இது மட்டுமா? கடைசி வரையில் அவருடைய உயிருக்கு ஆபத்து வராமல் பாதுகாக்க எவ்வளவோ முயற்சி எடுத்துத் தோல்வியடைந்த தன் பேரில் அவரைக் கொன்றதாகக் குற்றம் சுமத்தியிருக்கிறார்கள்! அவருடைய திருமேனி கடம்பூர் மாளிகையில் பிடித்த தீயிலேயே எரிந்து போகாமல், இத்தகைய மகா வீரனுக்குரிய மரியாதைகளைப் பெருந்திரளான மக்கள் செய்வது சாத்தியமாகும்படி செய்தவன் அவன். அப்படிப்பட்ட தன்னை இப்போது கொலைகாரர்களையும் சதிகாரர்களையும் அடைக்கும் பாதாளச் சிறைக்குக் கொண்டு போகிறார்கள். கொண்டு போனால் என்ன? சீக்கிரத்திலேயே தன்னைப் பற்றி இளையபிராட்டியும் பொன்னியின் செல்வரும் விசாரிப்பார்கள். விசாரித்துத் தான் சிறையில் அடைக்கப்பட்டது தெரிந்ததும் பதை பதைப்பார்கள். உடனே சிறையின் சாவியை எடுத்துக்கொண்டு ஓடி வருவார்கள். தன்னை விடுதலை செய்வார்கள். கரிகாலரின் உயிரைத் தன்னால் காப்பாற்ற முடியாமற் போன போதிலும் அவருக்காகத் தான் செய்த முயற்சிகளையெல்லாம் அறிந்து பாராட்டுவார்கள்...

ஆனால் உண்மையாகவே பாராட்டுவார்களா? தன்னுடைய ஞாபகம் அவர்களுக்கு இருக்குமா? சகோதரனைப் பறி கொடுத்தவர்கள் அந்தத் துக்கத்தில் மற்றதையெல்லாம் மறந்து விட மாட்டார்களா? தான் குற்றவாளி இல்லை என்று சொன்னால்தான் நம்புவார்களா? நம்பினாலும் முன் போல் தன் பேரில் நட்புரிமை பாராட்டுவார்களா?

தங்க நாணயத் தொழிற்சாலையின் வழியாக அவனைப் பாதாளச் சிறைக்குக் கொண்டு போனபோது அவனுடைய நம்பிக்கை வர வரக் குறைந்து கொண்டு வந்தது. அந்தத் தொழிற்சாலையைச் சின்னப் பழுவேட்டரையர் சற்று முன்னதாகவே மூடி விட்டார். அந்த வழியில் அப்போது ஆங்காங்கே சிற்சில காவலர்கள் மட்டும் நின்றார்கள். அவர்கள் பனை மரச் சின்னம் பொறித்த பட்டயங்களைப் பூண்டிருக்கவில்லை. கொடும்பாளூர் வேளார் பழைய சிறைக் காவலர்களையெல்லாம் அனுப்பி விட்டுத் தம்முடைய ஆட்களை அங்கே காவலுக்குப் போட்டிருந்தார். புதிதாகச் சிறைக்குள் வந்த இருவரையும் அவர்கள் வெறிக்க வெறிக்கப் பார்த்தார்கள். ஒருவரோடொருவர் "இவன் தான் கடம்பூர் சம்புவரையன்; இவன் வாணர் குலத்து வந்தியத்தேவன். இளவரசனைக் கொன்ற சண்டாளர்கள்'' என்று பேசிக்கொண்டது வந்தியத்தேவன் காதில் விழுந்தது. புலிக் கூண்டுகள் இருந்த அறை வழியாக அவர்களை அழைத்துச் சென்றபோது, சோழர் குல மன்னர்களின் மறக் கருணைக்கு அவை சின்னங்களாகத் தோன்றின. மறுபடியும் கீழிறங்கிய படிகள் வழியாக அழைத்துச் சென்று வந்தியத்தேவனை ஒரு தனி அறையில் அடைத்துப் பூட்டி விட்டுக் காவலர்கள் சென்றபோது, அவனுடைய நம்பிக்கை முழுதும் போய்விட்டது. அங்கிருந்து தான் விடுதலையாகப் போவதில்லை. உயிர் போன பிறகு தன் உடலைத்தான் ஒருவேளை அங்கிருந்து அப்புறப் படுத்துவார்கள் என்று எண்ணிக் கொண்டான். சின்னப் பழுவேட்டரையருக்கு முன்னமேயே தன் பேரில் சந்தேகம். பார்த்திபேந்திரனுக்கோ தன் பேரில் ஒரே துவேஷம். கிழவன் மலையமானுக்குப் பார்த்திபேந்திரன் பேச்சில் தான் நம்பிக்கை. பழுவேட்டரையர்கள் பரிந்து பேசிச் சம்புவரையர் பேரில்

குற்றமில்லை என்று சீக்கிரத்தில் விடுதலை செய்வதற்கு யார் சிரத்தை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள்? ஒருவரும் இல்லை. தன் பேரில் கொலைக் குற்றமே சாட்டி விடுவார்கள். குற்றம் சாட்டிப் பகிரங்கமாக விசாரணை செய்வார்களா? விசாரித்தால் ஒருவேளை அவன் உண்மையை எடுத்துச் சொல்லிப் பார்க்கலாம். இல்லை, இல்லை! விசாரணையே செய்ய மாட்டார்கள். விசாரணை நடத்தினால் நந்தினியைப் பற்றியும் ரவிதாஸன் கூட்டத்தைப் பற்றியும் உண்மை வெளியாக வேண்டியிருக்கலாம். அதையெல்லாம் யாரும் விரும்பமாட்டார்கள். தன்னை அச் சிறையிலேயே கிடந்து சாகும்படி விட்டு விடுவார்கள். அல்லது விசாரணை ஒன்றுமின்றிக் கரிகாலரைக் கொன்றவன் என்பதாகத் தீர்மானித்து நாற்சந்தியில் கொண்டு போய்க் கழு மரத்தில் ஏற்றி விடுவார்கள்.

தெய்வமே! முதன்முதலில் தஞ்சை நகருக்குப் புறப்பட்டு வந்தபோது அவன் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த உற்சாகம் என்ன? என்னவெல்லாம் பகற் கனவு கண்டு கொண்டிருந்தான்? முக்கியமாக, குடந்தை ஜோதிடர் வீட்டில் இளையபிராட்டி குந்தவையையும் வானதியையும் சந்தித்ததிலிருந்து அவன் எப்படிப்பட்ட குதூகலக் கடலில் மிதந்துகொண்டு இந்தத் தஞ்சைக்கு வந்தான்! அப்போது சின்னப் பழுவேட்டரையர் தன்னை ஒற்றன் என்று சந்தேகித்துப் பாதாளச் சிறையில் அடைத்து விடுவாரோ என்று அவன் சிறிது



அஞ்சியதுண்டு. அது இப்போது வேறொரு விதத்தில் உண்மையாகி விட்டதே! வான வெளியில் உல்லாசமாகத் திரிந்து பறக்கும் பறவையைப் போல் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த தன்னை இந்த இருளடைந்த அறையில் பூட்டி விட்டார்களே! இதில் தன்னால் எத்தனை காலம் இருக்க முடியும்? முடியாது! முடியாது! உயிரை விடுவதற்கு ஏதேனும் விரைவில் வழி தேட வேண்டியது தான்...

இவ்வாறெல்லாம் எண்ணி எண்ணி ஏக்கமடைந்து செயலற்று உட்கார்ந்திருந்தான் வந்தியத்தேவன்.

அந்தச் சமயத்தில் பக்கத்து அறையில் யாரோ தொண்டையைக் கனைப்பது கேட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் கர்ண கடூரமான குரலில்,

''பொன்னார் மேனியனே...!'' என்ற தேவாரப் பாடலும் கேட்டது.

வந்தியத்தேவனுக்கு உடனே சேந்தன் அமுதனு



டைய ஞாபகம் வந்தது. பாடியவன் அவன் இல்லை. சேந்தன் அமுதனுடைய குரல் தெய்வீகமான இனிமை பொருந்தியது. இப்போது பாடுகிற குரல் கர்ண கடூரமானது. ஆயினும் அதே பாடலை இங்கே பாதாளச் சிறையில் இருப்பவன் பாடும் காரணம் என்ன?

சிவ, சிவா! காதால் கேட்க முடியவில்லை. பாதாளச் சிறையில் அடைபட்டிருப்பது போதாது என்று இந்த அபூர்வமான சங்கீதத்தைக் கேட்கும் தண்டனை வேறேயா?"

"யார், அப்பா, அங்கே?" என்றான் வந்தியத்தேவன்.

"நான்தான் பைத்தியக்காரன்!" என்று பதில் வந்தது.

"அப்பா! பைத்தியக்காரா! கருணை கூர்ந்து உன் பாட்டை நிறுத்து!"

"ஏன்? என்னுடைய பாட்டு உனக்குப் பிடிக்கவில்லையா?"

"பிடிக்காமல் என்ன? உன் பாட்டு எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிக்கிறது!"

"பாட்டை நிறுத்திய பிறகு ரொம்பப் பிடிக்கிறதாக்கும்!"

"அப்படி ஒன்றும் நீ பைத்தியக்காரனாகத் தெரியவில்லை. இந்தப் பாட்டை உனக்கு யார் சொல்லிக் கொடுத்தது?"

"நீ இப்போது இருக்கும் அறையில் சில காலத்துக்கு முன்பு இன்னொரு வாலிபன் வந்திருந்தான். சில நாட்கள்தான் அவன் இருந்தான். அப்போது அவன் ஓயாமல் இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டிருந்தான்! எனக்கு அது பாடமாகிவிட்டது" என்றான்.

வந்தியத்தேவன் உடனே அந்த வாலிபன் சேந்தன் அமுதன்தான் என்று தீர்மானித்துக்கொண்டான். தான் தப்பித்துச் செல்வதற்கு உதவி செய்ததற்காகச் சேந்தன் அமுதனைச் சின்னப் பழுவேட்டரையர் சில நாட்கள் பாதாளச் சிறையில் அடைத்திருந்தார் என்பதைக் கேள்விப்பட்டிருந்தான். இந்த அறையில் இருந்தவன் அவனாகத்தான் இருக்க வேண்டும். ஆகா! சேந்தன் அமுதன் எவ்வளவு தங்கமான பிள்ளை! எத்தகைய அருமையான சிநேகிதன்!

"இந்த அறையில் சிலநாள் இருந்த வாலிபன் யார்? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

"தெரியாமல் என்ன? அவன் பெயர் சேந்தன் அமுதன். யாரோ ஒரு ஊமைச்சியின் மகனாம்! உண்மையில் அவன் யார் என்பது மட்டும் உலகத்துக்குத் தெரிந்தால்...?

"தெரிந்தால் என்ன ஆகும்?"

"உலகமே தலைகீழாகப் போய் விடும்!"

"உலகம் தலை கீழானால், நமக்கு இந்தப் பாதாளச் சிறையிலிருந்து விடுதலை கிடைக்குமா?"

"நிச்சயமாய்க் கிடைக்கும்?"

"அப்படியானால் அவன் யார் என்றுதான் சொல்லேன்?"

"அவ்வளவு சுலபமாக உன்னிடம் சொல்லி விடுவேனா? அதைச் சோழ சக்கரவர்த்தியின் காதிலே மட்டுந்தான் சொல்வேன்! இன்னும் சுந்தர சோழர் தானே சோழ நாட்டின் சக்கரவர்த்தியாயிருக்கிறார்?" என்று கேட்டான்.

"ஆமாம்; அதைப் பற்றி உனக்கு என்ன சந்தேகம்!"

"சில நாளைக்கு முன்பு இங்கே சில மாறுதல்கள் நடந்தன. பழைய சிறைக் காவலர்கள் எல்லாம் மாறிப் புதிய சிறைக் காவலர்கள் வந்தார்கள். தங்க நாணய வார்ப்படச் சாலையை மூடி விட்டார்கள். அதை மூடாதிருந்த போது, கன்னார்கள் வேலை செய்யும் சப்தம் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருக்கும்."

"ஏன் மூடி விட்டார்கள்! ஏன் காவற்காரர்கள் மாறினார்கள்?"

"சின்னப் பழுவேட்டரையர் கோட்டைக் காவலை விட்டு ஓடிப் போய் விட்டாராம். கொடும்பாளூர் வேளார் தஞ்சைக் கோட்டையைப் பிடித்துக் கொண்டாராம். காவற்காரர்களின் பேச்சிலிருந்துதான் இவைகளைத்

தெரிந்துகொண்டேன்...''

''ஓகோ! அதுவும் அப்படியா?'' என்றான் வந்தியத்தேவன். உண்மையிலேயே அவன் பெரு வியப்படைந்தான்.

கொடும்பாளூர் பூதி விக்கிரமகேசரி தன்னை நன்கு சோதித்து அறிந்தவர், அவர் ஒரு வேளை தன் பேச்சை நம்பித் தன்னை விடுதலை செய்வாரா? – அவரால்தான் அது எப்படி முடியும்? யாராலேதான் முடியும்? இளவரசர் கரிகாலரைக் கொன்றவன் என்று குற்றம் சாட்டப் பட்டவனை யார்தான் எளிதில் விடுதலை செய்து விட முடியும்?

''என்ன, தம்பி, மௌனமாகி விட்டாய்? மறுபடியும் பாடத் தொடங்கட்டுமா?'' என்று பைத்தியக்காரன் தொண்டையைக் கனைத்தான்.

''வேண்டாம், வேண்டாம்! நீ கூறியதைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன். சேந்தன் அமுதன் ஊமைச்சியின் மகன் அல்லவென்று சொன்னாயே? பின், அவன் யாராயிருக்கும் என்று யோசிக்கிறேன்.''

''அந்தப் பேச்சை விட்டு விட்டு வேறு ஏதாவது சொல்லு!''

''உன்னை எதற்காகப் பைத்தியக்காரன் என்று சொல்லிக்கொள்கிறாய்?''

''இங்கே வந்தவர்கள் எல்லாரும் என்னைப் பைத்தியக்காரன் என்று சொல்லுவதினாலேதான்.''

''ஏன் அப்படி அவர்கள் எல்லாரும் சொல்லுகிறார்கள்?''

''ஈழத்தில் பாண்டிய வம்சத்து மணிமகுடமும் தேவேந்திரன் அளித்த இரத்தின ஹாரமும் இருக்குமிடம் எனக்குத் தெரியும். என்னை விடுதலை செய்தால் அவை இருக்குமிடம் சொல்வேன் என்று இங்கே வருகிறவர்களிடமெல்லாம் நான் சொல்வதுண்டு. அதற்காக என்னைப் பைத்தியம் என்கிறார்கள்.''

''உன்னைப் பைத்தியம் என்கிறவர்கள்தான் உண்மைப் பைத்தியக்காரர்கள்.''

''நீ என் வார்த்தையை நம்புகிறாயா?''

''பரிபூரணமாக நம்புகிறேன். ஆனால் நான் நம்பி என்ன பயன்! உனக்கு என்னால் ஒரு உதவியும் செய்ய முடியாதே?''

''அப்படிச் சொல்லாதே! நீ இப்போது இருக்கும் அறையில் அடைக்கப் படுகிறவர்கள் எல்லாரும் சீக்கிரத்தில் விடுதலை செய்யப்படுவது வழக்கமாயிருந்து வருகிறது'' என்று சொன்னான்.

''அது என்ன வழக்கம்? சில உதாரணங்கள் சொல், பார்க்கலாம்.''

''யாரோ வைத்தியர் மகன் ஒருவன், பினாகபாணி என்கிறவன், உன் அறையில் அடைக்கப்பட்டிருந்தான். அவனைப் பழுவூர் ராணி நந்தினி தேவி வந்து விடுதலை செய்து அழைத்துப் போனாள். அந்த அறையிலேயே சேந்தன் அமுதன் இருந்தான். அவனைக் குந்தவை தேவியும் கொடும்பாளூர் இளவரசியும் வந்து விடுதலை செய்தார்கள்...''

வந்தியத்தேவன் ஒரு நெடிய பெருமூச்சு விட்டு விட்டு, ''அந்த மாதிரி என்னை வந்து விடுதலை செய்ய எந்த ராணியும் இளவரசியும் வர மாட்டார்கள்!'' என்றான்.

''அப்படியானால் நானே உன்னை விடுதலை செய்கிறேன்'' என்றான் அடுத்த அறையில் இருந்தவன்.

''இப்போதுதான் நீ பைத்தியக்காரன் போலப் பேசுகிறாய்!'' என்றான் வல்லத்திளவரசன் வந்தியத்தேவன்.

''இல்லை; என் வார்த்தையை நம்பு!''

''வேறு வழியில்லை; உன்னை நம்பித்தான் தீர வேண்டும்.''

''அப்படியானால், இன்றிரவு காவலர்கள் வந்து நமக்கு உணவு அளித்து விட்டுப் போகும் வரையில் பொறுமையுடன் இரு!'' என்றான் பைத்தியக்காரன் என்று பெயர் வாங்கியவன்.

ஐம்பத்து ஆறாம் அத்தியாயம்

"சமய சஞ்சீவி"

அன்றிரவு கடைசிக் காவலன் வந்து விட்டுப் போனதும், வந்தியத்தேவன் அடுத்த அறையிலிருந்த பைத்தியக்காரன் என்ன சொல்லப் போகிறான் என்று அறிய அவலுடன் காத்திருந்தான்.

அந்த அறையின் ஒரு பக்கத்துச் சுவரில் எலி பிறாண்டுவது போல் ஏதோ சப்தம் கேட்டது. வந்தியத்தேவனுக்குப் புலி சிங்கத்தினிடம் பயமில்லை; ஆனால் பூனைகளுக்கும் எலிகளுக்கும் பயம். இரவெல்லாம் அந்த இருளடர்ந்த அறையில் எலிகளுடன் காலங் கழிக்க வேண்டுமோ என்று கவலைப்பட்டவனாக, "பைத்தியக்காரா! தூங்கிப் போய் விட்டாயா?" என்று கேட்டான்.


அதற்குப் பதில் ஒன்றும் வரவில்லை.

எலி பிறாண்டும் சப்தம் மட்டும் பொதுவாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

சற்று நேரத்துக்கெல்லாம் சுவரிலிருந்து சில கற்கள் பெயர்ந்து விழுந்து துவாரம் ஒன்று உண்டாயிற்று.

அதன் வழியாகப் பைத்தியக்காரன் குரல், "அப்பனே! தூங்கி விட்டாயா?" என்று கேட்டது.

"இல்லை; தூங்கவில்லை. உனக்காகத்





தான் காத்திருக்கிறேன். இது என்ன வேலை?" என்றான் வந்தியத்தேவன்.

"இது ஆறு மாதத்து வேலை. அதற்கு முன்னால் என் கைச் சங்கிலியைத் தறித்துக் கொள்வதற்கு ஆறு மாதம் பிடித்தது" என்றான் பைத்தியக்காரன்.

சற்று நேரத்துக்கெல்லாம் துவாரத்தை இன்னும் பெரிதாகச் செய்துகொண்டு வந்தியத்தேவனுடைய அறைக்குள்ளே அவன் புகுந்தான்.

வந்தியத்தேவன் அவனுடைய கரங்களைப் பிடித்து இறக்கி விட்ட பிறகு, "இவ்வளவு கஷ்டப்பட்டு இந்தச் சுவரில் துவாரம் செய்தாயே? இதில் என்ன பயன்? வெளிச்சுவரில் துவாரம் போட்டாலும் பயன் உண்டு!" என்றான்.

"இங்கிருந்து வெளிச்சுவர் என்பதே கிடையாது. புலிக்கூண்டு அறையின் வழியாகத்தான் வெளியேற முடியும். இந்த அறை சில சமயம் காலியாக இருப்பதுண்டு. அப்போது பூட்டப்படாமலுமிருக்கும். ஆகையால், என் அறையிலிருந்து தப்பிச் செல்வதைவிட இங்கிருந்து தப்புவது சுலபம்."

"இன்றைக்கு வந்த என்னை நம்பி இதை வெளிப்படுத்தி விட்டாயே? நான் உன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டால் என்ன செய்வாய்?"

"ஒருவனை நம்பலாம், நம்பக்கூடாது என்பதைக் குரலிலிருந்தே கண்டுபிடிக்கலாம். சேந்தன் அமுதனை நம்புவேன்; ஆனால் பினாகபாணியை நம்ப மாட்டேன். உன் குரலிலிருந்து உன்னை நம்பலாம் என்றும் முடிவு செய்தேன். மேலும் தப்பிச் செல்லும் காரியம் இப்போது நடந்தால்தான் நடந்தது. சரியான சந்தர்ப்பம் இதுதான்!"

"அது ஏன்?"

"காவற்காரர்கள் மாறியிருக்கிறார்கள் என்று சொன்னேன் அல்லவா? அவர்களில் இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். புலிக்கூண்டைத் திறந்து விடுவதைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். 'புலிக் கூண்டைத் திறக்கும்போது நம் பேரிலேயே புலி பாய்ந்துவிட்டால் என்ன செய்கிறது?' என்று ஒருவன் கேட்டான். அதற்கு மற்றவன் 'சாக வேண்டியதுதான்!' என்றான். இதிலிருந்து அவர்கள் புலிக்கூண்டைத் திறக்க மாட்டார்கள் என்பது நிச்சயம். புதிய காவற்காரர்களாதலால் திடீரென்று பாய்ந்து சென்று தப்பித்துக் கொள்ளலாம் என்று என் எண்ணம். எப்படியிருந்தாலும், இங்கேயே கிடந்து சாவதைக் காட்டிலும் விடுதலைக்கு ஒரு முயற்சி செய்து பார்ப்பது நல்லதல்லவா?"

"உண்மைதான்!"

"ஒருவனாக முயற்சி செய்வதைக் காட்டிலும் இரண்டு பேராக முயற்சி செய்வது எளிது. நீ என்னைப் போல் இல்லை; புதிதாக வந்தவன். நல்ல திடகாத்திரனாயிருக்கிறாய். இரண்டு காவலர்களை நாம் இருவரும் கட்டிப் போட்டு விட்டு அவர்களிடமிருந்து சாவிகளைப் பிடுங்கிக் கொண்டு வெளியேறலாம் அல்லவா?"

"நல்ல யோசனைதான். எப்பொழுது புறப்படலாம்?"

"கொஞ்சம் பொறு; சரியான சமயம் பார்த்துச் சொல்கிறேன்."

"நானும் ரொம்பக் களைத்துப் போயிருக்கிறேன். ஒருநாள் - இரண்டு நாள் போனாலும் நல்லதுதான்.

பிறகு, அந்தப் பைத்தியக்காரன் அவன் சிறையிலிருந்த காலத்தில் வெளி உலகில் நடந்த முக்கிய சம்பவங்களையெல்லாம் வந்தியத்தேவனிடம் கேட்டுத் தெரிந்துகொண்டான்.

ஆதித்த கரிகாலர் இறந்தார் என்று கேட்டதும், "ஆகா! அப்படியானால் நாம் இப்போது வெளியேறுவ்து மிக முக்கியம்!" என்றான்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"அடுத்தபடி இராஜ்யத்துக்கு யாரையாவது இளவரசுப் பட்டம் கட்ட வேண்டும் அல்லவா?"

"இளவரசுப் பட்டம் என்ன? சக்கரவர்த்தி உடல் நோயினாலும் மனச் சோர்வினாலும் பீடிக்கப்பட்டிருக்கிறார். இராஜ்யப்பாரத்தை அடியோடு விட்டு நீங்க விரும்புகிறார்!"

"யாருக்கு மகுடம் சூட்டுவதாகப் பேச்சு நடக்கிறது?"

"சிற்றரசர்கள் சிலர் மதுராந்தகருக்குப் பட்டம் கட்ட விரும்புகிறார்கள். மற்றும் சிலர் பொன்னியின் செல்வருக்கு மகுடம் சூட்ட விரும்புகிறார்கள்!"

"சக்கரவர்த்தியின் கருத்து என்ன?"

"இராஜ்யத்தில் வீண் சண்டை ஏற்

படாமல் தடுக்கும் பொருட்டு மதுராந்தகர் சிங்காதனம் ஏறுவதையே சக்கரவர்த்தி விரும்புகிறாராம்.

"அப்படியானால், நாம் சீக்கிரத்தில் வெளியேற வேண்டியது ரொம்ப ரொம்ப அவசரமாகிறது!" என்றான் அந்தப் பைத்தியக்காரன்.

பிறகு, அவன் ஈழ நாட்டில் பாண்டியர் மகுடமும் இரத்தின ஹாரமும் இருக்குமிடம் பற்றித்தான் தெரிந்து கொண்ட விதத்தை விவரமாகக் கூறினான்.

சோழ குலத்து இரகசியத்தைப் பற்றி மறுபடியும் வந்தியத்தேவன் கேட்டதற்கு, "அதை இப்போது சொல்ல மாட்டேன். இருவரும் தப்பிப் பிழைத்து வெளியேறினோமானால் சொல்லுவேன். இல்லாவிடில் அந்த இரகசியம் என்னோடு மடிய வேண்டியது தான்!" என்றான்.

வந்தியத்தேவனுடைய உள்ளம் தீவிரமாகச் சிந்தனையில் ஆழ்ந்தது. அந்தப் பைத்தியக்காரன் சொல்லக் கூடிய அத்தகைய இரகசியம் என்னவாயிருக்கும் என்று ஊகித்துப் பார்த்தான். பற்பல நிழல் போன்ற நினைவுகள் அவனுடைய மனத்திரையில் தோன்றி மறைந்தன.

திடீரென்று வைத்தியர் மகனைப் பார்த்ததும் வந்தியத்தேவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. தானும்



அடுத்த அறையில் உள்ளவனும் சேர்ந்து செய்திருக்கும் யோசனைக்கு இவன் தடை போட்டு விடுவானோ என்று கவலைப்பட்டான். பினாகபாணியின் நயவஞ்சகப் பேச்சை அவன் நம்பவில்லை. அவனும் பைத்தியக்காரனும் இவ் விஷயத்தில் ஒரு மனமுடையவர்களாயிருந்தார்கள். ஏதோ துர் எண்ணத்துடனே தான் பினாகபாணி வந்திருக்கிறான் என்று முடிவு செய்து கொண்டார்கள். ஒருவரைச் சிறையில் விட்டு விட்டு இன்னொருவர் வெளியேறிப் போவதில்லையென்று சபதம் எடுத்துக்கொண்டார்கள். மறுபடியும் பினாகபாணி வந்தால் என்ன செய்கிறது என்றும் தீர்மானித்துக் கொண்டார்கள்.

எனவே, இரண்டாவது தடவை பினாகபாணி வந்தபோது இருவரும் முன் ஜாக்கிரதையாக இருந்தார்கள். பைத்தியக்காரனிடம் முத்திரை மோதிரத்தைக் காட்டி அவனுடைய இரகசியத்தைச் சொல்லும்படி வைத்தியர் மகன் கேட்டுக்கொண்டிருந்த போது வந்தியத்தேவன் இரண்டு அறைகளுக்கும் நடுவில் சுவரில் ஏற்கெனவே செய்திருந்த துவாரத்தின் வழியாக ஓசைப்படாமல் புகுந்து அந்த அறைக்குள்ளே வந்தான்.

பினாகபாணி திரும்பி அவனைத் தாக்கவே, இருவரும் துவந்த யுத்தம் செய்தார்கள். வேறு சமயமாயிருந்தால் வந்தியத்தேவன் வைத்தியர் மகனை ஒரு நொடியில் வென்று வீழ்த்தியிருப்பான். மேலே நெருப்புச் சுட்ட புண்கள் இன்னும் நன்றாக ஆறாதபடியாலும், காளாமுக ராட்சதன் அவனுடைய தொண்டையைப் பிடித்து அமுக்கிய இடத்தில் இன்னும் வலித்துக்கொண்டிருந்தபடியாலும் துவந்த யுத்தம் நீடித்தது. அச்சமயத்தில் பைத்தியக்காரன் கையில் சங்கிலியுடன் வந்து பினாகபாணியின் கழுத்தில் போட்டு இறுக்கினான். பினாகபாணி கீழே விழுந்தான்.

பிறகு, இருவருமாக அவனை அந்த அறையின் சுவர்களில் இருந்த இரும்பு வளையங்களுடன் சேர்த்துக்கட்டினார்கள். அப்படிக் கட்டும்போதே வந்தியத்தேவன், "பினாகபாணி! நாம் இருவரும் சக்கரவர்த்தியைக் குணப்படுத்துவதற்காகச் சஞ்சீவி மூலிகையைத் தேடி ஈழநாட்டுக்குப் போனோமே, நினைவு இருக்கிறதா? அப்போது நாம் சஞ்சீவி கொண்டு வருவதில் வெற்றி பெறவில்லை. ஆனால் இப்போது நீ எங்களுக்குச் 'சமய சஞ்சீவி'யாக வந்து சேர்ந்தாய்! இந்த உதவிக்காக மிக்க வந்தனம். வைத்தியர் மகனாகிய நீ இனிமேல் வைத்தியத்துடன் நிற்பது நல்லது. ஒற்றன் வேலையில் தலையிட்டு ஏன் வீணாகக் கஷ்டத்தை விலைக்கு வாங்கிக் கொள்கிறாய்?" என்று சொன்னான்.

பினாகபாணி அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. திடீரென்று நேர்ந்த இந்த விபத்தினால் அவன் பேச்சிழந்து நின்றான். ஆனால் அவனுடைய கண்கள் மட்டும் கோபக் கனலைக் கக்கினவென்பது அவன் கொண்டு வந்து கீழே போட்டிருந்த தீவர்த்தி வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது.

பின்னர் இருவரும் வைத்தியர் மகன் கொண்டு வந்திருந்த அதிகார முத்திரையைக் கைப்பற்றிக்கொண்டார்கள். பினாகபாணி தலையில் சுற்றியிருந்த துணியை எடுத்து வந்தியத்தேவன் தன் தலையில் சுற்றிக் கொண்டான்.

அந்த அறையிலிருந்து வெளி வந்து கதவைப் பூட்டினார்கள். பிறகு மெள்ள மெள்ள நடந்து பாதாளச் சிறையின் படிக்கட்டில் ஏறினார்கள். வழி சரியாகத் தெரியாதவர்களாதலால், நிதானமாக அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு நடந்தார்கள். புலிகளின் உறுமல் சப்தம் கேட்டதும் இருவருக்கும் மேலே போகச் சிறிது தயக்கமாகவே இருந்தது. ஒருவேளை, தாங்கள் தப்புவதை எப்படியோ அறிந்து புலியைக் கூண்டிலிருந்து அவிழ்த்து விட்டிருப்பார்களோ?

வந்தியத்தேவனும் பைத்தியக்காரனும் புலிக்கூண்டு அறைக்குள்ளே மெதுவாக எட்டிப் பார்த்தார்கள்.

அந்த அறையில் அச் சமயம் ஒரே ஒரு காவலன்தான் இருந்தான். உறுமிய புலிகள் இருந்த கூண்டை அவன் உற்று நோக்கிக் கொண்டிருந்தான். ஒருவேளை புலிக் கூண்டைத் திறந்து புலிகளைத் தங்கள் மீது ஏவி விட அவன் யோசிக்கிறானா, என்ன? அச்சமயம் வைத்தியர் மகன் கூச்சல் போட ஆரம்பித்திருந்தான். அந்தக் கூச்சல் இக்காவலனுடைய சந்தேகத்தைக் கிளப்பி விட்டிருக்கலாம் அல்லவா? பினாகபாணியின் வாயில் துணியை அடைத்து விட்டு வராதது எவ்வளவு தவறாகப் போயிற்று?

(தொடரும்)



ஆளைவிடுடா சாமி!

குறுகிய காலத்தில் ஏராளமாகச் சம்பாதிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, சில டாக்டர்கள் எப்படி எல்லாம் நடந்து கொள்கிறார்கள் என்று விலாவாரியாக ஒரு புத்தகம் முழுக்க விளாசியிருக்கிறார் டாக்டர் கே.ஆர். சேதுராமன், எம்.டி. இவர் புதுவை ஜிப்மெர் மருத்துவமனையில் பணி புரிகிறார். நூலின் சில பகுதிகள் :

முப்பது வயது ஷீலா பள்ளி ஆசிரியை. பெல்விக் பகுதியில் வலி என்று, மகப்பேறு மருத்துவரிடம் சென்றார். அவருடைய கேஸ் குறிப்புக்களைப் படித்துப் பார்த்த டாக்டர் சொன்னார் : "அடுத்த கட்டம் என்ன என்று தெரிந்துவிட்டது. உங்கள் கருப்பையை எடுத்து விட வேண்டியது தான்!"

"ஆனால், டாக்டர்..."

"என்ன ஆனால், போனால்... உங்களுக்கு ஒவ்வொரு மாதமும் பயங்கர வலி இருக்கிறதே!"

"மருந்து சாப்பிட்டு, வலி இப்போது எவ்வளவோ குறைந்திருக்கிறது, டாக்டர்..."

"உங்களுக்குத்தான் ஏற்கெனவே இரண்டு

டாக்டர்களைப் பற்றி டாக்டரே எழுதிய புத்தகம்!



குழந்தைகள் இருக்கிறார்கள். இன்னும் எதற்கு?"

"இல்லை டாக்டர், எனக்கு அறுவைச் சிகிச்சை வேண்டாம் என்று பார்க்கிறேன்!"

"உங்களுக்கு ஒன்றும் தெரியாது. வயது ஆனால் ட்யூமர் அது இது என்று வந்து விடும். இப்போதே ஒழித்துக் கட்டிவிட்டு, சந்தோஷமாக வாழ்க்கையை நடத்துவீர்களா, அதைவிட்டு..."

"ஆனால், டாக்டர்..."

"போதும், போதும்! நாளைக்கு உங்கள் கணவரை அழைத்து வாருங்கள். அவரிடம் பேசி விடுகிறேன். அடுத்த வாரம் ஆபரேஷன்!"

"கருப்பை நீக்கும் ஆபரேஷன் நல்லதை விடக் கெடுதலையே செய்யும். 90 சதவிகித ஹிஸ்டரக்டமி ஆபரேஷன்கள் தேவையில்லாமல் செய்யப்படுகின்றன. இன்னும் மோசம் என்னவென்றால், செய்த ஆபரேஷன்களால் பின்னாளில் தொல்லைதான் அதிகம். நம்மைப் போன்ற டாக்டர்கள் பெண்களை இப்படிக் கூறு போடுவதை நிறுத்துவது நல்லது. ஆனால் எல்லாப் பெண்களும் தங்கள் டாக்டர்களை நேருக்கு நேராக நின்று அவர்கள் கண்களைப் பார்த்து, என்னைத் தொடச் சம்மதிக்க மாட்டேன் என்று திடமாகக் கூறுகிற நாள் வரும் வரை, ஒரு மாற்றமும் ஏற்படப் போவதில்லை." இதைச் சொல்லியிருப்பவர் டாக்டர் ஸ்டான்லி வெஸ்ட், 1994ல்!





அமெரிக்காவில் ஒரு செனட் கமிட்டி அறிக்கையில், 2.4 மில்லியன் அறுவைச் சிகிச்சைகள் தேவையற்றுச் செய்யப்படுவதாகவும், இவற்றை நிறுத்தினால் 4 பில்லியன் டாலர்கள் (சுமார் 15000 கோடி ரூபாய்) வருடத்துக்கு மிச்சமாகும் என்றும், ஒரு பார்வையாளர் குழு நியமித்து, ஆபரேஷன் தேவையா இல்லையா என்று கண்காணித்தால் இது மூன்றில் இரண்டு பங்கு குறைந்துவிடும் என்றும் சொல்லியிருக்கிறார் எஸ்.ஃபுல்டர். வருடம் 1991.

அமெரிக்காவிலேயே இந்தக் கதி. தங்களுக்கு என்ன தெரிய வேண்டும், தங்கள் உரிமைகள் என்னென்ன என்று அறிந்த சமூகத்தினர் வாழும் நாட்டிலேயே இந்த நிலைமை என்றால், டாக்டர் சொல்லுவதை வேத வாக்காக எடுத்துக் கொள்ளும் சராசரி இந்திய நோயாளியின் கதியைப் பற்றி நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது.

டாக்டரின் கடன் சுமை
நோயாளியின் தலையில்!

என்னுடைய மாணவன் மருத்துவக் கல்விப் படிப்பு முடிந்ததும், ஒரு தனியார் மருத்துவமனையில் வேலைக்குச் சேர்ந்தான். அங்கே நோயாளிகளிடம் பணத்தைப் பிடுங்குகிற கோரத்தைத் தாங்கிக் கொள்ள அவனால் முடியவில்லை. 'மாதத்தின் பிற்பகுதியில் பிரசவத்துக்கு வருகிற எந்தப் பெண்ணும் நார்மல் டெலிவரி ஆகி வீட்டுக்குப் போக மாட்டார். எல்லாம் சிஸேரியன்தான். அடுத்த மாத வங்கிக் கடன் கட்டுவதற்குப் பணத்தைத் தயார் செய்தாக வேண்டாமா! இதை எடுத்துச் சொன்ன என் மாணவரிடம், 'இருந்தால் இரு. பிடிக்காவிட்டால் போய் விடு!' என்றதாம் மருத்துவமனை நிர்வாகம்.

இந்த நிலைமையைப் பற்றி, தனியார் மருத்துமனைகளில் பணி புரியும் என் இதர டாக்டர் நண்பர்களிடம் நான் விவாதிப்பது உண்டு. 'நோயாளிகள் திருப்தி அடைகிறார்

கள். நமக்கு நமது ஃபீஸ் கிடைத்துவிடுகிறது. இதில் குறை சொல்ல என்ன இருக்கிறது?' என்று கேட்பார்கள்!

கவனிப்பு பிரமாதம், ஆனால் காசெல்லாம் போச்சு!

ஒரு விவசாயி நீரிழிவு நோய் வந்து அவஸ்தைப்பட்டார். அவரைக் கவனித்த டாக்டர் அடிக்கடி அந்தப் பரிசோதனை, இந்தப் பரிசோதனை என்று அவருடைய சர்க்கரை அளவைக் குறைக்க ஏராளமான டெஸ்ட்டுகள் செய்தார். விலை உயர்ந்த மருந்துகளாக வாங்கிச் சாப்பிடச் சொன்னார். விவசாயிகிட்டத்தட்ட போண்டியாகிற நிலைமை. 'டாக்டர் ஐயா, என்னோட வியாதியைவிட, என்னோட குடும்ப நிலைமையைக் கொஞ்சம் கவனியுங்க ஐயா!' என்று அழத் தொடங்கினார் விவசாயி.

மூன்றில் இரண்டு பங்கு கிராமத்துக் குடும்பங்கள் கடனில் மூழ்கித் தத்தளிக்க அவர்கள் நோய்க்காகச் செலவிடும் தொகை தான் காரணம் என்று ஏ.கே பட்கே, 1995ல் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"எனக்குப் புது விதமா ஒரு மிரட்டல் கடிதம் வந்திருக்கு சார்."

"என்னன்னு?"

"இதே மாதிரி பத்துப் பேரை மிரட்டி நான் கடிதம் போடணுமாம்."

- பர்வதவர்த்தினி



முதுகு வலி முழுதும் போச்சு!

அபர்ணாவுக்கு 40 வயது. கீழ் முதுகு வலியால் அவஸ்தைப்பட்டார். கணவர் வங்கி அதிகாரி. பல ஸ்பெஷலிஸ்ட்டுகளிடம் மாற்றி மாற்றிக் கூட்டிக் கொண்டு போனார். மருத்துவச் செலவை வங்கி கொடுத்துவிடும் என்பதால் ஒரு பெரிய தனியார் மருத்துவமனைக்கு மனைவியை அழைத்துக் கொண்டு போனார். ஒரு முழு செக் அப் நடத்தினார்கள். குடல் அருகே ஒரு சந்தேகத்துக்கிடமான பகுதி இருப்பதாகத் தெரிந்தது. ஒரு நீடில் பயாப்ஸி பண்ணிப் பார்த்து விட வேண்டும் என்றார்கள். அபர்ணாவின் கணவர் அவரை அழைத்துக் கொண்டு தங்கள் குடும்ப டாக்டரிடம் போய், நடந்ததை எல்லாம் சொன்னார். 'உன் உடம்பு வெயிட் அதிகம் ஆகாமல் கவனி. மற்றதை எல்லாம் மறந்துவிட்டு ஹாய்யாக இரு!' என்றார் அபர்ணாவிடம். ஆறே மாதங்களில் அபர்ணாவின் முதுகுவலி போயே போச்சு!

ஆளைவிடுடா சாமி!

பீலிக்கு 50 வயது. மூன்று நாளாகச் சிறுநீர் கழிக்க முடியவில்லை. மருத்துவக் கல்லூரி - மருத்துவமனைக்குப் போனார். ட்யூடி மருத்துவர் ஒரு யூராலஜிஸ்ட்டிடம் போகச் சொன்னார். சிறுநீர் பாதையில் தடை இருக்கிறது என்று. கைனகாலஜிஸ்ட்டிடம் போகச் சொன்னார் அவர். கருப்பையின் கழுத்துப் பகுதியில் கான்சர்! கேஸ் எழுதி அட்மிட் செய்கிற நிலைமை வந்தது. 'அவருக்கு யூரேமியா. என் கேஸ் இல்லை' என்றார் மகளிர் நல மருத்துவர். 'அவருக்கு யூரியா லெவல் அதிகம் இருக்கிறது. முதலில் அதைக் குறைத்து விட்டு என்னிடம் வரட்டும்!' என்றார் யூராலஜிஸ்ட். 'இதென்ன கூத்து! சிறுநீர்ப் பாதை தடை நீக்கினால் அல்லாமல், யூரியா லெவல் எப்படிக் குறையும்?' என்றார் பொது மருத்துவர்.

கன்னா பின்னா என்று அலைக்கழிக் கப்பட்டதில் பீலிக்கு அசாத்திய கோபம். 'நான் வீட்டுக்குப் போய் நிம்மதியாகச் சாகிறேன். ஆளை விடுங்கள்!' என்று நடையைக் கட்டினார். ரொம்ப நாள் கழித்து டாக்டர்கள் அவர் மருத்துவமனையில் இல்லாததைக் கண்டுபிடித்து, 'நோயாளி சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டார்' என்று எழுதிக் கையைக் கழுவிவிட்டார்கள்!


'மருத்துவர்களை நன்றாகப் பயிற்றுவித்து, மக்களை ஆரோக்யமாகப் பாதுகாக்க அரசாங்கமே என்றைக்கு அக்கறை எடுத்துக் கொள்ளுகிறதோ, அதுவரை நோயாளியின் அவஸ்தையை வைத்துக் கொண்டு பிழைப்பை நடத்தும் இந்த மோசமான நிலைமைதான் நீடிக்கும்' என்று சொல்லி இருக்கிறார் பெர்னாட் ஷா. 1906லேயே!

அவசியம் படிக்க வேண்டிய புத்தகம்.

நன்றி : 'Trick or Treat - A Survival Guide to Health Care.'

தொகுப்பு : **சித்தார்த்**

தில்லைவனக்



• தில்லைவனம்

காட்சி 1:

பிச்சாவரம் ஃபீல்ட் ட்ரிப்' என்றதுமே வகுப்பு உற்சாகமாயிற்று. பரணிக்கு மட்டும் பிடிக்கவில்லை.

''எங்களைப் போன்ற விவசாய மாணவர்களுக்கு அங்கே என்ன சார் இருக்கு...?'' துறைத் தலைவரிடமே அலுத்துக்கொண்டார் பரணி.

''பிச்சாவரத்துக்கு வா; பதில் சொல்றேன்...!''

காட்சி 2:

சிதம்பரத்திலிருந்து பதினைந்து கி.மீ. தொலைவில் பிச்சாவரம். கோவை வேளாண் பல்கலைக் கழக பட்ட மேற்படிப்பு இரண்டாமாண்டு மாணவர்கள் முகாமிட்டிருந்தார்கள்.

பேராசிரியர் மாணவர்களிடம் கேட்டார்:

''உங்களுக்கு என்ன பிடிச்சிருக்கு இங்கே...?''

''பேக் வாட்டர்ஸ்!''

''போட்டிங் போறது ஜாலியாயிருக்கு...''

''கும்பல் கும்பலா பறவைகள்...''

தலைக்குத் தலை பதில்கள். பரணி மட்டும் மௌனமாக தில்லைவனக் காடுகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''பரணி...! உனக்கு?'' பேராசிரியர் கேட்டார்.

''இந்த மாங்குரோவ் தாவரங்கள் சார்...''

''சங்கத் தமிழிலக்கியத்தில் தில்லை வனக் காடுகள் என்று குறிப்பிடப்படும் இந்த மாங்குரோவ் காடுகள் இப்போது அழிவின் விளிம்பிலிருக்கின்றன தெரியுமா...'' என்றார் பேராசிரியர். ''மன்னார் வளைகுடா, புலிக்காடு, முத்துப்பேட்டை, அடையாறு, எண்ணூர் என்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கடற்கரையையொட்டி இருந்த இந்த வனங்கள் இன்று அழிந்துவிட்டன. விளைவு, அங்கெல்லாம் நில அரிப்பு...'' என்று பேராசிரியர் தொடர்ந்தார்.

பரணியின் மூளை வேறு பாதையில் ஓடிக் கொண்டிருந்தது.

'காலம் காலமாக இந்தக் காடுகள் மட்டும் எப்படி உப்பு நீரில் உயிர் வாழ்கின்றன? ஒருகால் இந்த மரங்களின் மரபணுக்களைத் தனியே எடுத்துப் பார்த்தால் விடை கிடைக்குமோ...? அந்த மரபணுக்களை பிற பயிர்களின் மரபணுக்களோடு சேர்த்து உவர் நிலத்தில் விளையக் கூடிய நெல், கரும்பு, வாழை பயிரிட முடியுமோ? உப்புத் தண்ணீரில் சாகுபடி சாத்தியமாகுமோ? அது மட்டும் சாத்தியமானால் இன்னொரு விவசாயப் புரட்சியல்லவா...?'

காட்சி 3:

பட்டமேற்படிப்பு முடித்து, தில்லை வன ஆராய்ச்சி கனவுகளோடு சென்னை வந்தார் பரணி. எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம் அவர் சொன்னதைப் பொறுமையாய்க் கேட்டது. இரு கரம் நீட்டி வரவேற்றது. பரணியின் கண்களில், அவர் கனவுகளையும் நினைவுகளையும் ஆக்கிரமித்த உப்புநீர் பெருகியது!

காட்சி 4 (ஃபிளாஷ்பேக்):

திண்டுக்கல் பக்கத்தில் அம் மைய நாயக்கனூர் என்ற குக்கிராமம்.



• உப்பு நீரில் புகையிலை...!

பரணியின் அப்பா மிட்டாய் பாக்கெட்டுகள் விற்று சொற்ப வருமானத்தில்

காதலன்!

குடும்பம் நடத்துகிறார். பல குழந்தைகளுள் ஒருவனான பரணி கஷ்டப்பட்டு படித்து முன்னேறி விவசாயக் கல்லூரியில் இடம் பெறுகிறான். பிச்சாவரம் ஃபீல்டு ட்ரிப். கரபுன்னை மரங்கள். உப்புநீர் தாவரங்கள் என்று அடுத்தடுத்து அலைகள் அடித்து ஆராய்ச்சிக் கூடத்தில் கொண்டு நிறுத்திவிட்டன.



• பரணி

காட்சி 5:


பரணி உழைத்தார். தில்லைவன மரங்களின் மரபணுக்களின் தொகுப்பைப் பிரித்தெடுத்தாகிவிட்டது. தொகுப்பில் எந்த வகை அணுக்கள் உப்பு நீரைத் தாங்கும் தன்மை உடையவை என்கிற மர்ம முடிச்சை அவிழ்க்க வேண்டியதுதான் பாக்கி. ஒவ்வொரு வகையாய் எடுத்து புகையிலைச் செடியின் உயிரணுக்களோடு இணைத்துப் பரிசோதிக்கிறார். மீண்டும் மீண்டும் செடிகள் கருகிப் போகின்றன. பரணி தளராமல் தொடர்கிறார்.

சோதனைக்கு இன்னும் ஒரு சில அணுத் தொகுப்புகளே பாக்கி... 'ஒருவேளை இந்த ஆராய்ச்சியே தோல்வியுறுமோ...?' சோர்வை விரட்டிவிட்டு மீண்டும் ஒரு தொகுப்பை புகையிலை திசுவோடு இணைத்துவிட்டு இரண்டு நாட்கள் ஊருக்குப் போகிறார் விடுமுறைக்காக...

காட்சி 6:

சென்னை திரும்பும் தினம் பேருந்தில் கனவு வந்து தூக்கத்தைக் கலைக்கிறது: புகையிலைச் செடி உடை தரித்த ஒரு குழந்தை! பால் பற்கள் தெரிய சிரிக்கிறது. எம்.எஸ். சுவாமிநாதன் ஃபவுன்டேஷன் ஆராய்ச்சிக் கூடத்துக்கு வந்து பார்த்தால்... ஆச்சரியம், மகிழ்ச்சி மயக்கம்! தில்லைவனத் தாவர டி.என்.ஏ. தாங்கி, நான்கு

* ஆராய்ச்சி மையத்தில்...



இலைகளுடன் புகையிலைச் செடி பனிச்சென்று சிரிக்கிறது!

காட்சி 7:

வளரும் விஞ்ஞானி என்று வரித்துக் கொண்ட சுவாமிநாதன் ஃபவுன் டேஷன், பரணிக்கு டாக்டர் பட்டம் அளிக்கிறது. இதே ஆராய்ச்சியை நெற்பயிரில் செய்ய பரணியைப் பணிக்கிறது.

காட்சி 8:

கல்கிக்குப் பேட்டி தருகிறார் பரணி:

"உப்புத் தன்மைகொண்ட நீரில் விளையும் நெல் ரகத்தை உருவாக்குவது இன்றைய அவசிய தேவை. விவசாய நிலங்களுள் மூன்றில் ஒரு பங்கு உவர்தன்மை உடையவை. இதனால் விளை திறன் குறைவு. உவர்தன்மை தாங்கும் நெல் பயிர்களை இன்னும் இரண்டாண்டுகளுக்குள் உருவாக்கி விடலாம் என்று எதிர்பார்க்கிறேன்..."

"அயல்நாடு செல்வீர்களா...?"

"எம்.எஸ். சுவாமிநாதன் ஃபவுன்டேஷன் இருக்கும் போது நான் ஏன் வெளிநாட்டுக்குப் போக வேண்டும்!?"

— ஆர். சி. ஜெயந்தன்

படங்கள்: **வெங்கடேஷ்**



இளம் மின்மினி!


பதினான்கு வயது ஹோடாரு கிழிசல் காகிதத்தில் சிவப்பு மையில் கிறுக்கி வைத்திருந்ததை யதேச்சையாகப் படித்தார் ஒரு மியூசிக் புரொட்யூசர். பிஞ்சுக் கவிதைகள்! கிசுகிசுப்பான குரலில் அவற்றை ஒலிப்பதிவு செய்து, இசை சேர்த்து சிடிக்களாக்கி வெளியிட்டார். பிரமாத விற்பனை! இரவோடிரவாக நட்சத்திரமாகிவிட்டார் 'கவிதாயினி' ஹோடாரு. இன்று ஜப்பானில் டீ.வி, ரேடியோ, பத்திரிகை என்று மீடியா முழுக்க ஹோடாருதான்! அவரே தமது கவிதைகளைப் படித்த ஒரு இசை நிகழ்ச்சி வேறு பெரிய 'ஹிட்' ஆகிவிட்டது. ஹோடாரு என்பது புனை பெயராம். அர்த்தம்: மின்மினிப்பூச்சி!

நன்றி: பசிஃபிக் ஃப்ரெண்ட்

நினைத்ததை வரமென வழங்கும் அன்னபூரணி க்ஷேத்ரமான காசியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் மாதாமாதம் அமாவாசை அன்று மிகுந்த புண்ணிய க்ஷேத்ரமான காசியில் அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...



பேரன்புடையீர்! வணக்கம். தங்களின் எல்லா விருப்பங்களும் நிறைவேறவும் மங்கலம் உண்டாகவும் அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி அன்னை அருள்புரிய வேண்டுகிறோம்.

"பிரபஞ்சம் முழுவதற்கும் உணவுபடைக்கும் தாயாக விளங்கும் அன்னபூரணித்தாயார் கோலுமீற்றிருக்கும் காசியில் மாதாமாதம் அமாவாசை அன்று அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆன்மீக அன்பர்கள் அனைவரும் காசியில் அன்னதானமிட முடியும் என்ற நிறைவிந்தனைபோடு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" என்ற தனி அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இந்த அன்னதான திருப்பணிக்கு தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி "இறைவருளால் காசியில் ஏழைகட்கும், அடியார்களுக்கும் அன்னம் அளிப்பதில் நாமும் ஓரளவேனும் பங்குகொண்டோம்" என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

★ தாங்கள் கொடுக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.2000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் நான்கு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் இருபது ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமணநாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு கங்கா தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பும் காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்து தொடர்ந்து பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்நிதியின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத் கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

காசி, கயா, பிரயாகை (திரிவேணி சங்கமம்) ஆகிய இம்மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் புண்ணிய காரியங்கள், பித்ரு காரியங்கள், பிண்டம் போடுதல், தர்மங்கள், ச்ராத்தம், திவசம், தர்ப்பணம் போன்றவற்றை அவரவர் விருப்பப்படி அன்னதானக் கைங்கர்ய அன்பர்களுக்கு செய்து தரப்படும்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்டப்பிரதானம் மற்றும் தர்ப்பணம் காசியிலும், கயாவிலும், பிரயாகையிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் செய்யப்படுகிறது.

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 1000/- அனுப்பும்போது யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். பிண்ட பிரதானத்திற்காக ரூ.5000/- அனுப்பும் அன்பர்கள் சார்பாக தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை மூன்று பித்ரு லோகத்தில் எந்த இடத்தில் யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுக்கு ச்ராத்தம் செய்யப்படும். பித்ரு காரியங்களுக்குப் பணம் அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான 'அக்ஷய வடத்தின்' படமும், கயாவில் உள்ள விஷ்ணு பாதத்தின் படமும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் ச்ராத்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு அக்ஷய வடத்தில் (ஆலமரம்) பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூட்டமே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

அன்னதான சேவையில் ஈடுபடும் சிவநேசச்செல்வர்கள் தங்கள் நன்கொடையை Cheque / D.D / M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கலியுகத்தில் அன்னதான சமுதாயப்பணி மகத்தான தெய்வீகப்பணியாக காசி திருத்தலத்தில் தழைத்திட உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.

Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street, Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax: (044) 4616311 E- Mail:siva siva@vsnl.net

காசியில் கங்காஸ்நானம் ஞானத்தைக் கொடுத்துப் பாவத்தைப் போக்கும்!

சென்னை டு



டெர்ரகோட்டா வீரர் சிலைகள்!

மருத்துவமனை பேராசிரியர் கம்பீரமாக உள்ளே வந்தார். நாலு பக்கம் அச்சிட்ட ஒரு பட்டியலில் 8-ஆம் எண் 'டிக் செய்யபபட்டிருந்தது. அதைக் கையில் தந்து, ''480 யுவான் கொடுத்து மருந்துவாங்கிப் போய், இப்போதே சாப்பிடத் தொடங்குங்கள்!'' என்றார். ''இப்போது டூரிஸ்ட்டாகத்தான் வந்திருக்கிறேன். இந்தியாவுக்குப் போய்க் கடிதம் எழுதுகிறேன். மருந்தைத் தபாலில் அனுப்பி வையுங்கள்!'' என்று ஒரு வழியாகக் கிளம்பினேன். மற்ற டூரிஸ்ட்டுகளின் நாடியையும் பிடித்துப் பார்த்து, 'டியால் ஜிங் ஹி டோங் வான்' என மூக்கால் பிரிஸ்க்ரிப்ஷன் சொல்லி, ஒவ்வொருவரிடமும் பட்டியலைக் கொடுக்க ஆரம்பித்தார் ஒரு பெண் மணி...

அன்று இரவு ஓட்டலில் 'அப்பாடா' என்று விழுந்தபோது, ஷாங்காயிலிருந்து போன் கால்.

''நாளை கிளம்பி ஷிஆன் நகருக்குப் போய் விடுங்கள். காலை 7.30 மணிக்கு ஃப்ளைட். ரைட்? போனவுடன் ஓட்டலில் பெட்டியை வைத்துவிட்டு உடனே டெர்ரகோட்டா வாரியர்ஸ், ஹாட் ஸ்ப்ரிங் இரண்டு இடங்களுக்கும் போய் விட்டு வந்துவிடுங்கள். குட் நைட்!'' என்றார் கோபால்.

ஏழரை மணிக்கு விமானம் என்றால் ஆறு மணிக்கே ஏர்போர்ட்டில் இருக்க வேண்டும்.

சைனா ஏர்லைன் CA 1215க்காக பிரும்மாண்டமான பெய்ஜிங் ஏர்போர்ட்டின் அழகை ரசித்தபடி, கேட் 23ல் வந்து உட்கார்ந்தேன். பெட்டியை ஆறு மணிக்கே செக்-இன் செய்து போர்டிங் பாஸை வாங்கியாயிற்று.

பளபளக்கும் கடைகளும், பளீரென்ற மார்பிள் தரையுமாக, வண்ண விளக்குகள்



சைனா - 5

ஜொலிக்கும் பெய்ஜிங் விமானக் கூடம், நகரின் வடகிழக்கே இருக்கிறது. 38 அயல் நாட்டு ஏர்லைன்ஸ், 23 லோக்கல் ஏர் லைன்ஸ் அலுவலகங்கள், 168 ரூட்டுகள். சைனாவுக்கு உள்ளேயே 70 நகரங்களுக்கும், 38 நாடுகளில் உள்ள 73 நகரங்களுக்கும் இங்கிருந்து விமானங்கள் பறந்த வண்ணம் இருக்கின்றன. 2005ல், வருடத்துக்கு 35 மிலியன் பேர் இங்கு வந்து போவார்



களாம்!

பெய்ஜிங்கின் சாலை ஒழுங்கும், அமைதியும், பிரமிக்க வைக்கின்றன. நடைபாதையில் உள்ள மரங்களில் இருந்து உதிரும் இலைகள்கூட ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்பட்ட மாதிரி, நடைபாதையைத் தாண்டி தார்ச் சாலையில் சிதறாமல் இருக்கின்றன.



எக்கச்சக்கமான சைக்கிள்கள். சுரங்க ரயில் நிலையங்கள் வரை சைக்கிளில் போய், அங்கிருந்து ரயிலில், வேலை பார்க்கும் இடங்களுக்குப் போய் விடுகிறார்கள். மாலை திரும்பி வருகையில் சைக்கிளை எடுத்துக் கொண்டு வீடு திரும்புகிறார்கள். சைக்கிளுக்கு என்று தனி ட்ராக் இருக்கிறது.

கார்களும், ..ாக்ஸிகளும், வேன்களும், பஸ்களும் லேன் மாறாமல் ஒழுங்காகப் போகின்றன. பஸ்கள் என்றால் நம்மூர் மாநகரப் போக்குவரத்து பஸ்கள் போல் அல்ல. லக்சுரி கோச் என்போமே, அந்த வகை.

மக்கள் தொகை அதிகம் என்கிறார்களே, தெருவில் கசகசவென்று ஒரே மக்கள் கூட்டமாக இருக்கும் என்று எதிர்பார்த்தால் ஏமாந்து போவீர்கள். அப்படி இல்லவே இல்லை.


காவல் துறை ஆகட்டும், போக்குவரத்து ஆகட்டும் - சாலையில் எந்தச் சந்திப்பிலும் தென்படவே இல்லை! கண்ணில் தென்பட்ட காவலர்கள் கூட முக்கியமான டூரிஸ்ட் ஸ்பாட்களில்தான்.

சுவர்களைப் பாழடிக்கும் விளம்

சாருகேசி

பரங்கள், போஸ்டர்கள் எதுவுமே இல்லை. கன்னா பின்னா என்று, காற்றில் அறுந்து தொங்கும் கட்சிக் கொடிகளின் தோரணங்கள் இல்லை.

பொது மக்களின் நேரத்தை விணடிக்கும் எந்தவித அரசியல் பிரசாரக் கூட்டங்களோ, வங்கி - அலுவலக வாயில்களில் சிவப்புக் கொடி தொங்கும் சமாசாரங்களோ அறவே இல்லை. உண்மையில் அரசாங்கத்தின் செயல்பாட்டு முறை எதுவும் வெளிப்படையாகத் தெரியவே இல்லை. ஆனால், எங்கேயோ இருந்து ஆட்சியாளரின் கூரிய பார்வை ஒவ்வொரு இடத்தையும், ஒவ்வொரு பிரஜையையும் அமானுஷ்யமாகக்



கண்காணிப்பது போல, எல்லாமே அப்படி ஓர் ஒழுங்கு!

அமெரிக்காவில்கூட, தெரிந்தவர் என்றால் அதிகபட்சமாக ஒரு சின்னப் புன்னகைதான். இங்கே ஹோட்டல், வங்கி, வியாபார ஸ்தலங்கள், பெரிய பெரிய கடைகள், நடைபாதைக் கடைகள் எதிலுமே மக்கள் காண்பிக்கும் நட்பு நம்பமுடியாத அளவுக்கு இருக்கிறது. அதிலும் திராட்சைப் பழ விழிகள் பளபளக்க, பொம்மை மாதிரி இருக்கும் அழகழகான குழந்தைகளைப் பார்த்துக் கன்னத்தில் செல்லமாய் ஒரு தட்டுத் தட்டினால் அக மகிழ்ந்து போய் நம்மிடம் நட்புடன் பேசவே வந்து விடுகிறார்கள். இந்தியா என்று சொல்லுவதில்லை. 'இந்த்ரன்?' அல்லது, 'இந்து?' என்று மலர்ச்சியுடன் விசாரிக்கிறார்கள்.

"**C**A 1215 விமானம் ஷிஆன் நகருக்குப் புறப்படுவதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. வானிலைதான் காரணம். ஒன்பது மணிக்குப் புறப்படும்!" என்று சீன மொழியிலும், அழகான ஆங்கிலத்திலும் அறிவிப்பு வந்தது. உடனே ஓர் இளம் பெண் எல்லாரையும் வந்து பிஸ்கட் பொட்டலங்களும், மினரல் வாட்டர் பாட்டிலும் வாங்கிக் கொள்ளச் சொல்லி, மளமளவென்று பெட்டிகளிலிருந்து விநியோகிக்க ஆரம்பித்து விட்டார்!

ஷி-ஆன் நகரை விமானம் அடைந்த போது பிற்பகல் கிட்டத்தட்ட ஒரு மணி ஆகிவிட்டது. ஏர்போர்ட் இருந்ததோ நகரிலிருந்து 48 கிலோ மீட்டர் தூரத்தில்! டாக்ஸி கட்டணம் 150 யுவான். ஆனால், வெளியே வந்தவுடனேயே இடப்புறம் ஏர்போர்ட் சொகுசு பஸ் தயாராக இருந்தது. "20 யுவான் தான்" என்றார் பொறுப்பாளர் - பெண்மணி.

"நான் போக வேண்டியது கிராண்ட் நியூ வேர்ல்ட் ஓட்டல். அங்கே நிறுத்துவீர்களா?"

"அதற்கு அருகே டைனாஸ்ட்டி ஓட்டலில் நிறுத்துவோம். நீங்கள் அங்கிருந்து 10 யுவான் கொடுத்தால் சிறிய டாக்ஸியில் உங்கள் ஓட்டலுக்குப் போய்விடலாம்!"

நகருக்குள் போக, சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் வரை இரு புறமும் பச்சைப் பசேல் என்று வயல்வெளி. அருகேயே அந்த விவசாயிகளின் சின்னச் சின்ன ஓட்டு வீடுகள்.

ஒரு மணி நேரப் பயணத்துக்குப் பிறகு ஓட்டலில் இறங்கி, அங்கிருந்து டாக்ஸி பிடித்து கிராண்ட் நியூ வேர்ல்ட் ஓட்டலில் ஏற்கெனவே பதிவு செய்திருந்த அறைக்குப் போய் பெட்டியை வைத்துவிட்டு, மளமளவென்று 25 ஆவது மாடியிலிருந்து லிஃப்டில் கீழிறங்கி, டெர்ரகோட்டா வீரர்கள் சிலை மியூசியத்தையும், ஹாட் ஸ்ப்ரிங்கையும் பார்க்க டூரிஸ்ட் இலாகா பஸ் கிடைக்குமா என்று ரிசப்ஷனிஸ்ட்டிடம் விசாரித்தேன்.

"டூரிஸம் டிபார்ட்மென்ட் பஸ்கள் எல்லாம் காலையிலேயே கிளம்பிவிடும். ஆனால் கவலைப் படாதீர்கள். தனியார் கார் இருக்கிறது. அவரே ஓட்டிக் கொண்டு இங்கே வந்து விடுவார். 450 யுவான் கொடுங்கள், போதும்!" என்றார்.

நகரின் வெளிப்புறத்தில், சுமார் ஒன்றரை மணிநேரப் பயணத்துக்குப் பிறகு, கார் நின்றது.

வெளியே சின்னச் சின்னக் கடைகள். நினைவுப் பொருட்கள் விற்கும் கடைகள். பழக் கடைகள்...

"உள்ளே கார் அனுமதிக்க மாட்டார்கள். நீங்கள் மியூசியத்துக்குப் போய், டிக்கட் வாங்கிக் கொண்டு, சுற்றிப்பார்த்துவிட்டு இங்கே வந்து சேர்ந்து விடுங்கள்!" என்றார் காரோட்டி.

அரங்கம் - 1, அரங்கம் - 2, அரங்கம் - 3 என்று மிகப் பெரிய அரங்கங்கள். ஒவ்வொன்றிலும் கடுமண் எனப்படும் டெர்ர கோட்டா வீரர்களின் ஆளுயரச் சிலைகள்.

1974ல் ஒரு விவசாயி, தன்னுடைய நிலங்களின் பாசனத்துக்காக நீரைத் தேடி பூமியைத் தோண்ட, ஏராளமான சிலைகள், சிலைகள், சிலைகள். 1975ல் புதைபொருள் துறையினர் தோண்டத் தொடங்கி, மூன்று பகுதிகளிலும் இருக்கும் கடுமண் சிலைகளையும், அவற்றை உருவாக்க வைத்திருந்த களிமண்ணையும் கண்டுபிடித்து, மிகப் பெரிய கூரையோடு மியூசியம்களாக இப்போது அமைத்திருக்கிறார்கள்.



சிலைகள்தாம் தத்ரூபமாக இருக்கின்றன என்றால் குதிரைகள்கூட நிஜம் போலவே காட்சியளிக்கின்றன.

க்வின் டைனாஸ்ட்டி, ஹான் டைனாஸ்ட்டி, டாங் டைனாஸ்ட்டி என்று மூன்று பரம்பரை ஆட்சிகளின்போது ஷிஆன்தான் தலைநகராக இருந்திருக்கிறது. வீ நதி மற்றும் மஞ்சள் ஆறு பள்ளத்தாக்குகள், இங்கே சீன நாகரிகம் 7000 வருடங்களுக்கு முன்பே இருந்ததைக் காட்டுகின்றனவாம். க்வின் சக்ரவர்த்தியின் டெர்ர கோட்டா வீரர்கள் சிலைகளைப் பார்க்க ஆயிரக் கணக்கில் டூரிஸ்ட்டுகள் வருகிறார்கள்.

புகைப்படம் எடுக்கக் கூடாது என்று பலகைகள் சொன்னாலும், அங்கே இருக்கும் அதிகாரிகள், டூரிஸ்ட்டுகளின் உற்சாகத்தைத் தடை செய்வதில்லை.

வெளியே வந்தால் சின்னச் சின்ன டெர்ரகோட்டா சிலைகள் - நினைவுப் பரிசுகளாகக் கொண்டு செல்ல என்றே விற்பனை செய்கிறார்கள். இவை தவிர, நம் கையில் பொம்மைகளை வலுக்கட்டாயமாகத் திணிக்கும் வயதான சீனர்கள். 100 யுவான், 50 யுவான் என்று பேரம் பேசும் வியாபாரிகள்.

ஹாட் ஸ்ப்ரிங்ஸ் மூடுவதற்குள், கார் பறந்தது. சாலைகளை விழுங்கியது. ஹைவேக்கள் புதிய நிர்மாணத்தில் அமைந்திருந்தால், டோல் கேட் வைத்து, கட்டணம் வசூலித்து, பின்னரே வாகனங்களை அனுமதிக்கிறார்கள். ஆனால், கட்டணம் கொடுப்பதும், சீட்டுப் பெறுவதும் பத்து விநாடிகளில் முடிந்துவிடுகிறது.

ஹாட் ஸ்ப்ரிங் எனப்படும் டூரிஸ்ட் மையம், அழகான சீன பாணி கட்டடம் நிறைந்த பூங்கா மாதிரிதான் தெரிகிறது. ஆனால் உள்ளே ஓரிடத்தில் புகை வருகிறது. அதன் அருகே, உள்ளேயிருந்து பன்னீர்ச் சிதறல்களாக வரும் நீர் சுடச் சுட இருக்கிறது.

அரசியர்கள் குளித்த இடங்களை ஒட்டி இருக்கும் இந்த 'ஹாட் ஸ்ப்ரிங்', அவர்களின் பிரும்மாண்டமான குளியல் தொட்டி போன்ற அமைப்பில் சுடு நீரை இறைத்துக் கொண்டே இருக்கும் போலும்.

இரவு ஓட்டலில் அறைக்குப் போனதும் ஷாங்காயிலிருந்து போன் கால். உறவினர் கோபால்.

"பெரிய பகோடாவைப் பாருங்கள். ஏழு மாடியும் ஏறிப் பாருங்கள். பெரிய டிரம், பெரிய மணி எல்லாம் பாருங்கள். மாலை 6 மணிக்குத்தான் உங்கள் ஷாங்காய் விமானம்!" என்றார்.

ஆனால், நான் அவர் குறிப்பிட்ட ஆறு மணி விமானத்தில் பயணம் செய்யப் போவதில்லை என்பது அவருக்குத் தெரியாது. ஏன், எனக்கே அப்போது தெரியாது.

- அடுத்த வாரம்



ஃப்ரெண்ட்ஸ்

விஜய்யும் சூர்யாவும் ப்ரெண்ட்ஸ். நட்புக்காக விஜய் எதையெல்லாம் விட்டுக் கொடுக்கிறார், சூர்யா எதை எல்லாம் விட்டுக் கொடுக்கிறார் என்பது கதை.

படத்தின் முதல் பாதி ரொம்பவே என்ஜாயபிள்! ரமேஷ் கண்ணா, வடிவேலு, சார்லி, மதன்பாப், விஜய், சூர்யா என்று கிரிக்கெட் டீம் கணக்காக ஒரு பெரி...ய்ய காமெடி டீம். லாரல் - ஹார்டி பாணி காமெடி என்றாலும் விரசமில்லாமல் அபத்தமில்லாமல் சிரிக்க வைக்கிறார்கள்.

ஆனால் டிபன் காரியரில் சாம்பார் சாதம், தயிர் சாதம் என்று கரெக்டாகப் பிரித்து வைப்பது மாதிரி முதல் பாதி ஜாலிக்கு, மறு பாதி அழுகைக்கு என்று பிரித்து வைத்து விட்டார் இயக்குனர். இரண்டையும் சமமாகக் கலந்திருக்கலாம்!

அதுவும் க்ளைமாக்ஸில், விஜய்க்கு நினைவு போய்... அவருக்கு க்ளோஸ்-கிராப் செய்து கதர்ச் சட்டையை மாட்டி விட்டு இருட்டு அறையில் நாற்காலியில் உட்கார வைத்து... இதெல்லாம், படம் முடியும் போது ஒரு கனத்த உணர்வை ஏற்படுத்தி விடுகிறது, தேவையில்லாமல்! ஆனால் குறையிலும் ஒரு நிறை. சூர்யா உதைபட்டு கத்துகிற கத்தில் விஜய்க்கு நினைவு திரும்புவது படத் தலைப்பை நியாயப் படுத்தி விடுகிறது!

விஜய்யின் குற்ற உணர்ச்சிதான் விஜய் - சூர்யா நட்பின் அடிப்படை என்று சொல்லி சொதப்பி விட்டார் டைரக்டர். இரண்டு பேர் உயிர்நண்பர்களாக இருக்க ஏதாவது ஒரு வலுவான சம்பவம் காரணமாக இருக்க வேண்டும் என்பது தப்புக் கணக்கு.

கதை நல்ல விறுவிறுப்புதான் என்றாலும் ஏகப்பட்ட சம்பவங்களும் 'சடார் சடார்' திருப்புமுனைகளும் தேவை இல்லையோ என்று தோன்றுகிறது. இசையமைப்பாளரும் டான்ஸ் மாஸ்டரும் காமிராமேனும் காணாமல் போய் விடுவதற்கு இது ஒரு காரணம்.

சாத்விகமான நண்பன் காரெக்டருக்கு சூர்யா வெகு பொருத்தம். அப்பாவுக்கு ஏற்ற பிள்ளை! அவர் மேல் விஜயலட்சுமி கொண்டுள்ள பாஷனேட் காதல் இனிக்கிறது.


கதைப்படி விஜய்க்கு ஒரு அக்கா கதாபாத்திரம் இருந்திருந்தால் தேவயானி அதில் இன்னும் கச்சிதமாய்ப் பொருந்தியிருப்பார்!

— கிருஷ்ணா சிதம்பரம்

○ ஃபெயில் ○ ஜஸ்ட்-பாஸ் ○ ஆவரேஜ்

● அபவ் - ஆவரேஜ் ○ டிஸ்டிங்ஷன்

நடக்கவ
நடக்




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்க மதிப்பும் செல்வாக்கும் உயரப் போகுது. குடும்பத்தில் அமைதி நிலவும். வி.ஐ.பிங்க உதவுவாங்க. குறிப்பா, மத்த மொழிக்காரங்களால் நன்மை ஏற்படும். பண நடமாட்டம் நல்லாவே இருக்கும். கணவன் - மனைவி உறவில் சின்னச் சின்ன சலசலப்புகள் ஏற்படும். வாரக் கடைசியில் முக்கியமான காரியங்கள் நிறைவேற நிறைய சான்ஸ் இருக்கு.



ரிஷபம் : (கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)

தன்னம்பிக்கையோடு தைரியமாக எடுத்த காரியத்தை முடிச்சிடுவீங்க, வெற்றியும் அடைஞ்சிடுவீங்க. பிரச்னைகளைச் சுலபமாகச் சமாளிக்கும் சக்தி வந்துடும். அதிகமாக உழைக்க வேண்டி வரும். ஆனால் அதுக்கு ஏத்த பலன் கிடைச்சுடும். புதுசா பழகறவங்ககிட்டே மட்டும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருங்க. சாப்பாடு சமாசாரத்தில் கட்டுப்பாடா இருங்க. உல்லாசங்களைக் குறைச்சுக்கறது நல்லது.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

சின்னச் சின்ன சங்கடங்கள் ஏற்பட்டுக்கிட்டே இருக்கும், பக்குவமா சமாளியுங்க. வீண் வம்பு, சண்டை சச்சரவுன்னு எதிலேயும் மூக்கை நுழைக்காதீங்க. ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசிச்சு எந்தக் காரியத்தையும் செய்யுங்க. தேவைப்பட்டால் பெரியவங்க ஆலோசனையைக் கேட்டுக்கங்க. நல்லவங்க சகவாசத்தையும் நல்ல பழக்க வழக்கங்களையும் ஏற்படுத்திக்கிறது முக்கியம். நேர்மையான வழியில் போயிட்டாலே பல சங்கடங்களைத் தவிர்த்திடலாம். வயிறு சம்பந்தப்பட்ட பிரச்னை ஏற்படலாம், உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக்கங்க.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

உங்க மனசுக்குப் பிடிச்ச விஷயம் நடக்கப் போகுது. எதிரிகள் எல்லாம் காணாமல் போய்விடுவாங்க. கோயில், குளம்னு பக்தி மார்க்கத்தில் இறங்கிடுவீங்க. புது முயற்சியில் ஈடுபட வாய்ப்பு இருக்கு. நல்லவங்க சகவாசம் கிடைக்கும். மனசில் தெளிவு பிறக்கும். கணவன்- மனைவி உறவில் பரஸ்பரம் அனுகூலம் ஏற்படும்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்க திறமை, புத்திசாலித்தனம், சாமர்த்தியம் எல்லாம் வெளிப்படப் போகுது. எதிர்ப்புகள் வரும். ஆனால் அவற்றை எல்லாம் ஜோராக சமாளிச்சுடுவீங்க. நண்பர்கள், உறவினர்கள் எல்லாம் 'நான், நீ'ன்னு போட்டி போட்டுக்கொண்டு உதவ வருவாங்க. உங்க உழைப்பும் திறமையும் வீண் போகாது. வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

உங்க நீண்ட நாள் திட்டம் ஒன்று நிறைவேறப் போகுது. அதனால் உங்க மதிப்பும் அந்தஸ்தும் உயரப் போகுது. நல்லவங்க, முக்கியமானவங்க உங்களுக்கு உதவுவாங்க. பிள்ளைகளால் பெத்தவங்களுக்கு நல்லது நடக்கும். ஆனால் சூடான வார்த்தைகளை மட்டும் பேசிடாதீங்க. உங்க மதிப்பிற்கும் அந்தஸ்துக்கும் பங்கம் வராமல், பார்த்து நடந்துக்கங்க. வீணாக அலையாதீங்க, உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக்கங்க.



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

அலைச்சல் அதிகமாகப் போகுது. உடல்நலம், ஒரு நாளைப் போல அடுத்த நாள் இருக்காது. கோபப்படுவது, உணர்ச்சி வசப்படுவது, இதை எல்லாம் குறைச்சுக்கங்க. புது முயற்சிக்கு இது நேரம் இல்லை. வேலைக்காரங்க உங்க மன அமைதியைக் கெடுக்கற மாதிரி பிரச்னைகளை

ஜனவரி 31 பிப்ரவரி 6 வரை

...ன்பார்;
...தம்!



விருச்சிக ராசிக்காரரான ஐஸ்வர்யா நிறைய ஷாப்பிங் பண்ணுவாங்களாம்!

உண்டாக்குவாங்க, யோசிச்சு நிதானமாகச் செயல்படுங்க. குடும்பத்தைப் பொருத்தவரை ஒரு பிரச்னையும் இருக்காதுங்க.



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்க அந்தஸ்து, மதிப்பு, கௌரவம் எல்லாம் சீராக இருக்கும். கணவன்- மனைவி உறவு சுமுகமா இல்லாமல் திருப்தியாக இருக்கும். துணிமணி, அலங்காரப் பொருள்னு நிறைய ஷாப்பிங் பண்ணுவீங்க. சின்னச் சின்ன தடங்கல்கள் ஏற்படும். உடனே விலகிடுங்க. ஆனால் எல்லார்கிட்டேயும் சுமுகமாய்ப் பழகுங்க. கெட்ட சகவாசம், கெட்ட பழக்க வழக்கம்... இதை எல்லாம் தூர தூக்கிப் போட்டுடுங்க. கூடப் பிறந்தவங்க பிரச்னை பண்ணுவாங்க, உஷார்!



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

உங்க திட்டம் எல்லாம் பெரிசா செயல்படப் போகுதுங்க. உங்க பேச்சாற்றல், புத்திசாலித்தனம் இரண்டையும் வைச்சு எல்லாரையும் ஒரு வழி பண்ணிடுவீங்க. விருந்து, உபசாரம்... இதிலெல்லாம் ஆர்வம் அதிகமாகும். உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக்கங்க. அடிக்கடி கோபப்படாதீங்க. பெரியவங்க சொல்றதைக் காது கொடுத்துக் கேட்டால் உங்களுக்குத்தானே நல்லது!



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

உங்க சாமர்த்தியமும் புத்திசாலித்தனமும் வெளிப்படுகிற நேரம் வந்திடுச்சுங்க. பேச்சு இனிமையா இருக்கும். கடன் உபத்திரவம் எல்லாம் போய் பண நடமாட்டம் திருப்தியாய் இருக்கும். நண்பர்கள் உதவு வாங்க. துணிமணி, நகைநட்டுன்னு பெண்கள் தூள் கிளப்பு வாங்க. கேளிக்கை, விருந்துன்னு ஜமாய்ப்பீங்க. குடும்பத்தில் மகிழ்ச்சி, குதூகலம், உல்லாசம் தான் போங்க. பணத்தை மட்டும் அள்ளி விட்டுடாதீங்க, சிக்கனம் தேவை. மத்தபடி ஒரு பிரச்னையும் இல்லீங்க.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

பிரச்னைகள், தடங்கல்கள் நிறைய ஏற்படப் போகுதுங்க. நிதானமாகவும் பக்குவமாகவும் சமாளியுங்க. எதிர்ப்புகள் கிளம்பும். சாமர்த்தியமாக நடந்துக்கங்க. ஆசைகளைக் குறைச்சுக்கிட்டு நேரான வழியில் போகப் பாருங்க. சாதாரண விஷயத்துக்கே நிறைய அலைய வேண்டி வரும். புது முயற்சி வேண்டாங்க. முதலீடு செய்யறதுக்கெல்லாம் இது நேரமில்லை. ஆனால் தெய்வ அனுக்கிரஹத்தால எல்லா பிரச்னைகளையும் சமாளிச்சிடுவீங்க, கவலையை விடுங்க.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்களுக்கு அவ்வளவு அனுகூலமான வாரம்னு சொல்ல முடியாதுங்க. சின்னச் சின்ன பிரச்னைகள் ஏற்பட்டுக்கிட்டே இருக்கும். கொடுக்கல் வாங்கல் சமாசாரங்களில் எச்சரிக்கையா இருங்க. மத்தவங்களை நம்பி எதிலேயும் இறங்கிடாதீங்க, ஜாமீன் கொடுக்கிற வேலை எல்லாம் வேண்டவே வேண்டாம். முக்கியமானவங்களை, நெருக்கமானவங்களைப் பிரிய வேண்டி வரலாம். பிரயாணம் எல்லாம் அப்புறம் பார்த்துக்கலாமே! பக்தியில் மனதைச் செலுத்தினீங்கன்னா ஓரளவு தெளிவு ஏற்படும். ○





ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. Tel & Fax: 237 6129.
E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our website at: www.intamm.com/sspeetam

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம், தங்களுக்கு அனைத்து நலன்களும் உண்டாக பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பிரார்த்திக்கின்றோம்.

தங்களின் அன்பினாலும், ஆதரவினாலும், குருகுலத்தில் 150 மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் படித்து வருகின்றார்கள். குருகுல மாணவர்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு ஒரு உயர்நிலைப்பள்ளியும், ஒரு கம்ப்யூட்டர் பயிற்சி மையமும் துவங்கப்பட்டுள்ளது.

★குருகுல மாணவர்களோடு உங்களுடைய மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளுங்கள்.

★குருகுல மாணவர்களின், உணவு மற்றும் இதர செலவுகளுக்கு, கல்வி கற்பதற்கு, கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்கு, கட்டிடம் கட்டுவதற்கு, மற்றும் நிரந்தர வைப்பு திட்டத்திற்கு தங்களின் மேலான நன்கொடைகளை, அளிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• பிஸ்கட், மற்றும் பால் வழங்குதல்	ரூ.	750/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ.	3,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	9,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்



முறத்தால் புலியை விரட்டிய வீரப் பெண் பற்றிக் கேள்விபட்டிருக்கிறோம். ஆனால் தூரிகையால் சாவை விரட்டி சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார் சாரதா.

அண்மையில் தமது 61வது ஆபரேஷனை முடித்துக் கொண்டு மும்பையிலிருந்து பெங்களூர் திரும்பியிருக்கிறார் சாரதா ராஜு. நாற்பது வயதாகும் இவருக்கு, கடந்த பதினேழு வருடங்களில் அறுபது முறை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. அதோடு விட்டதா? புற்று நோய்க்காக வாரமிரு முறை கீமோதெரபி சிகிச்சை எடுத்துக் கொள்கிறார். இது போதாதென்று திடீரென்று இதய நோய் ஏற்பட்டு, பேஸ்மேக்கர் கருவி பொருத்தப்பட்டுள்ளது.



வலியை விரட்டும் வண்ணங்கள்!



• சாரதா

'83ம் வருஷம் வரை நான் நார்மலாகத்தான் இருந்தேன். அப்போதான் நான் முதன் முதலா கருத்தரிச்சு, அது கலைஞ்சு போச்சு. அதைத் தொடர்ந்து டி. அண்ட் சி, லாப்ரோஸ்கோபி என்று நிறைய பரிசோதனைகள்... பிறகு மும்பை போனேன். அங்கு என்னைப் பரிசோதித்த மருத்துவர், "கர்ப்பப்பையையே நீக்க வேண்டும்" எனச் சொல்லி எடுத்துவிட்டார். நான் ஆபரேஷன் தியேட்டரில் இருந்தபோது திடீரென்று ஹார்ட்-அட்டாக் வந்துவிட்டது. அப்போது நடந்த டெஸ்ட்டுகளில், எனக்குக் கான்சர் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த நாட்கள் கொடுமையானவை" என்று ஆரம்பித்தார் சாரதா.

"வலி... கடுமையான வலி.. வாழ்க்கையே வெறுத்து விட்டது. சரி, இனிமேல் போராட்டம் வேண்டாம். மரணத்தைச் சந்திப்போம்' என்று விரக்தியாக இருந்தேன். 'உனக்கு ஒரு மாறுதல் தேவை. ஓவியம் கற்றுக் கொள்' என்று சொன்னார் டாக்டர் பி. சௌத்ரி.

கிருஷ்ணானந்த ராஜு என்பவரிடம் ஓவியம் கற்றுக் கொள்ளத் தொடங்கினேன். முதலில் பிரஷ் பிடித்த போது, அந்த ஓவியத்தை முடிப்போமா என்று கூட சந்தேகம் வந்தது. ஆனால் இந்தப் பத்து ஆண்டுகளில் அறுநூறுக்கும் மேற்பட்ட தஞ்சாவூர் பாணி ஓவியங்களை வரைந்து விட்டேன். உடல் நிலையில் பிரமாதமான முன்னேற்றம் எதுவுமில்லை. வலி பழகிவிட்டதோ என்னமோ!'' என்றார் சிரித்துக்கொண்டே.

ஆந்திரக்காரராக இருந்தாலும் சாரதா பிறந்து வளர்ந்தது எல்லாம் பெங்களூரில்தானாம். அத்தை மகன் கோதண்ட ராஜுவை மணந்திருக்கிறார். "நான் பிறந்தவுடனேயே இவன்தான் என் மருமகள் என என் அத்தை நிச்சயம் செய்து விட்டாராம். கஷ்டத்திலும், வலியிலும் நான் நினைத்து நினைத்து ஆறுதல் படும் ஒரே விஷயம் இவர் எனக்குக் கணவராக கிடைத்ததுதான். அவ்வளவு பொறுமை. என் மீது உயிரையே வைத்திருக்கிறார். என் வேதனையைப் பார்த்து மௌனமாகக் கண்ணீர் வடிப்பார். அவ்வளவு மென்மையான மனசு'' என்றார் கணவரைக் காட்டி...

மருத்துவ உலகில் சாரதா அதிசயப் பெண்மணி என்று அறியப்படுகிறார். ஓவிய வட்டாரத்திலோ அபூர்வ கலைஞர்! சமீபத்தில் இவர் வரைந்த தஞ்சாவூர் மற்றும் மைசூர் பாணி ஓவியங்கள் இடம்பெற்ற கண்காட்சியை, கர்நாடக ஆளுநர் திறந்து வைத்திருக்கிறார்.

"நான் வரைந்த ஓவியங்களை வைத்து பிரத்யேகமாய்க் கண்காட்சி நடத்த வேண்டுமென்பது என் நீண்ட நாள் கனவு. அதைத் திறந்து வைத்த ஆளுநர் ரமாதேவி என்னைச் சக்கர நாற்காலியில் எதிர்பார்த்து ஏமாந்து விட்டாராம்!'' என்று சொல்கிறார் சாரதா!

சாரதாவைப் பார்த்தால் யாரும் நோயாளி என்றே நினைக்க மாட்டார்கள். 'பனிச்'சென்று மேக்கப் போட்டுக் கொண்டு அழகாய் உடுத்தி வசீகரமாய் இருக்கிறார். பொதுவாக புற்று நோய்க்குத் தரப்படும் கீமோ தெரபியின் பக்க விளைவுகள் எதுவும் இவரிடம் காணப்படவில்லை என்பது சற்றே ஆறுதலான விஷயம்.

"என் வலி என்னோடு. நான் அழுது கொண்டும் அரற்றிக் கொண்டும் இருந்தால் மற்றவர்களுக்கு வேதனையாக இருக்காதா? நான் சந்தோஷத்தையும் பாசிட்டிவ்வான எண்ணங்களையும் மட்டுமே பரப்ப விரும்புகிறேன்'' என்கிறார் திடமாக.

"இறைவனிடம் நான் அபரிமதமான நம்பிக்கை வைத்திருக்கிறேன். அதன் வெளிப்பாடுதான் என் ஓவியங்கள். ஒவ்வொரு முறை நான் ஆபரேஷன் தியேட்டருக்குள் நுழையும் போதும், கடவுள் என் கையைப் பிடித்துக் கொண்டிருப்பது போல தோன்றும். அதனால் தான் தைரியமாக போகிறேன். ஒருமுறை என்னை ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போனபோது, இதயம் பலவீனமாக இருந்தது. ஆபரேஷன் பண்ணாமல் திருப்பி அனுப்பிவிட்டார்கள். அப்போது என் கண் முன்னே, சிவபெருமானின் உருவம் தோன்றியது. உடனே படுக்கையில் படுத்தவாறே வரையத் தொடங்கிவிட்டேன். என்று அந்த ஓவியத்தைப் பூர்த்தி செய்தேனா அன்றே என் ஆபரேஷனும் நடந்தது'' என்கிறார் சாரதா.

"தூரிகையைக் கையில் எடுத்து வண்ணங்களில் குழைக்கும்போது, நான் வேறு உலகிற்குப் போய்விடுகிறேன். என் வலி மறந்து விடுகிறது. ஓவியம் முழுமையடையும் போது, எனக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்படுகிறது. இதுவே ஒரு வித சிகிச்சைதான்'' என்கிறார்.

சாரதாவின் சிகிச்சைக்காக இதுவரை பத்து லட்ச ரூபாய்க்கும் மேலே செலவாகியிருக்கிறதாம். ஓவியங்களை விற்று, கிடைக்கும் பணத்தை மருத்துவ செலவுக்குத் தருகிறார்.

விரைவில் ஒரு ஓவியப் பள்ளியை ஆரம்பித்து ஏழை மற்றும் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு இலவசமாக கற்றுக் கொடுக்கும் திட்டமும் இவருக்கு இருக்கிறது!

— லதா சேகர்

குஜராத் துயரம்!




இவ்விதழ் அச்சேறும் நேரத்தில் குஜராத் பூகம்பம் பற்றிய துயரச் செய்தி வெளியாகியிருக்கிறது. பாதிக்கப்பட்ட குஜராத் மக்களின் துயரையும் வலியையும் பகிர்ந்துகொள்கிறோம். பாதிப்புகள் குறித்தும் நிவாரணப் பணிகள் குறித்தும் எமது செய்தியாளரின் நேரடி ரிப்போர்ட் அடுத்த இதழில் இடம் பெறும்.

— ஆசிரியர்

KALKI SHOPPING PAGE

சின்ன வயசில், அஜய்க்குப் பாகற்காய் பிடிக்காது; தமிழ் சினிமா பிடிக்காது; சத்தமாய்ச் சிரித்து, அரட்டையடிக்கும் பெண்களைக் கண்டாலே பிடிக்காது; காபிக்குச் சர்க்கரை ஒரு ஸ்பூன் அதிகமானாலும் பிடிக்காது...



இனிமேல் ஆரம்பம்

அனுராதா ரமணன் **15**

இந்தப் 'பிடிக்காது' பட்டியலில் சுஜா என்கிற 'பிளஸ் டூ' படிக்கும் பெண்ணும் இடம் பெற்றிருந்தாள் என்று இப்பொழுது சொன்னால் - அவனே நம்ப மாட்டான்!

அத்தனை சண்டை... வசவு... அர்ச்சனை... எல்லாம்.

முதல்முறையாக - அவளைச் சந்தித்த போதே அஜய்யின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டவளாயிற்றே...

கேசவ் - ஈசுவரனின் பம்பாய் நிறுவனத்தைக் கவனித்து வந்தார். அவரது தொழில் சாமர்த்தியத்திலும், விசுவாசத்திலும் மயங்கிப் போன ஈசுவரன், அவரை வடம் கட்டித் தேரை இழுப்பது போல - சென்னைக்கு இழுத்து வந்ததுடன் நில்லாமல், தாங்கள் வசிக்கும் காலனியிலேயே, தன்னுடைய பங்களா ஒன்றிலேயே குடியும் வைத்தார்.

காலையில் கேசவ், கல்பகம், சுஜா மூவரையும் தன் வீட்டிற்குச் சாப்பிட அழைத்தபோது அஜய் இல்லை. ஏதோ ஒரு 'டென்னிஸ் டோர்னமெண்ட்'டுக்காக வெளியூர் சென்றிருந்தான்.

அர்ச்சனாவை மட்டுமே சுஜாவுக்கு அறிமுகப்படுத்தினார் ஈசுவரன்.

''அர்ச்சனா... சுஜா இனிமே உங்க ஸ்கூல்தான்... பிளஸ் டூ...''

''பிளஸ் டூவா... அதெப்படி... பிளஸ் டூவுல போய் ஸ்கூலை மாத்தியிருக்கே...''

''அங்கேயும் சென்டிரல் போர்டுதான். நீ என்ன படிக்கறே?''

''பிளஸ் ஒன்.''

''ஓ... நமக்கு ஜூனியர். கவலைப்படாதே. பாடத்துல என்ன சந்தேகமாயிருந்தாலும் என்னைக் கேளு...''

அப்போதே அர்ச்சனாவுக்கு அவளைப் பிடித்துப் போய்விட்டது.

பாடத்தில் என்ன சந்தேகமிருந்தாலும் கேளு என்கிறாளே... இப்படிச் சொல்ல யார் இருக்கிறார்கள்? அண்ணன் என்று ஒருவன் இருக்கிறான்தான். என்ன பிரயோசனம்? காலேஜுக்குப் போகவும், டென்னிஸ் விளையாடவும், மிச்சப் பொழுதில் மிருதங்கத்தைத் தட்டிக் கொண்டிருக்கவும்தான் அவனுக்கு நேரம் சரியாக இருக்கிறது...

படிப்பில் கெட்டிக்காரன்... ஆனால், அடுத்தவருக்கு அதுவும் தங்கைக்கு சொல்லித் தர பொறுமை கிடையாது.

சின்னத் தப்புக்குக் கூட ரகளை செய்வான். 'இதுகூடத் தெரியலையா' என்று கிண்டலாய்க் கேட்பான். இல்லாவிட்டால், அம்மாவிடம் போய், 'எப்படிம்மா, இத்தனை அசடாய் ஒரு பெண்ணைப் பெத்தே' என்று கேட்டு, அர்ச்சனாவை அழ விடுவான்.



'இனிமே, அந்த் திமிர் பிடிச்சவன் பின்னாடியே கணக்கு நோட்டை எடுத்துட்டுச் சுத்த வேண்டாம். ஹப்பாடி...'

இந்தப் பூரிப்பில் அர்ச்சனா, தனது புது சிநேகிதியை, மாலையில் வீட்டுக்கு வரச் சொல்லி அழைப்பு விடுத்தாள்.

"எதுக்கு இவளே?"

"இந்தக் காலனியில நம்ம செட் கேர்ள்ஸ், பாய்ஸ் எல்லாரும் நிறைய பேர் இருக்காங் கய்யா... வா... எல்லாரையும் மீட் பண்ணலாம். எதிர்த்தாப்பல ஒரு கிளப்.. டென்னிஸ் கோர்ட் எல்லாம் இருக்கு..."

"ஏய்... நீங்க எல்லாம் கிரிக்கெட், கபடி எல்லாம் விளையாட மாட்டீங்களா?"

"அ...அது வந்து... கேர்ள்ஸ் அவ்வளவா விளையாடறதில்லேப்பா..."

"அச்சச்சோ... மிஸ் பண்ணிட்டீங்க. கவலைய விடு. நான் வந்துட்டேனில்லே... நான் சொல்லித் தர்றேன்..."

– இப்படிச் சொன்ன சுஜாவை, ஒரு கணம் இமைக்காமல் பார்த்தாள் அர்ச்சனா.

"நீ... என்னெல்லாம் சொல்லித் தருவே?"

"உனக்கு என்னெல்லாம் வேணும்... கணக்குல ஆரம்பிச்சு கபடி வரைக்கும், கர்நாடிக் மியூசிக்லேயிருந்து கதக் டான்ஸ் வரைக்கும்... எல்லாம் சொல்லித் தருவேன்..."

'ஆ'வென வாயைப் பிளந்து கேட்ட அர்ச்சனா, மாலையில், இவளை வரச் சொன்னதை 'மூன்றாம்பிறை ஸ்ரீதேவி' மாதிரி சுத்தமாய் மறந்து தொலைத்துவிட்டு அப்பா, அம்மாவுடன் ஷாப்பிங் போய்விட்டாள். அந்த நேரத்தில்தான் சுஜா இவன் வீட்டுக்குள் ஆரவாரமாய் நுழைந்தாள்.

சுவாதீனமாய் உள்ளே நுழைந்து, உட்காரச் சொல்லாமலேயே உட்கார்ந்து, அதிகாரமாய்க் கேள்வி கேட்கும் இவளை ஏற இறங்கப் பார்த்தான் அஜய்.

இந்தக் காலனியில் உள்ள டீன்ஏஜ் பெண்களையெல்லாம் அவன் மனக்குள் ஆல்பம் போட்டு வைத்திருந்தான். எத்தனையோ அழகான, இளமையான பெண்கள் இருந்தாலும் இந்தப் பெண்ணிடம் வனப்பும், வாளிப்பும் சற்றே திமிர் கலந்த பேச்சும் இருந்ததைக் கவனித்தான். அவன் விசாரிக்கும்முன்பே அவள் கேள்விக்கணைகளை வீசத் தொடங்கினாள்.

"ஆமா... கேட்கறேனேன்னு தப்பா நினைச்சுக்காதே... காலையில பார்க்கறப்போ, தனக்கு ஒரு பையன் இருக்கறதா மிஸ்டர் ஈஸ்வரன் சொல்லவேயில்லையே?"

"மறந்திருப்பாரு... நீ யாரு?"

"பெத்த பையனைக்கூடவா மறக்க முடியும்? ஒருவேளை நினைப்புல வச்சுக்கறமாதிரி நீ நடந்துக்கலையோ..."

அஜய், அப்போதே எரிச்சலானான்.

'என் வீட்டுல வந்து உட்கார்ந்து, என்னையே கேள்வி கேட்கிற நீ யாருடி?'

இப்படிக் கேட்க வேண்டுமென்றுதான் நினைத்தான். என்னவோ ஒன்று தடுத்தது... அதற்குள் அவளே தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள்.

"பை த பை, என் பேரு சுஜா... எங்கப்பா கேசவ், உங்க அப்பாவோட ஃபிரண்டு... உங்கப்பா பம்பாய் வந்தா, ரெண்டு பேரும் ஒரே தட்டுலதான் சாப்பிடுவாங்க...

அஜய் கிண்டலாகக் கேட்டான்.


"ஏன், உங்க வீட்டுல ஒரு தட்டுதான் இருக்கா?"

அவனது இடக்கை பொருட்படுத்தாமல் ஒய்யாரமாய்ப் பார்வையை வீசினாள் சுஜா.

"கேட்கறேனேன்னு தப்பா நெனைச்சுக்காத.. காலேஜ்ல இதுதான் ஃபர்ஸ்ட் இயரா?"

அவன் பல்லைக் கடித்துக்கொண்டு கையைப் பரபரவென தேய்த்துக் கொண்டான். அரை வினாடி தாமதித்திருந்தால்கூட அவளது பிடறியில் கைகொடுத்து வெளியே தள்ளியிருப்பான். சுஜாவுக்கு ஏதோ நல்ல தசை... தப்பித்தாள்.

இதற்குள் அர்ச்சனா, ஈஸ்வரன், மீனாட்சி



"இங்கே மேட்ச்ஃபிக்ஸிங் செய்யப்படும்!"
– சம்பத் குமாரி

மூவரும் உள்ளே வர, வீட்டிற்குள் நிலவிய இறுக்கமான சூழ்நிலையைப் பார்த்ததுமே, அர்ச்சனா புரிந்துகொண்டாள்.

'அச்சோ... இவள வரச் சொல்லிட்டு நாம எப்படி மறந்து தொலைச்சோம்?'

அவள் கொஞ்சம் பயத்துடனேயே அண்ணனைப் பார்த்தாள்.

அஜய்யிடம் ஒரு சுபாவம்... ஒன்றைப் பிடிக்கவில்லையென்றால் அப்புறம் தலை கீழே நின்றாலும் அவன் எண்ணத்தை மாற்ற முடியாது... பூனைக்குட்டி, நாய்க்குட்டியிலிருந்து அர்ச்சனா விரும்பி வளர்ப்பதற்காக வீட்டுக்குக் கொண்டு வரும் ஜந்துக்களை எல்லாம், அவளுக்குத் தெரியாமலேயே சாக்குப்பையில் போட்டு தெருக்கோடியில் கொண்டு விட்டு, ஒன்றுமே தெரியாத அப்பாவி போல் முகத்தை வைத்துக்கொண்டு உட்காருபவன் ஆயிற்றே...

"அம்மா நான் நாய் வளர்த்தா இவனுக்கென்ன? இந்த வீட்டுல எனக்கும் உரிமை இருக்குன்னு அவன்கிட்ட சொல்லு."

அவன் இதைக் கேட்டும், கண்களைப் புத்தகத்திலிருந்து எடுக்காமல் அமைதியாய்ச் சொல்வான்.

''வீட்டுக்கு ஒரு நாய் போதும்னு அவகிட்ட சொல்லும்மா...''

"நானாடா நாய்? நானா...?''

இப்படித் தொடரும் சண்டைக்கு முடிவே இருக்காது. நாய் பூனைக்கே கதி இதுவென்றால் இங்கேயே இனிமேல் தங்கப் போகும் சுஜாவின் நிலைமை என்னவென்று அர்ச்சனாவினால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.

அவள் மல்யுத்த வீரர்களுக்கு நடுவில் நின்று பரஸ்பரம் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்தும் ரெஃப்ரீ மாதிரி சுஜாவுக்கும் அஜய்க்கும் சுமுகமான உறவை ஏற்படுத்தும் படியாகப் பேசினாள்.

"சுஜா, இவன் என் அண்ணா. பேரு அஜய்."

"ம்... வந்தவுடனே ஒரு விதமா புரிஞ்சிகிட்டேன். ரொம்ப மிரண்டு போயிருக்கான்? பொம்பளைகூட பேசினா காதலுக்குப் போயிடும்னு உங்கம்மா ஏதாவது பயமுறுத்தி வச்சிருக்காங்களா?"

இதைக் கேட்டு மீனாட்சி அதிர்ந்தாள்.

"ஐயோ ஈஸ்வரா! என்ன இது அபாண்டம்?"

உடனே ஈஸ்வரன் மனைவியின் காதோடு கிசுகிசுத்தார்.

"அந்தப் பொண்ணு இப்படிப் பேசறதுக்கெல்லாம் நானா பொறுப்பு?"



''தலைவர் இன்னிக்கு கோர்ட்டுக்கு நிச்சயமா போய் குற்றப்பத்திரிகையை வாங்கிக் கொள்வார்னு நினைக்கிறேன்...''

''எப்படி?''

''கோணிப்பை எடுத்துக்கிட்டுப் போகிறாரே...''

—எஸ். மோகன்

''ஐயோ! நான் உங்களைச் சொல்லல. நான் அந்த பரமேஸ்வரனைச் சொன்னேன்...''

இப்படி அவர்களுக்குள் குட்டிப்புயல் உருவாகி, ஆந்திரா பக்கம் போவதா, நாகப்பட்டினத்தில் போய் மையமிடுவதா என்றே புரியாமல் சுழன்று கொண்டிருக்க, அர்ச்சனா படபடப்பாகக் கூறினாள்.

"கொஞ்சம் கூச்ச சுபாவம்பா. ஆனா காலேஜ்ல, படிப்புல, மிருதங்கத்துல... ஏன் டென்னிஸ்லகூட அவன்தான் ஃபர்ஸ்ட்."

சுஜா அவனைத் திரும்பிப் பார்த்து மூக்கு நுனியில் ஒட்டியிருந்த மட்டர் பன்னீரைக் கைக்குட்டையால் துடைத்துவிட்டு அலட்சியமாய் இவளைத் திரும்பிப் பார்த்து விட்டுச் சொன்னாள்.

"மத்ததுல எப்படியோ டென்னிஸ்ல என்னை ஜெயிக்க இனிமேல்தான் ஒருத்தன் பொறந்து வரணும். சம்மதமானா உங்க காலனில இருக்கிற டென்னிஸ் கோர்ட்டுல உங்கண்ணா என்கூட சிங்கிள்ஸ் வரட்டும்..."

இப்படிச் சொன்னவள் போகிற போக்கில் மெல்லிய முறுவலுடன் அர்ச்சனாவின் முதுகைத் தட்டிச் சொன்னாள்.

"இனிமே தண்ணியில்லாத ஹோட்டலில் சாப்பிடப் போகாதீங்க. மூக்கு நுனியெல்லாம் சரியா அலம்பவேயில்ல."

இதைக் கேட்டு ஈஸ்வரன் உட்பட அங்கிருந்த நால்வருமே அவசரமாய்க் கையையும் வாயையும் ஒரு சேர... துடைத்துக் கொண்டார்கள்.

தான் ஹோட்டலுக்கே போகாமலே பதற்றத்தில் அன்று வாய் துடைத்துக் கொண்டதை நினைத்தால் இப்பொழுதும் அஜய்க்குச் சிரிப்பு வரும். (தொடரும்)



இந்தியாவின் தலைநகரம் டெல்லி!

வினோத்

டி.வியில் செய்திகளைக் கேட்கும் தமிழர்களுக்கு Intelligence quotient is very low என்பது சன் செய்திக்காரர்களின் அபிப்பிராயம் போலிருக்கிறது. (பொதுவாக எல்லா டி.வி. செய்திக்காரர்களுமே அப்படித்தான் நினைக்கிறார்கள்.)

இல்லாவிட்டால் செய்திகளின்போது, 'அமெரிக்காவில் உள்ள வாஷிங்டன் நகரத்தில்', 'இங்கிலாந்து தலைநகரமான லண்டனில்', 'பாகிஸ்தானில் உள்ள இஸ்லாமாபாத்தில்....' என்று ஒரு சொல் ஏன் சேர்த்துக் கொள்ள வேண்டும்? வாஷிங்டனில், லண்டனில், இஸ்லாமாபாத்தில் என்று சொன்னால் புரிந்து கொள்ள மாட்டோமா?

இப்படியே போனால் 'இந்தியத் தலைநகரமான புது டெல்லியில்', 'தமிழ்நாட்டில் உள்ள தூத்துக்குடியில்' என்று சொல்ல ஆரம்பித்து விடுவார்கள்.

முன்னெல்லாம் ஜேம்ஸ் வசந்தின் முகத்தில் புன்சிரிப்பு நிறையவே இருக்கும் விஜய் டி.வியில் 'மகாலட்சாதிபதி' போட்டிகளில், பரிசில் தாராளமாகவும் புன்னகையில் சிக்கனமாயும் இருக்கிறார். எனினும் இந்தத் துறையில் சர்வீஸ் போட்டவர். எனவே சரளம் அவருக்குச் சகஜம்.

இரண்டாவது சுற்று, மூன்றாவது சுற்று என்று இந்தப் புதிர்ப் போட்டியைத் தொடர்ந்து பார்த்து வருபவர்களுக்கு மட்டுமே இதன் நடைமுறைகள் புரியும். ஒரு திரைப்படக் காட்சியை நிமிட நேரம் திரையில் காட்டிவிட்டு, அது சம்பந்தமான கேள்விகளை வீசினார் ஜேம்ஸ் வசந்த். 'மணிவண்ணன் தன் துண்டைப் போட்டுக் கொண்டிருந்தது இடது தோளிலா, வலது தோளிலா? அவர் வாட்ச் கட்டியிருந்தாரா? அந்த அறையில் பூந்தொட்டி இருந்ததா?'–

இத்தகைய சுலபமான வினாக்களுக்குப் பதில் கூறி ஒரு பெண்மணி ஆயிரக் கணக்கான ரூபாயைப் பெற்றார்.

'ஸ்கேனரைக் கண்டுபிடித்தவரின் பெயர் என்ன? தென் துருவத்தின் மீது முதன் முதல் பறந்தவர் யார்?' முதலான கடினமான கேள்விகளுக்கு விடை கூற முடியாமல் இன்னொரு

சகோதரி ஆயிரக்கணக்கில் இழந்தார்.

எதுவானால் என்ன? பலம் கொடுப்பது பணம். A rich man is one who is not afraid to ask the salesman to show him something cheaper என்பது அனுபவஸ்தர் வாக்கு.

Who ran to help me when I fell and kiss the place to make it well? My mother என்று ஆன் டெய்லர் என்ற கவிஞர் பாடியது ஞாபகம் வந்தது, 'முகவரி'யில் அஜித் படும் பாட்டைப் பார்த்தபோது. (ராஜ்)

கொட்டுகிற மழையில் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு 'ஓ நிலவே ஓ நிலவே' என்று வெகு நேரத்துக்குப் பாடுகிறார். ஏற்கெனவே நோயாளி என்பதை ஒரு வாரத்துத் தாடி காட்டுகிறது. சுற்றிலும் ஜோதிகா உட்பட ஏகப்பட்ட பேர் ஏகப்பட்ட குடைகளுடன் இருந்தாலும் யாரும் அவரை ஏனென்று கேட்கவில்லை. அஜித்தின் அன்னை மட்டும் அங்கே இருந்திருந்தால்...! 'இப்படி நனையறியேடா குழந்தே! உடம்புக்கு வந்தால் இவங்களா காப்பாத்துவாங்க?' என்று பாய்ந்து பரிந்து, வேடிக்கை பார்ப்பவர்களில் ஒருவருடைய குடையைப் பிடுங்கி வந்து தனயனுக்குப் பிடிப்பதோடு தலையையும் துவட்டிவிட மாட்டாரா? ஆயிரமானாலும் அம்மா போல் வராது!

"விகடனில் 'அவதார புருஷன்' வெளிவந்த முதல் நாளே, முதல் நபராகப் போனில் என்னைக் கூப்பிட்டுப் பாராட்டியவர் முதல்வர் கலைஞர்தான். 'உங்களுக்கு ராமாயணம் பிடிக்காதே?' என்று நான் சொன்னேன். 'எனக்கு ராமாயண வாலியையும் பிடிக்கும்; வாலி எழுதிய ராமாயணமும் பிடிக்கும்' என்றார் கலைஞர்."

வீரபாண்டியனின் 'நேருக்கு நேர்' பேட்டியின்போது இதைச் சொன்னார் கவிஞர் வாலி. எம்.ஜி.ஆரையும் ஜெயலலிதாவையும் புகழ்ந்து அந்த நாளில் அவர் எழுதிய பாடல்களைப் பற்றி வீரபாண்டியன் குடைந்து கொண்டேயிருக்க, கவிஞரின் பதில்கள் கடகடவென்று வந்து கொண்டேயிருந்தன- even though not always completely convincing.

சொன்னால் சிலருக்குக் கோபம் வரக் கூடும் என்பதால், தமிழ்ச் சொற்களை அட்சர சுத்தமாக உச்சரிப்பது பற்றி யாரும் அதிகம் பேசுவதில்லை. you will be damned if you do and you will be damned if you dont do என்கிற தர்மசங்கடக் கேஸ்.

ஆனால் 'பொதிகை'யின் 'சந்திப்போம்-சிந்திப்போம்' நிகழ்ச்சியில் பேசிய விவேகானந்தா வித்யாலயா சண்முகநாதன் வழவழாவாக நழுவவில்லை. "தமிழின் சிறப்பு எழுத்து ழகரம். உலகத்தில் வேறு எந்த மொழியிலும் இல்லாதது. தமிழுக்குக் கிரீடம். வாழைப்பழம், யாழ்ப்பாணம் போன்ற சொற்களைத் திருத்தமாக உச்சரிப்பதற்குப் பள்ளிப் பருவத்திலேயே குழந்தைகளுக்குச் சொல்லித் தர வேண்டும். அப்போது தான் வளர்ந்த பிறகு சுத்தமாக உச்சரிப்பார்கள்" என்றார் பேராசிரியர் சண்முகநாதன். Point to Ponder. ○





தலைவர் மறுக்கிறார்!

“சமத்துவபுர கடனாளிகள்” என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக... (14.1.2001 கல்கி)

மேலக்கோட்டை சமத்துவபுரத்தில் நான்கு வீடுகள் மட்டுமே பூட்டப்பட்டு உள்ளன. இவற்றில் ஒதுக்கீடுகளை ரத்து செய்து புதிதாக பயனாளிகளைத் தேர்வு செய்து அவர்களுக்கு மறு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பால் மாடுகளுக்கென வாங்கிய கடனைத் திரும்பக் கட்டாமலும், கறவைமாடுகளை விற்றுவிட்டும் அவை பால் கறக்கும்பொழுது கூட்டுறவு சங்கத்திற்குப் பால் ஊற்றாமல் தனியாருக்கு ஊற்றியும் தவறுகளைச் செய்துள்ளனர். இப்படிச் செய்தவர்களோடு கலந்துபேசி அவர்கள் முறையாக அரசின் திட்டங்களைப் பயன்படுத்துவதற்கும் மீதமுள்ள கடனைத் திரும்ப செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமத்துவபுரத்தில் அமைந்துள்ள நூலகம் பகுதிநேர நூலகமேயாகும். நூலகத்துறையில் இருந்து பணிக்கு நியமிக்கப்பட்டவர் கடந்த இரண்டு வாரங்களாக வேலைக்கு வராமல் தாமாகவே நின்றுவிட்டார். மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சமத்துவபுரங்களில் இயங்கும் சுகாதார நிலையங்கள் துணைசுகாதார நிலையங்கள் ஆகும். அவற்றிற்கென்று தனியாக மருத்துவர்களோ, செவிலியர்களோ கிடையாது. அருகாமையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து வாரம் இருமுறை செவிலியர்களும், ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று மருத்துவ அலுவலரும் இந்தத் துணை சுகாதார நிலையத்திற்கு வருகை தந்து சமத்துவபுரத்தில் குடியிருந்துவரும் பயனாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்கள். மேலக்கோட்டை சமத்துவபுரத்தில் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 120 பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் சிறப்பு அம்சமாக சமத்துவபுரங்களில் ஒரு ரூபாய் நாணயத்தைப் பயன்படுத்தும் தொலைபேசி பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் இந்தப் பெட்டிகளில் நாணயத்திற்குப் பதிலாக மற்ற பொருட்களைப் பயன்படுத்துவதால் இவை அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன. தகவல் தெரிந்தவுடன் தொலைபேசித் துறையினருடன் தொடர்பு கொண்டு அவை சரி செய்யப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பயனாளியும் சமத்துவபுரம் அமைக்கத் தேவையான மொத்த செலவுத் தொகையில் 5 சதவிகிதமாவது தனது பங்குத் தொகையாக செலுத்த வேண்டும் என்பது மத்திய அரசின் வீட்டுவசதி திட்டம் அறிமுகப்படுத்தியுள்ள விதி. இதற்கான ஒரு பயனாளியின் பங்கு ரூ.5000/- ஆகும். இதைத் தவிர்த்து, வீடுகளில் மின்சார வசதி ஏற்படுத்துவதற்குத் தேவையான மின்சாரப் பொருட்கள் வாங்கி இந்தப் பணியைச் செய்து முடிக்க ஒரு வீட்டுக்கு 1200/- என திட்டமிடப்பட்டு ஆக மொத்தம் ஒவ்வொரு பயனாளியிடமிருந்தும் ரூ. 6200/- வசூல் செய்யப்படுகிறது. இதனை முன்னரே செலுத்திவிட்டால், பின்னர் கடன் சுமை இருக்காது என்ற நோக்கத்தில் பயனாளிகள் தாங்களே முன் வந்து செலுத்துகிறார்கள். இதில் கட்டாயம் எதுவுமில்லை. இவ்வாறு வசூல் செய்யப்படும் பணத்திற்கு உடனடியாக கையொப்பமிடப்பட்ட ரசீது தரப்படுகிறது.

தங்கள் பத்திரிகையில் வெளியான ரசீது எண். 85ல் பணம் வசூலிப்பவர் பெயரும் பதவியும் என்பதன் கீழ் பணம் வசூலித்த அலுவலர் திரு. சங்கரலிங்கம் என்று கையொப்பமிட்டு, 'ஊர் நல அலுவலர் நிலை I, ஊராட்சி ஒன்றியம், மேலூர்' எனத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

வீ. தங்கவேலு
மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை.

எமது நிருபர் கூறுகிறார்:

நெடுநாட்களாகப் பூட்டப்பட்டுக்கிடக்கும் பதினோரு வீடுகளை, சமத்துவபுரவாசியான சேகரே அழைத்துச் சென்று காட்டினார். இவர் சமத்துவபுர ஆலோசனைக் குழுவில் ஒருவர். சமத்துவபுரத் தொலைபேசி, அங்குள்ள ரேஷன் கடையில் வைக்கப்பட்டுள்ளது. இதனால், ரேஷன் கடை திறந்திருக்கும்போது மட்டுமே பயன்படுத்த முடிகிறது. யாரேனும் ஒருவரது கட்டுப்பாட்டில் தொலைபேசியை விடலாம் என்பதே சமத்துவபுர மக்களின் வேண்டுகோள்.

திருவாதவூர் சமத்துவபுரத்தில், பயனாளிக்குக் கொடுக்கப்பட்ட ரசீதில், கையொப்பம் இட வேண்டிய இடத்தில் கையொப்பம் இடவில்லை. 'கட்டட மையம் மதுரை' என்ற ரசீது தலைப்பிற்குக் கீழ், அந்த அலுவலக முகவரி, முத்திரை எதுவும் இல்லாததே சந்தேகத்துக்கு இடமளித்தது.

KALKI SHOPPING PAGE



"கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில்
விளம்பரம்
செய்ய ரூ.1250/-
மட்டுமே. செய்து
பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.
போன்: 2345622, 2345623

விற்பனையாளர்கள் தேவை

30 வருடம் அனுபவம் வாய்ந்த எங்களின் DMP லுங்கிகளை தமிழகம் மற்றும் அனைத்து ஊர்களுக்கும் விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை

எங்களின் தயாரிப்புகள்

D.M.P.	D.M.P.	D.M.P.	D.M.P.
TOMATTO TRADE MARK MADE IN INDIA	TRACTOR TRADE MARK MADE IN INDIA	441 TRADE MARK MADE IN INDIA	405 TRADE MARK MADE IN INDIA

D.M.P. LUNGI COMPANY

MFRS.LUNGIES EXPORT FABRICS
OLD NO. 47, NEW NO. 74 SAVARI MUTHU STREET,
MANNADY, CHENNAI 600 001
TEL: 5280350

ஏற்றுமதி தரம் வாய்ந்தது — DMP லுங்கிகள் அனைவரும் அணியக் கூடியது.

வாய்மையே வாழ்க்கை! நேர்மையே தெய்வம்!

தமிழ் ஜோதிடப் பத்திரிகை உலகத்தில் ஒரு தனி சகாப்தம்!

இதை மிஞ்சிய இன்னொரு ஆதாரபூர்வமான ஜோதிட ஏடு தமிழில் மாதமிருமுறையாக வெளிவருகிறதா என்ற கேள்விக்கு இதை வாசிப்பவர்களது உள்ளமே விடை கூறும்!

24-ஆம் ஆண்டை நோக்கி வெற்றிநடைபோடும் **பாலஜோதிடம்** மாதமிருமுறை ஏடு புத்தம்புதுப்பொலிவுடன், முற்றிலும் எல்லோருக்கும் பயன்படும் வகையில், அரும்பெரும் கருத்துக்களுடன், தெள்ளத்தெளிவான விளக்கங்களுடன் 1-2-2001 முதல் பவனி வரவிருக்கிறது! பல ஊர்களில் இப் பத்திரிகையை விற்று, கமிஷன் போக மீதம் பணத்தை அலுவலகத்துக்கு அனுப்பாத அந்த ஏஜண்டுத் தோழர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள்.

ஆகவே, ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் உடனே தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். இந்தப் பயனுள்ள தெய்வீகப் பணியில் உண்மையாக ஈடுபடுகின்றவர்களுக்கு இறைச்சக்தியின் அருள் கூடும் என்று இதயபூர்வமாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.


தனிப்பிரதி விலை ரூ. 6/-
ஆறு மாதச் சந்தா ரூ. 68/-
ஆண்டுச் சந்தா ரூ. 132/-
ஆயுள் சந்தா ரூ. 1000/-

பழைய, புதிய எல்லா ஏஜண்டுகளுக்கும் 30% கமிஷன் தரப்படும். புதிய ஏஜண்டுகள் முன் பணம் அனுப்பித் தேவையான பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.


வெளிநாடு (தபால் செலவு உள்பட) : ஓராண்டுச் சந்தா : ரூ. 650/-

விவரங்களுக்கு:

மானேஜர், **பாலஜோதிடம்–எண்கள்**. 1/5, ரெட்டிக்குப்பம் சாலை, மேற்கு மாம்பலம், சென்னை-600 033 தொலைபேசி: 4850043.



அழைக்கிறது அமெரிக்கா!



கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்

குவிஸ் போட்டி—13

இந்த வார கேள்விகள் எல்லாமே 'பயங்கர'மானவை! முந்தைய வாரங்களில் செய்ததைப் போலவே விடைகளை கூப்பனில் எழுதி மற்ற கூப்பன்களோடு பூட்டி வையுங்கள். இருபத்தி ஆறு வார இறுதியில் எல்லா கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். இதில் மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதும் ஒரு நபருக்கு

அமெரிக்கப் பயணம் பரிசு!

ஐரோப்பா பயணம் இரண்டாவது பரிசு!

மலேஷியா—சிங்கப்பூர் பயணம் மூன்றாவது பரிசு!

இந்த மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான பதிலை எழுதியிருந்தால் இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை! பயணப் பரிசு பெறாதவர்களுக்கு அமரர் கல்கியின் நூல்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி!

குவிஸ் கூப்பன்—13

1) உகாண்டாவின் கொடுங்கோலன் இடி அமீன் இப்போது எந்த நாட்டில் வசிக்கிறார்?

2) ஜாலியன்வாலாபாக் படுகொலைகளுக்குக் காரணமான பிரிட்டிஷ் ராணுவத் தளபதியின் பெயர் என்ன?

3) 'ஸ்டெபியின் ரசிகர்' என்று தன்னை அறிவித்துக் கொண்ட ஒருவனால் முதுகில் கத்தியால் குத்தப்பட்ட பிரபல டென்னிஸ் வீராங்கனை யார்?

4) ராஜீவ் காந்தி படுகொலையில் மனித வெடிகுண்டாகச் செயல்பட்ட பெண்ணின் பெயர் என்ன?

5) ஸ்பீல்பெர்க் இயக்கிய 'ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட்' படத்தில் எந்த சர்வாதிகாரியின் கொடூரங்கள் விவரிக்கப்படுகின்றன?

6) சுமார் ஒரு வருடத்திற்கு முன் ஒரிஸாவில் 'வேனோ'டு எரிக்கப்பட்ட கிறிஸ்தவ மதபோதகரின் பெயர் என்ன?

விடைகள்:

1) ....

2) ....


3) ....

4) ....

5) ....

6) ....

கலைஞர் ஆட்சி



1996ல் நான்காவது முறையாக கலைஞர் முதல்வர் பொறுப்பை ஏற்றாலும் இப்போதுதான் முதன் முறையாக முழு பதவிக்காலமான ஐந்தாண்டுகளும் ஆட்சி புரிந்திருக்கிறார். எதிர்க் கட்சிகள், பத்திரிகைகள் கலைஞர் ஆட்சியை விமர்சனம் செய்வது ஒரு பக்கம் இருக்க, வாக்காளர்கள் என்ன சொல்கிறார்கள்? நகரில் குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கண்ணில் பட்டவர்களை நிறுத்தி கலைஞர் ஆட்சியை எடை போடச் சொன்னோம்.



❶ வெங்கடேஷ் ❷ மணி ❸ கிட்டப்பா ❹ சகுந்தலா ❺ ஆராவமுதன்

வெங்கடேஷ் *(தள்ளுவண்டி வியாபாரம்)* : பாலம் கட்டினால் போதுமாங்க. நம்மளைப் பொழைக்க வுடமாட்டேங்கறாங்க. யாருக்கும் இடைஞ்சல் இல்லாம கடைபோட்டாக்கூட போலீஸ் பிடிச்சிட்டுப் போயிடுது. மாசத்துக்கு ரெண்டு கேஸ் போடறாங்க. எனக்கு நாலு பெண் குழந்தைகள். ஒரு பையன். இப்படி கோர்ட்டு கேஸுன்னு போனா எப்படிங்க ஐயா பொழைக்கறது? கலைஞர் ஆட்சியிலே நகரத்துல இருக்கிற ஏழைகளுக்குப் பிரயோஜனமா ஒண்ணும் செய்ததா தெரியலீங்க. எங்க வாழ்க்கை அப்படியேதாங்க இருக்குது. அம்மா ஆட்சியிலே கடையாவது போடவுட்டாங்க. ஆ.. சொல்ல மறந்துட்டேங்க. நாமெல்லாம் எம்.ஜி.ஆர். ரசிகருங்க.

மணி *(பழரச வியாபாரம்)* : கலைஞர் கிராமத்துக்கெல்லாம் நல்லது செய்திருக்கார்ன்னு சொல்லிக்கறாங்க. ஆனால் சென்னை இப்போது ரொம்ப சுத்தமா இருக்குதுங்க. பாலங்கள் கட்டி அசத்திட்டாங்க. நான் பத்தாவது படித்திருக்கேன். ஆசிரியர் பதவிக்கெல்லாம் பைசா வாங்காம கலைஞர் ஐயா ஆட்சியில் வேலை தந்தாங்களாம். அது போல எங்களைப் போன்றவங்களுக்குக் காசு வாங்காம பியூன் வேலை போட்டுக் கொடுக்கணும்.

கிட்டப்பா *(அச்சகத் தொழிலாளி)* : கலைஞர் ஆட்சியிலே தொழில் வளர்ச்சி பிரமாதம்னு எல்லோரும் சொல்றாங்க. ஆனா பாருங்க. தொழித்

எடை போடுகிறார்கள்...

எடை போடுகிறார்கள்...

எடை போடுகிறார்கள்...

சாலைக்கு நிலம் கொடுத்தவங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கலை. ஹூண்டாய் கம்பெனிக்கு நிலம் கொடுத்தவங்களுக்கு இதுவரை நஷ்ட ஈடு தராமல் இழுத்தடிக்கறாங்க. நான் கஷ்டப்பட்டு சேமித்து வாங்கிய நிலத்தை எடுத்துக்கிட்டாங்க. பைசா கொடுக்கலை. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு வாரியம் அமைச்சதா பெருமையாச் சொல்றாங்க. டைலர், தச்சர், பொற்கொல்லர் ஆகியோரெல்லாம் இந்த வாரியத்தால பயனடையப் போறாங்க. ஆனால் தமிழ்நாட்டில் சிறு அச்சகங்களில் பத்து லட்சம் அச்சகத் தொழிலாளிகள் வேலை செய்யறாங்க. அவங்களுக்கு இந்த வாரியத்தால் பயனேதும் இல்லை. முதல்வர் இந்த விஷயத்தில் எதாவது செய்தாகணும்.

சகுந்தலா *(பூ வியாபாரம்)* : கலைஞர் ஆட்சியிலே பெரிய பிரச்னை எதுவுமில்லை. ரேஷன் கடையில் எல்லாம் ஒழுங்காதாங்க கிடைக்குது. வருடக் கணக்காய் ரோட்டோரத்தில்தாங்க வியாபாரம். குடிசை மாற்று வாரிய வீட்டில்தாங்க இருக்கோம். மாடியில இருக்கிறதால எப்பவும் குடி தண்ணீர்ப் பிரச்னை. உலகமே புரண்டு போனாலும் இரட்டை இலைக்குதான் வோட்டு. டி.வி.யில் எம்.ஜி.ஆர். பாட்டு போட்டா எனக்கு கண் கலங்கிடுங்க.

ஆராவமுதன் *(ஓய்வு பெற்ற ஆசிரியர்)* : 'சமத்துவபுரம்', 'உழவர் சந்தை', 'நமக்கு நாமே' போன்ற திட்டங்கள் நல்ல திட்டங்கள். ஆனால் இவை முழு வெற்றி பெற்று விட்டதா என்றால் கேள்விக்குறிதான். காவிரி, முல்லைப் பெரியார் என்று நதிநீர்ப் பிரச்னை தீர்ந்த பாடில்லை. கிருஷ்ணாகூட தகராறு செய்யும் போலிருக்கிறது. கணினி மற்றும் மென்பொருட்கள் துறையில் கலைஞர் அரசு கொடுக்கும் ஆக்கமும் ஊக்கமும் பாராட்டத்தக்கவை. அரசு அலுவலகங்களில் அதிகாரிகளின் மெத்தனப் போக்கு தொடர்கிறது. குறிப்பா மாநகராட்சியில் சொத்துவரி அப்பீல் பிரிவில் இன்னும் சுறுசுறுப்பு தேவை. மக்கள் நல்வாழ்வுத் துறை இன்னமும் விழிப்புடன் பணியாற்ற வேண்டும். பல கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் இருந்தும் டாக்டர்கள் இல்லை.

கிஷோர்குமார் *(கல்லூரி மாணவர்)* : தகவல் தொழில் நுட்பத் துறையில் கலைஞர் அரசு செய்திருக்கும் சாதனைகள் பாராட்டத்தக்கவை. கிருஷ்ணா எதிர்பார்த்தபடி வரவில்லை. கலைஞர் அரசு இந்த விஷயத்தில் இன்னமும் துடிப்புடன் இருக்க வேண்டும். இப்போதே குடி தண்ணீர்ப் பஞ்சம் தலை விரித்தாடுகிறது. கோடையில் என்ன ஆகப் போகிறதோ! இந்த ஐந்து வருடமும் மாயாவி வீரப்பனைப் பிடிக்காதது கலைஞர் அரசுக்கு ஒரு கரும் புள்ளிதான். கோவை வெடி குண்டு சம்பவம் கலைஞர் அரசில் நடந்த மற்றொரு சோகமான விஷயம். தமிழ் தேசியம் பேசிக் கொண்டு தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவோரை உடனடியாக அடக்க வேண்டும்.



லதா வெங்கடேஷ் *(குடும்பத் தலைவி)* மிகவும் பாராட்டத்தக்க அம்சம், அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டுப்பாட்டில் இருப்பதுடன், அவற்றுக்கு எந்தத் தட்டுப்பாடும் வரவில்லை

என்பதுதான். ஆனா வறுமை கோட்டுக்குக் கீழே உள்ளவங்களுக்குதான் சர்க்கரை என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. கலைஞர் இதை எதிர்த்து உடனடியாகக் குரல் கொடுக்க வேண்டும். நகரைப் பொருத்தவரை உடனடியாக கலைஞர் கவனிக்க வேண்டியது குடிநீர்ப் பிரச்னை. வீரப்பன் விவகாரத்தில் கலைஞர் அரசு மெத்தனமாக இருந்து விட்டது. கட் அவுட் கலாசாரத்துக்கு கெட் அவுட் சொன்னது பாராட்டத் தக்கது.



⑥ கிஷோர் ⑦ லதா வெங்கடேஷ்
⑧ உமா ⑨ அந்தோணி
⑩ மக்பூல் ஜான்

உமா *(கல்லூரி மாணவி)* : தமிழ் மீடியம் தான் எல்லோரும் படிக்கணும்னு வற்புறுத்தக் கூடாது. வீரப்பன் விவகாரம் ஜவ்வு மாதிரி இழுக்கப்படறது சரியில்லை. மத்திய அரசு சமையல் கேஸ் விலையை ஏத்தினபோது மம்தா குரல் கொடுத்தாங்க. ஆனால் கலைஞர் அமைதியாகிவிட்டார். இது நடுத்தர மக்களுக்குக் கொஞ்சம் வருத்தம்தான். டைடல் பார்க் பிரமாதம். அதேபோல தொழில் வளர்ச்சியும் ஓ.கே. போக்குவரத்து துறை நல்லாயிருக்கு. ஆடம்பர விழாக்களுக்கு 'தடா' போடணும்.

அந்தோணி *(ஓய்வு பெற்ற அரசு ஊழியர்)* : லஞ்சம் ஊழல் என்று ஜெயலலிதாவைச் சொன்னாங்க. அவருக்கும் மக்கள் தண்டனை கொடுத்துட்டாங்க. இப்ப இவரது ஆட்சியில் இரண்டு அமைச்சர்கள்மீது நீதிமன்றத்தில் ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறதே. அவர்களை ஏன் இன்னமும் நீக்கவில்லை. உழவர் சந்தை, சமத்துவபுரம் நல்ல திட்டங்கள்தான். ஆனால் இப்போது பெரும்பாலான உழவர் சந்தைகள் தனியார் வியாபாரிகள், அரசு ஊழியர்கள் சதியினால் செயலற்றுப் போய்விட்டன.

மக்பூல் ஜான் *(சிறு தொழில் அதிபர்)* : அயோத்திப் பிரச்னையில் தேர்தல் ஆதாயங்களுக்காக பா.ஜ.க.வும் அதன் துணை அமைப்புகளும் ரொம்பவே அலம்பல் பண்ணறாங்க. கூட்டணியில் இருப்பதால் கலைஞர் ஒன்றும் பேச முடியவில்லை. டீசல், பெட்ரோல், சமையல் எரிவாயு ஆகியவையின் விலை உயர்வால் நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசு தான் காரணம் என்று பழி போட்டு கலைஞர் தப்பிக்க முடியாது. மத்திய அரசில் ஒரு அங்கமாக இருக்கும் தி.மு.க.வுக்கும் இதில் பங்கு இருக்கிறது. தமிழகத்திலேயே பல சிறுபான்மையோரின் வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து வருட காலமாக வீரப்பன் விவகாரத்தில் மெத்தனமாக இருந்தது பற்றிச் சொல்லியே ஆக வேண்டும். இப்போது விடுதலைப் புலிகள் தொடர்பு என்றெல்லாம் ஆகி விவகாரம் இடியாப்பச் சிக்கலாகி விட்டது. தீவிரவாதிகள் மிகவும் உற்சாகமாகிவிட்டார்கள். உழவர் சந்தை மட்டுமே ஆறுதலான விஷயம். அதிலும் பல குளறுபடிகள் உள்ளன.

- **கௌசி**

படங்கள் : **ராஜன்**

4 ராஜேஷ் குமார்

வருண் டெலிபோனில் மறுபடியும் கேட்டான்.

''உன்னோட பேர் என்னன்னு சொன்னே?''

''பர்வதராஜகுமாரி...''

''இது உன்னோட உண்மையான பேரா...?''

''நீ எப்படி எடுத்துக்கிட்டாலும் சரி. நான் சொன்ன டயத்துக்கு ஹோட்டல் பட்டர்ஃப்ளைக்கு வந்து சேர்...''

''ரூம் நெம்பரை இன்னொரு தடவை சொல்லு.''

''த்ரீ ஃபோர் ஸெவன்...''

''சரியா நாலு மணிக்கு வர்றேன்.''

''வா...''

''பத்து நிமிஷத்துக்கு மேல் உன் கூட நான் பேச மாட்டேன்...''

மறுமுனையில் அவன் சிரித்தான்.

''எனக்கு எட்டு நிமிஷம் போதும். மீதி ரெண்டு நிமிஷம் இருக்கும்போதே நீ ஹோட்டலை விட்டு வெளியே போயிடலாம்.''

வருண் கோபத்தோடு ரிஸீவரை வைக்க முயன்ற விநாடி, ''ஒரு நிமிஷம்'' என்று குரல்கொடுத்தான்.

''என்ன...?''

''ஜெனிஃபரை நீ உண்மையாவே லவ்வறியா.... இல்லை... டைம்பாஸா...?''

''உனக்கு இது தேவையில்லாத கேள்வி.''

''அய்யய்யோ அப்படியெல்லாம் சொல்லி நீ தப்பிச்சுக்க முடியாது வருண்! நீ சம்பந்தப் பட்ட ஒவ்வொரு விஷயமும் எனக்கு அத்யா வசிய தேவை. நான் உன் கூட பேசப் போகிற எட்டு நிமிஷத்தில் உன்னோட காதலைப் பத்திப் பேசவும் ஒரு நிமிஷம் எடுத்துக்குவேன். சரி... சரி... ரிஸீவரை வெச்சுடு. உன்னோட ஆள் ஜெனிஃபர் பொறுமையிழந்து டேபிளை விட்டு எந்திருச்சு வந்துட்டிருக்கா. ஃபோன் யார்கிட்டேயிருந்துன்னு கேட்பா. ஒரு பொருத்தமான பொய்யைச் சொல்லி வை. பொய் பேச உனக்குக் கத்துக் கொடுக்கணுமா என்ன! பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானாச்சே நீ?''

அவன் சிரித்துக் கொண்டே இணைப்பைத் துண்டித்து விட, வருண் கோபம் தலைக்கேற சுற்றும் முற்றும் பார்த்தான். 'இதே ஹோட்டல் வளாகத்தில் எங்கேயோ மறைந்து நின்று என்னைப் பார்த்துக் கொண்டே செல்ஃபோனில் பேசியிருக்கிறான்.'

தோளைத் தொட்ட உணர்வு.

திரும்பினான்.

ஜெனிஃபர் நின்றிருந்தாள்.

''என்ன வருண்... போன்ல யாரு...?''

''அது...அது...வந்து... ஒரு ஃப்ரண்ட்.''

''நீ இந்த நேரத்துக்கு இந்த ஹோட்டல்ல இருப்பேன்னு அந்த ஃப்ரண்ட்டுக்கு எப்படி தெரியும்?''

''நீயும் நானும் இங்கே மீட் பண்ணப் போறதைப்பத்தி காலையிலேயே சொல்லியிருந்தேன். அதான் போன் பண்ணியிருக்கான்...''

''எதாவது அர்ஜெண்ட் மேட்டரா?''

''இல்லை... இண்டர்வ்யூ ரிசல்ட் என்னாச்சுன்னு கேட்





உறடு பயணி
ரிலைவு

டான்.''

''நோ... நீ பொய் சொல்றே?''

''பொய்யா...?''

''ம்... பொய் சொல்றவங்களுக்குத்தான் இப்படி கண்டபடி வேர்க்கும்.''

வருண் அவஸ்தையாய்ச் சிரித்து வைத்தான்.

''எப்படியோ ஸ்மெல் பண்ணிட்டே... என்னோட பாடி லாங்வேஜ் உனக்கு நல்லாவே புரியுது...''

''எனக்கு வேண்டியது உண்மை. ஐஸ் கிடையாது. போன்ல யாரு...?''

''சத்தியமா என் ஃப்ரண்ட்தான். பட் அவன் சொன்ன விஷயம்தான் வயித்தைக் கலக்கிட்டிருக்கு...''

ஜெனிஃபரின் முகம் இப்போது மாறியது.

''உன்னோட ஃப்ரண்ட் என்ன சொன்னார்?''

''போன வருஷம் என்னோட ரூம்ல சுதாகர்ன்னு ஒருத்தன் என் ரூம் மேட்டாயிருந்ததும் திடீர்ன்னு ஒருநாள் அவன் சயனைட் சாப்பிட்டுத் தற்கொலை பண்ணிட்டதும் உனக்குத் தெரியும்...''

''ஆமா... சொல்லியிருக்கே...!''

''அவன் எதுக்காக தற்கொலை பண்ணிக்கிட்டான்னு இதுவரைக்கும் காரணம் தெரியாமே இருந்தது. இன்னிக்கு அந்தக் காரணம் வெளியே வந்திருக்காம்.''

வருணின் மூளைப் பிரதேசத்துக்குள் பொய் புது வெள்ளமாய்ப் புரண்டது.

''என்ன காரணம்...?''

''அவன் ஏதோ ஒரு தீவிரவாதிகளோட கூட்டத்தைச் சேர்ந்தவனாம். போலீஸோட கெடுபிடிக்குப் பயந்துதான் தற்கொலை பண்ணிக்கிட்டானாம். போலீஸ் மறுபடியும் விசாரணைக்காக என் ரூமுக்கு வந்துட்டுப் போனதா நியூஸ்.''

''அதுக்கு நீ ஏன் பயப்படணும்?''

''என்ன ஜெனி... இப்படிச் சொல்றே... போலீஸ் விசாரணையைப் பத்தி உனக்குத் தெரியாது. விசாரணைங்கிற பேர்ல உயிரை எடுத்துடுவாங்க. நினைச்ச நேரம் ஒரு கான்ஸ்டபிள் வந்து இன்ஸ்பெக்டர் உங்களை ஸ்டேஷனுக்குக் கூப்பிட்டார் வந்துட்டு போங்கன்னு சொல்வார். ரொம்ப நாள் கழிச்சு ஒரு

நல்ல கம்பெனியில் இப்பத்தான் ஹெல்த்தியா ஒரு ஜாப் கிடைச்சிருக்கு. இந்த நேரத்துல போலீஸ் விசாரணை அது இதுன்னு வந்தா எனக்கு டென்ஷனாயிருக்காதா என்ன...?"

"இதோ பார் வருண்...! உனக்கு வேலை கிடைச்சிருக்கிற இந்த சந்தோஷமான நேரத்தை வேண்டாததையெல்லாம் நினைச்சு ஸ்பாய்ல் பண்ணிக்காதே...வா... சாப்பிடலாம். எனக்கு நல்ல பசி."

இரண்டு பேரும் டேபிளுக்கு வந்தார்கள்.

வருணின் மனசு முழுவதும் 'அந்த பர்வத ராஜகுமாரி அடைத்துக் கொண்டு இம்சைப் படுத்தினாள்.

"வருண்..." ஜெனிஃபர் கூப்பிட்டாள்.

"ம்..."

"என்ன ஆர்டர் பண்ணட்டும்?"

"பர்வதராஜகுமாரி..."

ஜெனிஃபர் விநோதமாய்த் தலையைச் சாய்த்து வருணைப் பார்க்க அவன் வலுக் கட்டாயமாகச் சிரித்து இயல்புக்கு வந்தான்.

"ஸாரி... ஜெனி...! என்னமோ உளறிட்டேன்..."

"நீ உளறலை வருண்... பர்வதராஜ குமாரின்னு தெளிவாவே சொன்னே...! யார் அந்த பர்வதராஜகுமாரி சொல்லு..."

"ஸாரி ஜெனி..! அந்த போன்கால் வந்ததி லிருந்தே ஒரே குழப்பம்."

"உன்னோட குழப்பத்துக்கும் இப்ப நீ சொன்ன பர்வதராஜகுமாரிக்கும் என்ன சம் பந்தம்...?"

"அது... வந்து..."

"சொல்லு...!"

"நீ என்ன ஆர்டர் பண்ணட்டும்னு கேட்ட போது ஒரு சரித்திர நாவலைப்பத்தி யோசனை பண்ணிட்டிருந்தேன்."

ஜெனிஃபர் தீர்க்கமாய் இறுகிய முகத் தோடு இடமும் வலமுமாய்த் தலையை ஆட்டி னாள்.

"நோ!.... நீ.. சரியில்லை வருண்! என்கிட்ட யிருந்து எதையோ மறைக்கிறே..?"

"சேச்சே...! இதுல மறைக்க என்ன இருக்கு ஜெனி! உனக்கு நல்ல பசின்னு சொன்னியே... மொதல்ல ஆர்டர் பண்ணு... தந்தூரி அயிட் டமா... மீல்ஸ் பிளேட்டா?"

ஜெனிஃபர் கையமர்த்தினாள். "வெயிட் வருண். இப்ப எனக்குப் பசியில்லை. எனக்கு உண்மை வேணும்."

"என்ன உண்மை...?"

"யார் அந்த பர்வதராஜகுமாரி?"

"ஒரு சரித்திர நாவலில்..."

"மறுபடியும் பொய்...! இப்ப உன் கூட டெலிபோனில் பேசியது ஆணா பெண்ணா....?"

"நான்தான் ஃப்ரெண்ட்ன்னு சொன் னேனே...! பேரு சீனிவாசராகவன்..."

"ஸாரி... எனக்கு நம்பிக்கையில்லை. உன்கிட்ட போன்ல பேசினது ஆணா பெண் ணான்னு கண்டுபிடிக்க எனக்கு வழி தெரி யும்..."

"எ....எப்படி....?"

"உனக்கு போன் வந்திருக்கிறதாக வந்து சொன்ன பேரரைக் கேட்டா தெரிஞ்சுரும். மொதல்ல போனை அட்டெண்ட் பண்ணி னது அந்த பேரர்தானே...?"

வருணுக்கு நாக்கு வறண்டது. ஜெனிஃபர் சுற்றும் முற்றும் பார்த்து சற்று தொலைவில் நின்றிருந்த பேரரைக் கையசைத்துக் கூப்பிட் டாள்.

"லீலாகிருஷ்ணன் தற்கொலை பண்ணிக் கிட்ட விஷயம் உனக்குத் தெரியுமா...?" - இந்தக் கேள்வியை யமுனா டெலிபோனில் கேட்ட

> "முனிவர் உன்னை நாயா மாற்றிச் சாபம் கொடுத்தாரே! என்ன ஆச்சு?"
>
> "பெரிய முனிவர்கிட்ட போய், சாபத்துக்குத் தடை உத்தரவு வாங்கிட் டேன்!"
>
> — எஸ். ஸ்ரீவித்யா

தும் மறுமுனையில் இருந்த சரளா குரலில் வியப்பைக் காட்டினாள்.

"அப்படியா... எப்போ....?"

"எனக்குச் சரியா தெரியலை. மதுராந்த கத்திலிருந்து ஒரு இன்ஸ்பெக்டர் வந்து என்கிட்ட என்கொய்ரி பண்ணிட்டுப் போனார். அப்படியே நடுங்கிப் போயிட்டேன். இருதயம் இன்னும் வெடிக்கிற மாதிரி அடிச்சுகிட்டு இருக்கு..."

"உன்கிட்ட எதுக்காக அந்த இன்ஸ்பெக்டர் வரணும்...?"

"என் போட்டோ அந்த லீலாகிருஷ் ணன்கிட்ட இருந்திருக்கு. அவன் என்னை லவ் பண்ணியிருக்கான்."

"என்னடி உளர்றே...?"

இன்ஸ்பெக்டர் பால்பாண்டியன் வந்து பேசிவிட்டுப் போன விவரங்களை யமுனா இரண்டு நிமிஷம் செலவழித்துச் சுருக்கமாய்ச் சொல்லி முடிக்க, சரளா அரண்டு போனாள்.

"ஏய் யமுனா... என்னடி இப்படியொரு சிக் கல்ல போய் மாட்டிக்கிட்டே... அந்த லீலா கிருஷ்ணனை மீறிப்போனா நீ ரெண்டு தடவை சந்திச்சு பேசியிருப்பியா...?"

"அவ்வளவுதான்...! நீ அறிமுகப்படுத்தின போது ஒரு தடவை. அதுக்கப்புறம் பஸ்

ஸ்டாப்ல ஒரு தடவை. ரெண்டு தடவைக்கும் சேர்த்து மொத்தமா ஒரு பத்து நிமிஷம் பேசியிருப்பேன். இதுல காதல் எப்படி வந்ததுன்னு தெரியலை."

"முட்டாள்தனமான காரியம் பண்ணியிருக்கான். செத்துப் போக ஆசைப்பட்டா சத்தம் இல்லாமே காரியத்தை முடிச்சுக்க வேண்டியதுதானே...?"

"இப்ப எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை சரளா..."

"எங்கிருந்து பேசிட்டிருக்கே?"

"என்னோட ரூம் அட்டாச்ட் டாய்லெட்டுக்குள்ளேயிருந்து கார்ட்லஸ்ல பேசிட்டிருக்கேன்."

"உன்னோட கணவர்?"

"கீழே குளிக்கப் போயிருக்கார். அத்தையும் மாமாவும் சௌம்யாவோட மேரேஜ்



இன்விடேஷன்களை எடுத்துக்கிட்டு லலிதாம்பிகை கோயிலுக்கு பூஜை பண்ணப் போயிருக்காங்க."

"அப்படீன்னா இன்ஸ்பெக்டர் வந்துட்டுப் போனது உன் வீட்ல யாருக்கும் தெரியாது...?"

"தெரியாது...! அது ஒண்ணுதான் இப்போதைக்குக் கிடைச்சிருக்கிற சின்ன ஆறுதல்."

"யமுனா...! நீ ஒரு தப்பு பண்ணிட்டே?"

"என்ன...?"

"லீலாகிருஷ்ணனைத் தெரியாதுன்னு ஏன் சொன்னே?"

"தெரியும்னு சொன்னா பிரச்னை வருமே?"

"இப்ப மட்டும் பிரச்னை இல்லேன்னு நினைக்கிறியா...?"

"பிரச்னைதான்..."

"எப்படி சமாளிக்கப்போறே...?"

"அது புரியாமேதான் உனக்கு போன் பண்ணியிருக்கேன். நீதான் இதுக்கு ஒருவழி சொல்லணும். ஏன்னா லீலாகிருஷ்ணனை எனக்கு அறிமுகப்படுத்தினது நீதான்...."

சரளா சில விநாடிகள் யோசித்துவிட்டு கேட்டாள். "இன்ஸ்பெக்டர் பால்பாண்டியனைப் பஞ்சமுக ஆஞ்சநேயர் கோயிலுக்கு எத்தனை மணிக்கு வரச் சொல்லியிருக்கே?"

"பத்து மணிக்கு..."

"அப்ப நானும் வர்றேன்."

"வந்து?"

"அந்த இன்ஸ்பெக்டர்கிட்ட நான் பேசறேன்..."

"எனக்கு லீலாகிருஷ்ணனைத் தெரியாதுனு சொல்லியிருக்கேன். நீ வந்து தெரியும்ன்னு சொல்லிடாதே... அதுக்கப்புறம் அந்த இன்ஸ்பெக்டர் நான் எது சொன்னாலும் நம்ப மாட்டார்."

"அது எனக்குத் தெரியாதா என்ன? உனக்கு ஆதரவாத்தான் நான் பேசப்போறேன். இந்த நிமிஷத்திலிருந்து நம்ம ரெண்டு பேருக்குமே லீலாகிருஷ்ணனைத் தெரியாது. சரியா?"

"சரி..! பத்து மணிக்கெல்லாம் ஆஞ்சநேயர் கோயிலுக்கு வந்துடு. லேட் பண்ணிடாதே..."

"ஒன்பதே முக்காலுக்கு நான் அங்கே இருப்பேன்."

"சரளா...! நீதான் எனக்கு கதி...! நான் மருமகளா வாழ்க்கைப்பட்டிருக்கிற குடும்பத்தைப் பத்தி உனக்குத் தெரியும். அடுத்த மாசம் சௌம்யாவோட கல்யாணம் வேற இருக்கு."

"உன்னோட நிலைமை எனக்குப் புரியுது. நீ இப்படி வீட்ல இருந்துகிட்டு டெலிபோன் பண்றதுகூட சரியில்லை. வெளியே வந்து போன் பண்ணியிருக்கணும்."

"பதற்றத்துல எனக்கு ஒண்ணும் தோணலை சரளா."

"சரி... கோயில்ல மீட் பண்ணலாம். நீ வீட்ல சகஜமா பேசிட்டிரு..."

"ம்...." டெலிபோன் பேச்சை முடித்துக் கொண்டு டாய்லெட்டிலிருந்து வெளிப்பட்டாள் யமுனா.

அறையில் யாரும் இல்லை.

மாடிப்படிகளில் வேகமாய் இறங்கி கீழே வர- அகில் குனித்து தலை துவட்டியபடி எதிர்பட்டான்.

"யமுனா...! டிபன் ரெடியா...?"

"நீங்க ட்ரெஸ் பண்ணிட்டு வர்றதுக்குள்ளே ரெடியாயிடும்."

யமுனா சொல்லிக் கொண்டே நகர முயன்றாள்.

"யமுனா!"

நின்றாள்.

"என்னங்க...?"


அகில் தலைதுவட்டியபடியே யமுனாவைக் கீழ்ப்பார்வை பார்த்தான்.

"எத்தனை நாளா இந்தப் பழக்கம்?"

யமுனா திகைக்க, அகில் முகம் மாற, தொடர்ந்தான். "எந்தப் பழக்கம்ன்னு கேட்கிறியா...? டாய்லட்ல போய் ஒளிஞ்சுக்கிட்டு போன் பேசற வழக்கத்தைச் சொன்னேன்."

(தொடரும்)





• நேருவுடன் காந்தி

தமிழருடன் ஒன்றிய தேசத் தந்தை!

அண்ணல் காந்தியடிகளுக்கு சத்தியாகிரஹம் என்ற சிந்தனையே தமிழகத்தில் அவர் இருந்தபோதுதான் உதயமாயிற்று என்பது பலருக்கும் தெரிந்திருக்கும். தமிழர்களுக்கும் அண்ணலுக்கும் வேறு பல விதங்களிலும் இருந்த நெருக்கமான தொடர்பை ஜனவரி 30 சர்வோதய தினத்தையொட்டி இங்கு நினைவுகூர்கிறார் தமிழகத்தின் முந்நாள் அமைச்சர் க. ராஜாராம்.

கடந்த ஐம்பத்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நாம் சுதந்திரக் காற்றை சுவாசித்து வருகிறோம் என்றால் அந்தப் பிராணவாயு அண்ணல் காந்தியடிகள் பெற்றுத் தந்தது. இந்த நாட்டின் குடிமகன் ஒவ்வொருவரும் இதனைத் தனது ஒவ்வொரு செயலின் போதும் நினைவுகூர்ந்து, அச்செயல் காந்தியத்துக்கு உகந்ததா என்று எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறான்.

அண்ணலின் பொது வாழ்க்கைப் பயணம் தென்னாப்பிரிக்காவில் தொடங்கியது என்பது நர்ம் அறிந்ததே. நிறவெறி கொண்ட வெள்ளையன் ஒருவன், தனக்கு இணையாக ஒரு கறுப்பு நிறத்தவன் முதல் வகுப்பில் ரயில் பயணம் செய்வதா? என்ற ஆத்திரத்துடன், இடையில் ஒரு ரயில்வே ஸ்டேஷனில் ரயில் நின்ற போது காந்தியைப் பிடித்து இழுத்து வெளியேற்றினான். அந்த நிகழ்ச்சிதான் எந்த நோக்கத்தோடு தென்னாப்பிரிக்கா வந்தாரோ அந்தக் காரியத்தையே ஒதுக்கி விட்டு, அந்த நாட்டில் அடிமைகளாக வாழ்ந்து வந்த மக்களுக்குச் சுதந்திர உணர்வையும் சுயமரியாதை

க. ராஜாராம்

யையும் ஊட்டுவதே முக்கியப் பணியாக காந்தியை மேற்கொள்ளச் செய்தது.

அந்த நாட்டில் இதன்பொருட்டு அவர் தொடங்கிய போராட்டங்களுக்குப் பலரும் ஆதரவு தந்தபோதிலும் அவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுடன் பழகிய மகாத்மாவுக்குத் தமிழர்களின் மொழி, மற்றும் பண்பாட்டினை அறிந்து கொள்ள ஆர்வம் ஏற்பட்டது. அதிலும் தில்லையாடி வள்ளியம்மை தமக்காகத் தியாகம் செய்து உயிர் நீத்ததும் தமிழ் மக்கள் மீது அவருக்கு அளவு கடந்த அன்பு உண்டாயிற்று. இதுபற்றி அண்ணலே எழுதுகிறார்.



* சரோஜினி நாயுடுவுடன்... ஓரத்தில் கஸ்தூரிபாய்

"இந்தப் போரில் தமிழ் மக்கள் துணைபுரிந்தது போல் வேறு எந்த இந்தியரும் உதவவில்லை. அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக தமிழ் நூல்களைப் பயில வேண்டும் என்று நினைத்தேன். தமிழ் பயில்வதில் ஒரு மாதம் ஊக்கத்துடன் இருந்தேன். மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனம் கவரும் இனிய மொழி. தமிழ் மக்களில் பண்டை நாளிலும் இன்றும் கூட பல அறிஞர்கள் இருந்தனர், இருக்கின்றனர், என்பது அம்மொழியின் அமைப்பினாலும் அது உணர்த்தும் உன்னதக் கருத்துக்களாலும் எனக்குத் தெரியவந்தது. இந்தியன் என்ற ஓரினம் இந்தியாவில் உருவாக வேண்டுமானால் அதன் தொடக்கம் சென்னைக்கு அப்பால் தமிழனிடம்தான் ஏற்படும்."

தமிழகத்தில் காங்கிரஸ் பேரியக்கத்தைப் பிரசாரத்தின்



* காந்தி - நேதாஜி

மூலம் பரப்பிய பலருள் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் ஒருவர். 1943ம் ஆண்டில் அவர் காந்தியடிகளைக் குறித்து இவ்விதம் எழுதினார் :

"காந்தியடிகளுக்கு மீண்டும் பிறப்பு உண்டேல் அவர் தமிழ் நாட்டில் பிறப்பார் எனும் உறுதி எனக்கு ஏற்படுகிறது. ஆண்டவனே, காந்தியடிகளைத் தமிழ்நாட்டில் பிறக்குமாறு செய்வித்து அவரைத் தமிழராக்கி அவர் வாயிலாக எனது அருமைக் கன்னி மொழியை வளர்க்கத் திருவருள் செய்க."

திரு.வி.க. இவ்விதம் எழுதியது, அண்ணலுக்குத் தமிழ் மொழியிடமும் தமிழரிடமும் இருந்த ஈடுபாட்டினை நன்கு அறிந்திருந்ததால்தான்.

காந்திஜி, ஒவ்வொரு இந்தியனுக்கும் அவரவர் தாய்மொழியின் மீது பற்றும் பாசமும் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். தமது சுயசரிதை நூலை தமது தாய்மொழியான குஜராத்தியில்தான் எழுதினார். பின்னரே அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். 'குஜராத் வித்யா



• தண்டியாத்திரையில் சரோஜினி நாயுடுவுடன்

பீடம்' என்ற பெயரில் ஒரு பல்கலைக் கழகம் உருவாக்கினார். அதில் எல்லாப் பாடங்களும் குஜராத்தியில் போதிக்கப்பட்டன. ஒரு பாட மொழியாக ஆங்கிலத்தைக் கற்பிக்கவும் ஏற்பாடு செய்தார்.

மகாத்மா காந்தி உலா வராத பகுதி அநேகமாக இந்தியாவில் எதுவும் இல்லை. 17.10.1927ல் அவர் தூத்துக்குடி வந்திருந்தார். அங்கு திருக்குறள் மீது தாம் கொண்டிருந்த பற்றினை வெளியிட்டார்.

"திருக்குறளைப் பற்றிச் சில வரிகள் உங்கள் வரவேற்புரையில் மின்னுகின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்னரே நான் தமிழ் பயிலத் தொடங்கினேன். அதற்கு முக்கியக் காரணம் திருக்குறள் மூலத்தை நேரடியாகப் படிக்க வேண்டும் என்ற ஆசைதான். தமிழ் மொழியில் புலமை பெற ஆண்டவன் எனக்கு அருளவில்லை. அதனால் நான் அடையும் வருத்தம் அளவிட முடியாதது."

மயிலாடுதுறைக்கு மகாத்மா 1915ம் ஆண்டு வந்திருந்த போது அவருக்கு ஒரு வரவேற்பிதழை ஆங்கிலத்தில் எழுதி அளித்தார்கள். இதையொட்டி பின்வருமாறு காந்திஜி பேசினார் :

வரவேற்பு ஆங்கிலத்தில் அமைந்திருப்பதைக் காண்கிறேன். இந்திய தேசிய காங்கிரஸில், 'சுதேசி தீர்மானம்' நிறைவேறியுள்ளது. ஆங்கில மொழிக்கு எதிராக நான் எதையும் கூற நினைக்கவில்லை. ஆனால் நீங்கள் உங்கள் நாட்டு மொழியைக் கொன்று அதன் சமாதி மீது ஆங்கிலத்தை நிலவச் செய்தீர்கள் என்றால் நன்னெறியில் சுதேசியத்தை வளர்த்தவர் ஆக மாட்டீர்கள். எனக்குத் தமிழ் மொழி தெரியாதே என்பதாக நீங்கள் கருதியிருந்தால் அந்த மொழியைப் பயிலுமாறு என்னைக் கேட்க வேண்டும். எனக்கு அதனை கற்பிக்க முன்வர வேண்டும். இனிய தமிழ் மொழியில் அறிக்கை அளித்து அதனை மொழிபெயர்த்து எனக்கு உணர்த்தியிருப்பீர்களெனில் உங்கள் கடமையைச் செய்தவராவீர்கள்."

இந்தியாவில் உள்ள பல்வேறு மொழியினரும் அவரவர் தாய்மொழி மீது பற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்பதை இதைவிட யார் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்க முடியும்?

தமிழ் மக்களுடன் ஒன்றிப் போனவர் காந்தியடிகள். தமிழக விவசாயிகள் இடுப்புக்குக் கீழே மட்டுமே அரையாடை அணிந்திருப்பதைப் பார்த்த பிறகே தாமும் வாழ் நாள் முழுவதும் அரையாடை மட்டுமே உடுத்தத் தீர்மானித்தார் என்பதை நினைக்கும்போதெல்லாம் ஒவ்வொரு தமிழனும் மனம் நெகிழ்ந்து கைகூப்ப வேண்டும். தமிழ்நாட்டில் சென்னையிலிருந்து மதுரை வரை ராஜாஜியுடன் சேர்ந்து பகல் பொழுதில் ரயில் பிரயாணம் செய்த போதுதான் உழவர் பெருமக்களைப் பார்த்துவிட்டு காந்திஜி இந்த முடிவுக்கு வந்தார். அன்றிரவு மதுரையில் கருமுத்து தியாகராஜன் வீட்டில் தங்கியிருந்தார். இரவெல்லாம் தூக்கமின்றி கழித்து விட்டு, மறுநாள் காலை வேட்டியும் துண்டுமாக உடை மாறி, ராஜாஜியை அழைத்து, "இனிமேல் இதுதான் என் உடை" என்றார். அதன் பிறகுதான் அவருக்கு மனநிம்மதி ஏற்பட்டது.

எத்தனையோ தமிழர்கள் – தலைவர்கள், தொண்டர்கள் – காந்திஜிக்கு சுதந்திரப் போராட்டத்தின் போது தோள் கொடுத்து உதவினார்கள். சுதந்திர இயக்கம் வெற்றி பெற பாடுபட்டார்கள்.

அது ஒருபுறமிருந்தாலும் கடைசி மூச்சு வரை தமிழக விவசாயியின் எளிய உடையையே காந்திஜி அணிந்திருந்தார் என்பதும், தமிழ் மொழியிடம் பெருமதிப்பும் ஈடுபாடும் கொண்டிருந்தார் என்பதும் நமக்கு தனியானதொரு பெருமையளிப்பதாகும் அல்லவா!

பித்ர்களுக்கு சிராத்தம் ஏன்? அவசியம் செய்ய வேண்டும்



சிராத்தம் போன்ற சடங்குகள் உண்மையில் பிராண ஜீவனுக்காகவே செய்யப்படுகின்றன. ஜீவனுடைய பிராண அதிர்வுகள் அதைப் பிராண லோகங்களுடன் அல்லது பூலோகத்துடன் தளைப்படுத்துகின்றன. அந்த அதிர்வுகளை நீக்குவதற்கு இந்த சடங்குகள் ஜீவனுக்கு உதவுகின்றன. இதனால் ஜீவன் சைத்திய சாந்தத்தில் ஓய்வெடுக்க விரைவாகச் செல்வது இயலும்.

—ஆதாரம் வைகறை 1991-92



இத்துடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்.

திருமண வைபவங்களுக்கு:

சீர் முறுக்கு, சீர் அதிரசம், திரட்டுப் பால், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய், அப்பம் வகைகள் முதலியவைச் செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

நெ. 24, 2வது
மெயின் ரோடு
காந்தி நகர்
அடையாறு
சென்னை - 20
போன்: 4915662
4914213

மெகா சீரியல் டிஸ்கஷனில் ஜோக்!

"இது பெரிய இடம். ஐடியா சொல்கிறேன் பேர்வழி என்று வம்பை வாங்கிக் கொண்டு வராதே. இருக்கும் இடத்தை விட்டு நகரக் கூடாது" என்று ஆசிரியர் போட்ட மிரட்டலில் நான் என் வாலைச் சுருட்டிக் கொண்டு வாயைப் பொத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். அந்தப் பெரிய வெள்ளைக் கட்டடத்தில் நான் இருந்த அறைக்குப் பக்கத்து அறையில் பரபரப்பாக ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் என்னைப் பார்க்காத சமயத்தில் நழுவிப் போய் அந்தக் கூட்டம் நடந்த இடத்துக்குச் சென்று உட்கார்ந்து கொண்டேன்.

கூட்டம் ஆரம்பித்த ஒரு மணி நேரம் வரை அவர்கள் எதைப் பற்றி விவாதிக்கிறார்கள் என்று சத்தியமாகப் புரியவில்லை. நாடாளுமன்றத்தில் பட்ஜெட் வாசிக்கப்படும்போது தூங்கி வழியும் எம்.பி.யைப் போல உட்கார்ந்திருந்தேன்.

"ஏய் லூசு, நீ பாட்டுக்குத் தூங்கிட்டு இருக்கியே, நாங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கோம் தெரியுமா?"

"சொல்லுங்க சார்."

"அடுத்த மாசம், டீ.வி.ல ஆரம்பிக்கப் போற மெகா சீரியலைப் பத்தி சீரியசா டிஸ்கஸ் பண்ணிக்கிட்டு இருக்கோம்."

அதற்குப் பிறகுதான் நிமிர்ந்து உட்கார்ந்து நடப்பதைக் கவனிக்க ஆரம்பித்தேன்.

"சார், முதல்ல பேர் விவகாரத்தை முடிவு பண்ணிருவோம். 'அன்பைத் தேடி அலையும் அபலைப் பெண்' என்று வச்சிரலாமா?"

தயாரிப்பாளர் வெகுண்டு எழுந்தார்.

"யோவ், பணம் போட்டு எடுக்கற சீரியல்யா இது. நீ என்ன ஆல் இண்டியா ரேடியோ டிராமாக்குப் பேர் வக்கற மாதிரி வச்சிக்கிட்டு இருக்க? சின்னதா பேரு சொல்லுய்யா."

"ப்ரொட்யூசர் சார். இன்னிக்கு தேதிக்கு உறவுமுறை பேர் வச்சாத்தான் சீரியல் ஒழுங்காப் போகும். அம்மா, அப்பா, பெரியப்பா, சித்தி எல்லாம் வச்சிட்டாங்க. பேசாம 'கொழுந்தன்'னு வச்சிட்டா என்ன?"

"என்ன நியூமராலஜிஸ்ட் சார், கொழுந்தன்னு பேர் வச்சிருவோமா?"

அவர் ஏதோ கணக்கெல்லாம் போட்டுவிட்டுச் சொன்னார்.

"சீரியல் வெற்றியடையணும்னா பேர் மூணு எழுத்துக்கு மேல போகக் கூடாது. அதுவும் நடு எழுத்து 'த்'தாத்தான் இருக்கணும். அந்த மாதிரி ஒரு பேரு சொல்லுங்க."

எல்லோரும் நிஜமாகவே யோசிக்கத் தொடங்கினார்கள்.

"சார், மூணு எழுத்துதான் வரணும், அதுவும் நடு எழுத்து 'த்'னுதான் இருக்கணும்னா, பேசாம 'பெரியப்பா'ன்னு வச்சிருவோம்."

தன்னுடைய சூப்பர் இண்டெலிஜென்சைக் காட்டியவர் அந்த சீரியலின் இயக்குநர். தலையில் அடித்துக் கொண்டார் ப்ரொட்யூசர்.

அந்தப் புத்திசாலி டைரக்டரின் முகத்தை எங்கோ பார்த்திருக்கிறேனே! அதற்கு மேல் என்னால் வாயை மூடிக் கொண்டு இருக்க முடியவில்லை.

"டைரக்டர் சார், நீங்கதானே மூன் டீ.வியோட கோடானு கோடீஸ்வரன் நிகழ்ச்சில, 'தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை – சரியா, தவறாங்கற கேள்விக்குத் தவறுன்னு சொல்லி எங்களை எல்லாம் திணற அடிச்சது?"

"ஆமா. பரவாயில்லையே, நல்லா ஞாபகம் வச்சிருக்கீங்களே?" என்று என்னைப் பார்த்து வழிந்தார்.

"யோவ் உன்னை இந்த லூசு காலை

வாரிக்கிட்டு இருக்கு. அதுல உனக்குப் பெருமை வேற... ம்.. மூணு எழுத்து. நடு எழுத்து 'த்'. தம்பி நீ சொல்லு, பாப்போம்."

தயாரிப்பாளர் கேட்டது டீ கொண்டு வரும் பையனிடம்.

"அத்தை" பளிச்சென்று சொன்னான் அந்தப் பையன்.



பெயர் முடிவானவுடன் 'அத்தை' சீரியலின் தயாரிப்பு வேலைகள் யந்திரகதியில் நடக்கத் தொடங்கின.

அந்த சீரியலுக்குத் திரைக்கதை எழுதுபவர் பேசினார்.

"அந்த அத்தை உண்மையிலேயே ரொம்ப பாசமானவங்க. அவங்களுக்குத் தன் குழந்தைகளைவிட தன்னோட மருமகப் பிள்ளைங்ககிட்டதான் பாசம் ஜாஸ்தி."

"போதும். போதும். இப்போதைக்கு இத வச்சி முதல் நாத்திநாப்பது எபிசோடை எடுத்துரலாம்." - டைரக்டர் நம்பிக்கையாகச் சொன்னார்.

"கதைல ஒரு திருப்பம், ஒரு ரகசியம் இப்படி ஏதாவது இருக்கணுமே?"

"சார், அது இருக்கு. அந்த அத்தையோட மருமகப்பிள்ளைங்கதான் அவங்களோட உண்மையான குழந்தைங்க. அவங்க குழந்தைங்கதான் அவங்களோட உண்மையான மருமகப்பிள்ளைங்கன்னு சொல்லிருவோம்."

"என்னய்யா சொல்ற? உண்மையான அத்தைதான் மருமகக் குழந்தையா?"

ப்ரொட்யூசர் தானும் குழம்பி எங்களையும் குழப்பினார்.

"எல்லோரும் தலை முடியப் பிச்சிப் பாங்க."

"நல்லதாப் போச்சு. எல்லாரும் தலைமுடி திரும்பி வளர நல்ல ஹேர் ஆயிலைத் தேடுவாங்க. இதவச்சி ஒரு பெரிய ஹேர் ஆயில் கம்பெனிய ஸ்பான்சர் பண்ணச் சொல்லிரலாம்." - இது நான் கொடுத்த ஐடியா.

இப்போது டைரக்டர் பேச ஆரம்பித்தார்.

"சார் இந்தக் காலத்துல என்னதான் பாசத்தக் கொட்டினாலும் சாதாரண அத்தைன்னா மக்கள் ஏத்துக்க மாட்டாங்க. அதனால நம்ம சீரியல்ல அத்தைய ஒரு பெரிய ஐ.ஏ.எஸ். ஆபீசரா காமிச்சிட்டா என்ன?"

"நாம வித்தியாசமா அத்தைய பெரிய ஹார்ட் சர்ஜனா காமிச்சிரலாம். அதுல உருக்கமான வசனத்துக்கு நிறைய ஸ்கோப் இருக்கு. 'இதயத்த அறுத்து சிகிச்சை பண்ற என்னோட இதயத்தையே அறுத்திட்டியேப்பா'ன்னு ஒரு வசனம் அத்தை பேசற மாதிரி வச்சிரலாம். பாக்கற லேடீஸ் எல்லாம் விம்மி விம்மி அழுவாங்க. என்ன சொல்றீங்க?"

"சரிதான். ஆனா, லேடீஸ் மத்தில இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆபீசர் சென்டிமென்ட் நல்லா வொர்க் அவுட் ஆகுமேன்னு பாத்தேன்."

"அப்போ அந்த அத்தையோட ஒரு இரட்டை - ட்வின் சிஸ்டர் - ஐ.ஏ.எஸ். ஆபீசர்னு சொல்லிருவோம். அவங்களப் பத்தி ஒரு ஃப்ளாஷ் பேக் வச்சிரலாம். அந்த



ஐ.ஏ.எஸ். ஆபீசர் ரொம்ப நேர்மையானவங்க. அவங்கள ஒரு வில்லன் கூட்டம் கொலை பண்ண வரமாதிரி காமிச்சிரலாம். அந்தக் கூட்டத்துல இந்த ஹார்ட் சர்ஜன் அத்தை மாட்டிக்கறாங்க. அப்போ அந்த வில்லன் கள்ள ஒருத்தனுக்கு ஹார்ட் அட்டாக் வந்து...''

''யோவ், எல்லாக் கதையையும் இப்பவே சொல்லிராத. எவனாவது காப்பி அடிச்சிரப் போறான். ஏதாவது ஒரு எப்பிசோட் மட்டும் சொல்லு, கேப்போம்.''

"அந்த எபிசோட் ஆரம்பிக்கும்போது போன் மணி அடிக்குது. அந்த வீட்டு வேலைக்காரி எடுக்கறா. 'யாரு வேணுங்க? அத்தையம்மாவா? இதோ கூப்பிடறேன்'னு போனை வச்சிட்டுப் போறா. அப்போ சமையல்காரர் அந்தப் பக்கமா வராரு. 'அத்தையம்மாவுக்குப் போன்'னு வேலைக்காரி சொல்றா. உடனே சமையல்காரர் நேரே உள்ள போய் 'அத்தையம்மா, உங்களுக்குப் போன்.' அப்படின்னு சொல்றாரு. 'எனக்கா போன்?'னு கேக்கறாங்க அத்தையம்மா. அப்புறம் மெதுவா நடந்து வந்து போனை எடுக்கறாங்க. 'ஹலோ நான்தான் அத்தையம்மா பேசறேன். நீங்க யாரு? உங்களுக்கு என்ன வேணும்?' எதிர்முனைல யார் பேசறாங்கன்னு இந்த எபிசோட்ல சொல்லப் போறதில்ல. ஆனா அத்தையம்மா முகம் திடீர்னு பேயறைஞ்ச மாதிரி ஆயிருது. 'என்னது அப்படியா? நிஜமாவா? என்னால நம்பவே முடியலையே'ன்னு சொல்றாங்க. அத்தையம்மா கண்ணுல கண்ணீர் தேங்கி நிக்கிறத க்ளோசப்ல காமிக்கறோம். அப்போ பேக்க்ரவுண்டுல ஹரிஹரன் 'அத்தையம்மா...'ன்னு உருக்கமா பாடறாரு. அந்தக் காட்சிய ஃப்ரீஸ் பண்ணி 'தொடரும்'னு ஸ்லைட் காமிச்சிடறோம்."

"ஒரே எபிசோட்ல திகில், சஸ்பென்ஸ், உருக்கம் எல்லாம் வந்துருச்சி சார்."

"சார், அப்புறம் ஒரு கொடுமைக்கார வில்லி கேரக்டர் ரொம்ப முக்கியம். அவங்க அத்தைய கொடுமைப்படுத்திக்கிட்டே இருக்கணும். அவங்க அடிக்கடி 'அத்தே நீ செத்தே'ங்கற மாதிரி வசனம் பேசிக்கிட்டே இருக்கணும்."

"சரி, அடுத்து ஒவ்வொரு எபிசோடும் எவ்வளவு மணி நேரம், அதுல விளம்பரம் எவ்வளவு, சீரியல் எவ்வளவுன்னு ப்ளான் பண்ணிருவோம்."

''சார், அந்த டீவில நமக்கு திங்கள் கிழமைலேந்து வெள்ளிக் கிழமை வரைக்கும் ராத்திரி ஒன்பது மணிலேந்து பத்து மணிவரைக்கும் கொடுத்திருக்காங்க.''

"டைட்டில் சாங் பத்து நிமிஷம். நடுவுல இருபது விளம்பர இடைவேளை விட்ருவோம். ஒவ்வொண்ணும் ரெண்டு நிமிஷம். அப்புறம் ஒவ்வொரு எபிசோட் முடிவிலயும் ஒரு போட்டி அறிவிக்கணும். முந்தின எபிசோட் போட்டி முடிவச் சொல்லணும். அதுக்கு அஞ்சு நிமிஷம். மிச்சம் இருக்கற அஞ்சு நிமிஷத்துல கதை நகர்ந்தாப் போதும்.''

"டைட்டில் சாங் ஒண்ணு போடணும். ஹரிஹரனையோ, உண்ணிகிருஷ்ணனையோ வச்சிப் பாடச் சொல்லிரலாம். 'அத்தை வெங்காயம் உரிக்கும் போது'ன்னு ஆரம்பிச்சு ஒரு பல்லவி, பத்து சரணம் போட்டிருங்க. ம்யூசிக் டைரக்டர் சார், நீங்க போடற ட்யூன்ல அப்படியே கேக்கறவங்க கண்ல அந்த வெங்காயத்தக் கொண்டு வந்துரணும், சரியா? ட்யூன் ரொம்ப ஸ்லோவா இருக்கணும் பாத்துக்கங்க.''

''இந்த நடிக நடிகைகள் விஷயத்துல

எனக்கொரு ப்ராப்ளம் இருக்கு, ப்ரொட்யூசர் சார்." - டைரக்டர் கவலையுடன் ஆரம்பித்தார்.

"எல்லாரும் முதல்ல எனக்கு காசே வேண்டாம். சும்மா ஓசியாவே நடிச்சிடறேன்னு வராங்க. ஆனா முதல் பத்து எபிசோட் ஆனவுடனே பாப்புலர் ஆயிடறாங்க. வாரப் பத்திரிகைல அவங்க பேட்டி வந்துருது. அப்பறம் சம்பளம், கன்வேயன்ஸ், வந்து போக கார்னு கேக்க ஆரம்பிச்சிராங்க. எப்படி சமாளிக்கறதுன்னே தெரியல."

"அதுக்கு இந்த லூசு சொல்ற ஐடியாவக் கேளுங்க. இந்த சீரியல்ல நடிக்கற ஒவ்வொரு நடிகர் - நடிகையும் செத்துப் போற மாதிரி ஒரு சீன் எடுத்து வச்சிக்கங்க. பின்னால ஏதாவது தகராறு பண்ணாங்கன்னா கதைல அவங்கள சாகடிச்சிரலாம்."

"சபாஷ்! நல்ல ஐடியாவா இருக்கே. கூடவே எல்லா ஆக்டர்சும் மொத்தமா சாகற மாதிரி ஒரு ஆக்சிடென்ட் சீனையும் எடுத்து வச்சிரலாம். ஒரு வேளை எல்லா ஆக்டர்சும் சேர்ந்து சினிமால இருக்கிற மாதிரி நடிகர் சங்கம் அமைச்சிட்டாங்கன்னா. கதைப்படி எல்லோரையும் காலி பண்ணிட்டுப் புதுமுகங்களைப் போட்டு எடுத்துரலாம்."

எல்லாரும் கூடிப் பேசும் பொழுது எவ்வளவு வேகமாகப் பிரச்னைகள் தீர்கின்றன! அப்போதுதான் திரைக்கதை எழுதுபவர் பக்கத்தில் பார்த்தேன். ஆறு அடி உயரத்துக்குப் பழைய நியூஸ் பேப்பர்களை அடுக்கி வைத்திருந்தார்.

"எதுக்கு சார் இவ்வளவு நியூஸ் பேப்பர்? செட் போடவா?"

"எல்லாம் இருபது வருஷத்து தினத்தந்தி பேப்பர். அதுல கன்னித்தீவுன்னு ஒரு படக்கதை வந்துச்சில்ல. அதுதான் இன்னிக்கு வர எல்லா மெகா சீரியலுக்கும் முன்னோடி. இப்பக்கூட ஒரு எப்பிசோடுக்கு என்ன பண்றதுன்னு தெரியலைன்னா கன்னித்தீவை ரெஃபர் பண்ணிப்போம்."

"காமெடிக்கு என்ன பண்றது சார்?"

என்னால் சிரிப்பைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

"டைரக்டர் சார், காமெடிக்குத் தனியா ஒண்ணும் பண்ண வேணாம். இப்ப நடந்ததே இந்த டிஸ்கஷனை அப்படியே படம் பிடிச்சி போட்டீங்கன்னா வேற காமெடியே தேவையில்லை."

"ஏய், யாரது? இந்த லூச வெளில துரத்து."

— வீ.ஆர்.




"ஒரு வேலையும் செய்யாம வெட்டிப் பொழுது போக்கறதில் எதிர்வீட்டுக்காரன் கில்லாடி!"

"உனக்கு எப்படித் தெரியும்?"

"நான்தான் காலைல இருந்து அவனையே பார்த்திட்டு உட்கார்ந்திருக்கேனே"

– எஸ். ஸ்ரீவித்யா



"தன்னோட கச்சேரியைக் கேட்காமல் கூட்டம் கேன்டீனிலேயே இருந்தும் பாகவதருக்குக் கோபமே வரலியா?"

"ஆமாம்– கேன்டீன் கான்ட்ராக்டையும் பாகவதரே எடுத்திருக்காராம்."

– மங்கை



"தலைவர் தன்னோட சுய சரிதையைப் புத்தகமா வெளியிட்டாரே, என்ன ஆச்சு?"

"சிறந்த 'கிரைம்' நாவலுக்கான பரிசு கொடுத்துட்டாங்க!"

– வந்தவாசி பா. ஜெயக்குமார்

நில், கவனி, வெற்றிகொள்!

கல்கி - ஸ்ரீ கிருஷ்ண ஸ்வீட்ஸ்®

இணைந்து வழங்கும்



இளைஞர் திருவிழா!

அன்புள்ள வாசகர்களே!

7.1.2001 அன்று பாரதிய வித்யா பவன் அரங்கத்தில் நடந்த 'எனக்கு நானே முதலாளி' என்ற சுயதொழில் குறித்த கருத்தரங்கு அமோக வரவேற்பு பெற்றதைக் கண்கூடாகப் பார்த்தும், நமது கல்கி இதழில் படித்தும் இருப்பீர்கள்.

''வாழ்க்கையில் ஒருவர் வெற்றி கொள்வதற்கு அடிப்படையான தேவை பணம் அல்ல, மனம்'' என்றார் டி.எஸ்.ராகவன் தமது உரையில். அதை உறுதிப்படுத்தும் வகையில் நமது அடுத்த கருத்தரங்குக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் தலைப்பு

'மனவளம்'

நாள் : 3.2.2001 சனிக் கிழமை.
இடம் : எஸ்.ஆர்.ஜி. அரங்கம், டி.ஜி. வைஷ்ணவா கல்லூரி, அரும்பாக்கம்
நேரம் : மாலை 5.00 மணி.

எழுச்சியுரை ஆற்றுபவர் : **பேராசிரியர் பெரியார்தாசன்**


ஆக்க உரை : **எம்.பி. நிர்மல்**

சென்ற முறை செய்ததுபோலவே எல்லோரும் வந்து பங்கேற்று, கேள்வி - பதில் நேரத்தில் உங்களது சந்தேகங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டு, நிகழ்ச்சியை விறுவிறுப்பாக்கி பயன் பெறுவீர்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

அனுமதி இலவசம்

திரண்டு வந்து பங்கேற்று திருப்தியுடன் திரும்புங்கள்!

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publicati
Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



ஸ்ரீ அன்னபூரணி

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka